விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 02 வியாழக்கிழமை (18.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 243

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# அரசியல் தீர்வு விடயத்தில்

# அரசு மீது நம்பிக்கையுண்டு



## அதனால்தான் நாம் அரசுடன் இணங்குகிறோம் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் புதிய அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், இதனால் தான் தாம் மத்திய அரசுடன் இணங்கி செல்வதாகவும் அபிவிருத்தி நிகழ்வுகளில் கலந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## 6 மாதத்தில் ரூ.100 பில்லியன் இலாபம் – அரசு

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் நூறு பில்லியன் ரூபாயை இலாபமாக பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை தீர்மானங்களை அறி 23ஆம் பக்கம் பார்க்க....

## சுதந்திரமான அரசியல் தீர்வு மூவின மக்களுக்கும் கிடைக்கும்

### பிரதமருக்கு நம்பிக்கை உண்டு என்கிறார் கிரியெல்ல

(முக்கொம்பன்)

எதிர்காலத்தில் புதிய அரசியல் யாப்பின் மூலமாக மூவின மக்களுக்குமானசுதந்திரமான அரசியல் தீர்வு கிடைக்கும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை கொண்டுள்ளார்.



அத்தோடு அனைத்துச் சமூகங்களும் ஒன றிணைவதன் மூலமாகத்தான் நாங்கள் ஒரு தீர்வினைப் பெற முடியும்.


வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கிடையிலானநட்புறவினைக் கட்டியெழுப்ப 23ஆம் பக்கம் பார்க்க....

## யுத்த மனோநிலை மாறவேண்டும்!

(மட்டக்களப்பு)

யுத்தம் நிறைவடைந்து பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் யுத்த மனோ நிலையில் இருந்து அதிகமானவர்கள் இன்னும் மீளவில்லை என மீள்குடியேற்ற புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக 23ஆம் பக்கம் பார்க்க....



# அதனால்தான் நாம் அரசுடன் இணங்குகிறோம் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் புதிய அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், இதனால் தான் தாம் மத்திய அரசுடன் இணங்கி செல்வதாகவும் அபிவிருத்தி நிகழ்வுகளில் கலந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## 6 மாதத்தில் ரூ.100 பில்லியன் இலாபம் – அரசு

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் நூறு பில்லியன் ரூபாயை இலாபமாக பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை தீர்மானங்களை அறி 23ஆம் பக்கம் பார்க்க....

# சுதந்திரமான அரசியல் தீர்வு மூவின மக்களுக்கும் கிடைக்கும்

### பிரதமருக்கு நம்பிக்கை உண்டு என்கிறார் கிரியெல்ல

(முக்கொம்பன்)

எதிர்காலத்தில் புதிய அரசியல் யாப்பின் மூலமாக மூவின மக்களுக்குமானசுதந்திரமான அரசியல் தீர்வு கிடைக்கும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை கொண்டுள்ளார்.



அத்தோடு அனைத்துச் சமூகங்களும் ஒன நிணைவதன் மூலமாகத்தான் நாங்கள் ஒரு தீர்வினைப் பெற முடியும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கிடையிலானநட்புறவினைக் கட்டியெழுப்ப 23ஆம் பக்கம் பார்க்க....

## யுத்த மனோநிலை மாறவேண்டும்!

(மட்டக்களப்பு)

யுத்தம் நிறைவடைந்து பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் யுத்த மனோ நிலையில் இருந்து அதிகமானவர்கள் இன்னும் மீளவில்லை என மீள்குடியேற்ற புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் முதன் முறையாக 23ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
வரலாறு பகுதி




உள்ளே...

### முன்னாள் போராளிகளை பரிசோதிக்க

# அமெரிக்க மருத்துவர்கள் தேவையில்லை - அரசாங்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டதா? இல்லையா? என்பது தொடர்பில் பரிசோதிப்பதற்காக அமெரிக்க மருத்துவர்களின் சேவை எமக்கு அவசிய மில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கிருலப்பனையிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம் பெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் 23ஆம் பக்கம் பார்க்க....

# காணாமல் போனோர் அலுவலகம்; எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

(யாழ்ப்பாணம்)

காணாமல்போனோர் அலுவலகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக காலை 9 மணிக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அத்தோடு காணாமல் போன அலுவலக சட்டம் குற்றமிழைத்தவர்களை பாதுகாப்பதற்காகவே எனவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காணாமல் போனோர் அலுவலகம் குறித்த சட்டமூலத்தின் மூலம் மீண்டும் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

ஏற்கெனவே நல்லிணக்க பொறிமுறை சம்மந்தமாக இலங்கையில், மாவட்ட மற்றும் 24ஆம் பக்கம் பார்க்க....

### யாழ்.பல்கலை மோதல்;

# தமிழ் மாணவர்கள் மூவருக்கு மேல் நீதிமன்றம் அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற மோதலுக்கு காரணமாக இருந்தார்கள் என்று கூறப்படும் தமிழ் மாணவர்கள் மூவருக்கு, யாழ்.மேல் நீதிமன்றம் நேற்றையதினம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

குறித்த மாணவர்கள் மூவரையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அந்த நோட்டீஸில் 24ஆம் பக்கம் பார்க்க....

# கொக்குளாய் விகாரை தொடர்பில் எவருக்கும் தீர்மான அதிகாரம் இல்லை

### அரசாங்க தரப்பில் அமை. ராஜித அறிவிப்பு

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு - கொக்குளாய் பிரதேசத்தில் அமைக்கப்படுகின்ற பௌத்த விகாரை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கோ அல்லது வேறு எவருக்கோ கிடையாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொக்குளாய் பகுதியில் பௌத்த விகாரை அமைக்கப்படுவது தொடர்பில் அப்பிரதேச மக்களும், தமிழ் தேசியக் கூட் 23ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொன்னாலை காட்டுக்கு சில விசமிகள் தீ வைப்பு



(யாழ்ப்பாணம்)

பொன்னாலைக் காட்டுக்கு நேற்று சில விசமிகள் தீ மூட்டியதால் காட்டிலுள்ள பெருமளவான பற்றைகளும் செடிகளும் எரிந்து நாசமாகின. காடு தீப்பற்றி எரிந்ததை அறிந்த கடற்படையினர் உடனடியாக விரைந்து செயற்பட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். பொன்னாலை மேற்கில் பெருமளவான பிரதேசம் சிறிய காடுகளால் சூழப்பட்டிருக்கின்றது.

இந்தக் காட்டில் உள்ள பனைகள், மரங்கள் மற்றும் பற்றைகளுக்கு விசமிகள் அடிக்கடி தீவைப்பதால் பெருமளவான பற்றைகளும் வடலிகளும் பனை மரங்களும் தீயில் எரிந்து நாசமாகி வருகின்றன.

இந்த நிலையில், நேற்று மதியம் இனந் தெரியாத நபர்கள் சிலர் இந்தக் காட்டுக்கு தீ மூட்டியதால், காய்ந்திருந்த புற்றரைகள் ஊடாக வேகமாக பரவிய தீயால் பல ஏக்கர் கணக்கான பற்றைகள் எரிந்து நாசமாகின.

பற்றைகள் தீப்பற்றி எரிந்ததை அவதானித்த கடற்படையினர் மிக வேகமாக செயற்பட்டு தீயை அணைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

சம்பில்துறையில் உள்ள கடற்படை முகாமில் இருந்து பஸ் ஒன்றில் ஏற்றி வரப்பட்ட ஐம்பதுக்கும் அதிகமான கடற்படையினர் தண்ணீரை அங்கு பீச்சியடித்ததுடன் புற்றரைகளினூடாக பரவிய தீயை குழைகளால் அடித்து அணைத்தனர்.

இவர்களின் இரு மணிநேர போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (செ-4,9)


## வற்வரி சட்டமூலம் மீளவும் ஆராய்வு

அரசாங்கம் பெறுமதி சேர் வரி அதிகரிப்பு குறித்த சட்டத்தை மீளவும் வரையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி திருத்தங்களுடன் பெறுமதி சேர் வரி அதிகரிப்பு குறித்த சட்டம் அமைச்சரவையில் விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

உச்ச நீதிமன்றின் தீர்ப்பிற்கு அமைய இதற்கு முன்னதாக பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி அதிகரிப்பு குறித்த சட்டம் ரத்து செய்யப்பட்டது. அமைச்சரவையின் அனுமதியுடன் மீளவும் இந்த சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, குறித்த சட்டம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சில திருத்தங்களை சமர்ப்பிக்க உள்ளது. இந்நிலையில் நேற்றைய தினம பெறுமதி சேர் வரி அதிகரிப்பு குறித்த திருத்தச் சட்டத்திற்கான பரிந்துரைகள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-11)





வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் முருகன் ஆலய மஞ்சத்திருவிழா நேற்றைய தினம் நடைபெற்றது. இதன்போது பக்தர்கள் புடைசூழ மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய மஞ்சத்தில் முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராக எழுந்தருளி வலம் வந்தார். (படங்கள்-உ.சாளின்)

# மரண அறிவித்தல்

திருமதி
## சிவபாதபுண்ணியம் நாகேஸ்வரி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 15 - 11 - 1946 |  | 17 - 08 - 2016 |

அல்வாய் வடக்கு, ஆலங்கட்டடையைப் பிறப்பிடமாகவும் அல்வாய் வடக்கு பாணம்பற்றையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சின்னதம்பி-மகேஸ்வரி குடும்பத்தினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கோவிந்தசாமி அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், கோவிந்தசாமி சிவபாதபுண்ணியம் அவர்களின் அன்பு மனைவியுமான நாகேஸ்வரி அவர்கள் நேற்று (17.08.2016) பி.ப 4 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.முருகானந்தம், சி.கணேசானந்தம் (கற்கண்டு), திருமதி கந்தவனம் சிவனேஸ்வரி (பாக்கியம்), திருமதி நவரத்தினம் பரமேஸ்வரி (திலகம்), சி.பவானந்தன் (பவா), காலஞ்சென்ற சி.திருச்செல்வம் (செந்தூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சு.மகேஸ்வரன், சு.புவனேஸ்வரன், சு.வாகீஸ்வரன், ஜெயவீரசிங்கம் சத்தியவாணி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், இராஜசீலன் மலர்விழி (கண்ணா), இமயவன், தூயவன் (லண்டன்), இந்திரகாசன் நளாயினி (கிருஷ்ணா), யாதவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராஜசீலன் மற்றும் மைதிலி, தியாகினி (லண்டன்), இந்திரகாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அட்சயன், அதிசயன், அசபனா, அர்ச்சிகன், ஆகீஷன், அஸ்னா, வைஷாளன், கரிஸ்ணவன், றோசன் (லண்டன்), வர்ஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2016) வியாழக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாணம்பற்றை,
அல்வாய் வடக்கு.

(சி-5480)

தகவல்:
குடும்பத்தினர்

# வடக்கிலும் தெற்கிலும் சட்டம் ஒன்றே பிரிவினையுடன் அணுகக் கூடாது-மனோ

(கொழும்பு)

தெற்கில் சிங்கள இளைஞர், யுவதிகள் கடத்திச் செல்லப்படும்போது அதனை அரச பயங்கரவாதம் எனவும், வடக்கு கிழக்கில் இளைஞர், யுவதிகள் கடத்திச் செல்லப்படும் போது அது அரச நிர்வாகம் எனவும் இரண்டு அர்த்தங்களில் பார்க்க முடியாதென தேசிய கலந்துரையாடல்கள், சகவாழ்வு அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சகவாழ்வு, சங்கத்தினை உருவாக்குதல் மற்றும் புதிய சட்டவாக்கம் தொடர்பான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி ஒன்று நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய அமைச்சர், நாட்டின் நீதியையும், சமாதானத்தையும் பாதுகாக்க வேண்டிய தேவையிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் மனோ கணேசன், நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்க இடமளிக்க முடியாது. காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகம் ஒன்றை அமைப்பது தொடர்பில் சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. காணாமற்போதல் எனப்படுவது, வெள்ளை வான்களில் கடத்திச் செல்லப்படுவதே தவிர வேறு ஒன்றுமல்ல. வான் ஒன்றில் பொலிஸ் உடையில் வரும் ஒருவரால், ஒருவர் அழைத்துச் செல்லப்படுவாராயின், அழைத்துச் செல்லப்படுபவரது உறவினர்கள் அது தொடர்பிலான தகவல்களை தெரிந்துகொள்வார்களாயின் காணாமற்போனவர்கள் என்ற விடயத்திற்கான தேவை இருக்காது.

இவ்வாறான நிலைமைகளில் நாட்டின் நீதியை சமாதானத்தை நாம் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொருவரும் விரும்பும் வகையில் செயற்பட முடியாது. ஒரு காலத்தில் அது நடந்தது. அது தற்போது சாத்தியமில்லை. இது இந்தக்காலப்பகுதிக்கு உரியது மாத்திரமல்ல. 88, 89ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள இளைஞர்கள் பலர் காணாமற்போயுள்ளனர். 60 ஆயிரத்திற்கும் அதிகமானோர் காணாமற்போயுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஜெனிவா சென்றும் அவர் முறைபாடு செய்தார்.

இந்த நாட்டில் வடக்கிற்கும் தெற்கிக்கும் வேறு வேறு சட்டங்கள் இல்லை. இன அடிப்படையில் சட்டங்கள் தேவையில்லை. அவ்வாறு யாரேனும் கூறினால் அதுவே பிரிவினை வாதம். தெற்கில் சிங்கள இளைஞர்கள் யுவதிகள் கடத்திச் செல்லப்படும்போது அது அரச பயங்கரவாதம். எனினும் வடக்கு கிழக்கில் இளைஞர் யுவதிகள் கடத்திச் செல்லப்படும் போது அது அரச நிர்வாகம். எப்படி அவ்வாறு கூற முடியும். இரண்டுமே ஒன்றுதான்.

எமது பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் ஏற்பட்ட களங்கத்தை துடைத்தெறிய வேண்டும். நற்பெயரை காப்பாற்ற வேண்டும். தவறிழைத்தவர்கள் எங்கும் இருக்கிறார்கள். நாடாளுமன்றில், அமைச்சரவையில், ஏன் இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் தவறிழைத்துள்ளார்கள். அதனாலேயே பலர் சிறையில் இருக்கின்றார்கள் என மனோ கணேசன் தனது உரையில் தெரிவித்தார். (செ-11)

## கட்சி குறித்து சந்திரிகா கருத்து

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு புதிய அமைப்பாளர்களை நியமிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கட்சி உறுப்பினர்களை நீக்க வேண்டும் என்பதனால் நீக்கியிருக்கலாம். ஆனால் கட்சிக்கான ஒழுக்கம் உள்ளது. கட்சிக்கென திட்டமொன்று உள்ளது. அவற்றுக்கு எதிராகத் தொடர்ந்து செயற்பட்ட போது மன்னிப்பு வழங்கப்பட்டதுடன் கால அவகாசமும் வழங்கப்பட்டது. எனினும், அவர்கள் மாறவில்லை. எனவே, கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமாயின் ஒழுக்கம் அவசியமாகும் என அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ஜப்பானின் முன்னாள் பிரதமர் யஷீவோ யுகுடாவை நேற்று சந்தித்த போதே இதனைக் கூறினார். (செ-11)

# ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் பலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் மற்றும் மாவட்ட அமைப்பாளர் பதவிகளில் இருந்து ஜனாதிபதியால் நீக்கப்பட்டுள்ளனர்.**

காமினிலொக்குகே, ரோஹித அபேகுணவர்தன, மகிந்த யாப்பா அபேவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல, சீ.பீ. ரத்நாயக்க, பவித்ரா வன்னியாராச்சி, உதித் லொக்கு பண்டார உட்பட பலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவிகளில் இருந்து நீக்கிவிட்டு, 40 புதிய அமைப்பாளர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

புதிய தொகுதி அமைப்பாளர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டனர்.

16 தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் 24 மாவட்ட அமைப்பாளர்கள் ஜனாதிபதியிடம் இருந்து நியமனக் கடிதங்களை பெற்றுக்கொண்டனர். (இ-7-10)



# அவுஸ்திரேலியா இலங்கை அரசுடன் நெருங்கி செயற்படும்

சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லும் ஆட்கடத்தல்காரர்களுக்கு எதிராக இலங்கையும் அவுஸ்திரேலிய அரசாங்கமும் நெருங்கி செயற்படுவதாக இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முயற்சித்த 6 இலங்கை அகதிகள் மீண்டும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டமை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் உயர்ஸ்தானிகராலயம் இதனை அறிவித்துள்ளது.

இந்த சம்பவத்தை அடிப்படையாக கொண்டு அவுஸ்திரேலிய எல்லை பாதுகாப்பு கொள்கைகளில் எந்த மாற்றங்களும் ஏற்படாது.

2013ஆம் ஆண்டு முதல் சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றி வந்த எந்த படகுக்கும் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய அனுமதி வழங்கப்படவில்லை.

இதனால், ஆட்கடத்தல்காரர்களிடம் ஏமாந்து உயிர் ஆபத்தை கவனத்தில் கொள்ளாது இப்படியான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் எனவும் உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பாராட்டுவதாகவும் இந்த சட்டவிரோத ஆட்கடத்தலை தடுக்க எதிர்காலத்திலும் இலங்கை அரசின் ஒத்துழைப்புடன் தமது அரசாங்கம் செயற்படும் எனவும் அவுஸ்திரேலிய உயர ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. (இ-7-10)

# 7 மாதத்திற்குள் 1632 பேர் பலி!

கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் ஆயிரத்து 632 பேர் பலியாகியுள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

இதில் 646 பேர் உந்துருளி விபத்துக்களினால் பலியானவர்கள் என அச்சபை தெரிவித்துள்ளது.

இதுதவிர, வாகன விபத்து காரணமாக நடைபாதையில் பயணித்த 459 பேரும் பலியாகினர்.

வாகன விபத்துக்களால் 246 பயணிகளும், 137 சாரதிகளும் பலியாகியுள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்து ள்ளது.

வீதியில் பயணிக்கும் போது, சாரதிகள் மாத்திரமின்றி அனைவரும் அவதானத்துடன் செயற்படும் பட்சத்தில் பெரும்பாலான விபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர். (இ-7-10)

# வீதி புனரமைப்பு வேலைகள் நேற்று ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை-மருதங்கேணி வீதி(B371) புனரமைப்பு வேலைகள் தொடர்பான நினைவுக்கல் திரை நீக்கம் நேற்று புதன்கிழமை மு.ப 10.30மணியளவில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான லக்ஷ்மன் கிரியெல்ல, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன், சிறுவர் விவகாரம் மற்றும் மகளிர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்ரன், வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ஈ.சரவணபவன், வடமாகாணசபை உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், கே.சயந்தன், அ.அஸ்வின் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர், திட்டப்பணிப்பாளர், உயர் அதிகாரி கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்ட னர். (இ-3-19-64-283)

# காணாமற்போனோர் குறித்த சட்ட மூலத்தை கொண்டு வந்தோருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

கடந்த வாரம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட காணாமற் போனோரை தேடுவதற்கான அலுவலகம் அமைப்பதற்கான சட்டமூலத்தை தயாரித்தவர்களுக்கும், அதற்கு ஆதரவு அளித்தவர்களுக்கும் மரண தண்டனை வழங்கப்படவேண்டும் என தேசிய இராணுவ ஒன்றியத்தின் தலைவர் ரியர் அட்மிரல் சரத் விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், காணாமற் போனோரை தேடுவதற்காக ஏற்கனவே பல அமைப்புகள் செயற்பட்டு வருவதாகவும், அதில் பரணகம ஆணைக் குழுவும் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

எனவே, இவ்வாறான ஆணைக்குழுக்கள் இருக்கும் போது காணாமற் போனோரை தேடுவதற்கு தனியான அலுவலகம் அவசியமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், விடுதலைப்புலி தீவிரவாதிகளை தேடுவதற்கு அலுவலகம் ஒன்றை அமைக்கும் அரசின் ஆர்வத்தை எண்ணி தான் ஆச்சரியமடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மீண்டும் யானைக்கால் நோய் பரவும் அபாயம்

இலங்கை யானைக்கால் நோயினை முற்றாக ஒழித்த நாடாக சுகாதார அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், காலி மாவட்டத்தின் 20 சுகாதார தொகுதிகளில் 11 கடலோரப் பகுதிகளில் இன்னும் யானைக்கால் நோயாளர்கள் இருப்பதாக யானைக்கால் நோய் ஒழிப்பு அமைப்பின் பணிப்பாளர் வைத்தியர் தேவிகா மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய இந்துருவ, பலபிட்டிய, அம்பலாங்கொட, கோனபினுவல, ரத்கம, காலி மாநகர சபையின் ஹபராதுவ, இமதுவ, அக்மீமன, போபே பொத்தல ஆகிய பகுதிகளிலும் இவ்வாறு யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த பகுதிகளில் இந்த வருடத்தில் இதுவரை 87 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இதில் அதிகமானோர் பலபிட்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் என வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இந்த பகுதிகளில் கடந்த 3 மாதங்களாக இரவு நேரங்களில் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பொதுமக்களின் இரத்தமாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதாகவும், இதில் 12ஆயிரம் பேரினது இரத்தமாதிரிகள் சோதனை செய்யப்பட்ட போது 60 பேருக்கு யானைக்கால் நோய் இருப்பது தெரியவந்துள்ளதாகவும் வைத்தியர் தேவிகா மெண்டிஸ் தெரிவித்தார்.

மேலும் குறித்த கடலோரப் பகுதிகளில் யானைக்கால் நோய் பரவுவதற்கான காரணம் அங்கு யானைக்கால் நோயினை பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்திற்கு ஏதுவான நீர் மற்றும் உஷ்ண நிலையே காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7-10)

# நீதிமன்ற உத்தரவுகளை பொலிஸார் நடைமுறைப்படுத்த முடியவில்லை

## பொதுமக்கள் மீது விசனம்

பொதுமக்களின் செயற்பாடுகள் காரணமாக நீதிமன்ற உத்தரவுகளை செயற்படுத்துவதற்கு பொலிஸாரினால் முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை என்பன நடைபெற்று வருவதனால் அதிக ஒலி எழுப்பு ஒலிபெருக்கி பாவிப்போரை உடனடியாக கைது செய்யுமாறு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணியளவில் பொலிஸ் அவசரப் பிரிவிற்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றது. கரவெட்டி மேற்குப் பகுதியில் அதிகளவு ஒலியுடன் ஒலிபெருக்கி பாவிக்கப்படுவதாகவும் இதனால் பரீட்சைக்கு தோற்றும் மணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு நெல்லியடிப் பொலிஸார் சென்று ஒலிபெருக்கிகளின் சத்தத்தை கட்டுப்படுத்துமாறு கோரியபோது அவர்கள் அதற்கு செவிசாய்க்காமல் பொலிஸ் அவசரப் பிரிவிற்கும் தொடர்பை ஏற்படுத்தி எமதுபகுதியில்பொலிஸார்அட்காசம் புரிவதாகத் தெரிவித்துள்ளதாக அறிய முடிகிறது.

இதனால் நீதிமன்ற உத்தரவுகளைப் பொலிஸார் நடைமுறைப்படுத்துவதற்கு தடை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-60)

# ஆஸியை வெள்ளையடித்து வரலாற்றுச் சாதனை படைத்த இலங்கை சிங்கங்கள்

இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக் கிடையில் எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம் பெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் 163 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இலங்கை யணி, வரலாற்றில் முதற்தடவையாக அவுஸ்தி ரேலியாவை வெள்ளையடித்தது.




இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி, தினேஷ் சண்டிமலின் 132, தனஞ்சய டி சில்வாவின் 129 ஓட்டங்கள் துணையோடு 355 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் மிற்செல் ஸ்டார்க் 5 விக்கெட்டு களைக் கைப்பற்றியிருந்தார்.

ப்திலுக்கு தமது முதலாவது இன்னிங்ஸில துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, ஷோர்ன் மார்ஷின் 130, ஸ்டீவன் ஸ்மித்தின 119 ஓட்டங்கள் துணையோடு 379 ஓட்டங்க ளைப் பெற்றது. பந்துவீச்சில் ரங்கன ஹேரத் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். இதனை யடுத்து, தமது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி, 8 விககெட் இழப்புக்கு 347 ஓட்டங்களைப பெற்றிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்திக கொண்டது.

கௌஷல் சில்வா 115, தனஞ்சய டி சில்வா ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், நேதன் லயன் 4 விக்கெட்டு க்களைக் கைப்பற்றினார். தொடர்ந்து 324 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் தமது இரணாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, 160 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியடைந்தது. டேவிட் வோர்னர் 68 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ரங்கன ஹேரத் 7 விக்கெ ட்டுகளைக் கைப்பற்றினார். இப்போட்டியில் 13 விக்கெட்டுகளையும் இத்தொடரில் 28 விக்கெட்டுகளையும் கைப்பற்றிய ரங்கன ஹேரத் இப்போட்டியின் நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் தெரிவானார். இத்தொடர் ஆரமபிப்பதுக்கு முன்னர் டெஸ்ட் அணிகளுக்கான தரவரிசையில் முதலிடத்தில் இருந்த அவுஸ்திரேலிய அணி, தற்போது இந்தியா, பாகிஸ்தானுக்கு அடுத்ததாக, தரவரி சையில் மூன்றாமிடத்துக்கு கீழிறங்கியுள்ளது.

தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏழாம் இடத்திலிருந்த இலங்கையணி ஒரு இடம் முன்னேறி ஆறாம் இடத்தை அடைந்து ள்ளது. (க)

# இந்தியா - மே. தீவுகள் இறுதி டெஸ்ட் இன்று

இந்திய- மே. தீவுகள் அணிகள் மோதும 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போர்ட் ஆப் ஸ்பெயினில் இன்று தொடங்குகிறது. இந்த டெஸ்டிலும் இந்திய அணியின் வெற்றி தொடருமா? என்று ஆவலுடன் எதிர்பார்க் கப்படுகிறது.



விராட் ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகள் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 4 டெஸ்ட் போட்டி தொடரில் அன்டிகுவாவில் நடந்த முதல் டெஸ்டில இன்னிங்ஸ் மற்றும் 92 ஒடடங்கள் வித்தியாசத்திலும், கிராஸ் ஐலெட்டில் நடை பெற்ற 3ஆவது டெஸ்டில் 237 ரன் வித்தியா சத்திலும் இந்தியா வென்று தொடரை கைப்ப ற்றியது. கிங்ஸ்டனில் நடந்த 2ஆவது டெஸ்ட் சமநிலையானது.

இந்திய - மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போர்ட் ஆப் ஸ்பெயினில் இன்று தொடங் குகிறது. இந்த டெஸ்டிலும் இந்திய அணியின் வெற்றி தொடருமா? என்று ஆவலுடன் எதிர்பார் க்கப்படுகிறது. 3-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றும் வேட்கையில் விராட் ஹோலி இருக்கிறார்.

இன்றைய டெஸ்ட் இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது. ஸ்ரார் தொலைக்காட்சியில் இந்தப்போட்டி நேரடி யாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது. (க)

# 110 மீற்றர் தடைதாண்டல் ஜமைக்கா வீரர் தங்கம்

ஒலிம்பிக்கில் 110 மீற்றர் தடை தாண்டும் ஓட்டதத்தில் ஜமைக்கா வீரர் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.



ரியோ டி ஜெனீரோவில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் நேற்று காலை ஆடவ ருக்கான 110 மீட்டர் தடை தாண்டும் ஓட்டம் நடைபெற்றது. இதில், 22 வயதான ஜமை க்கா வீரர் ஓமர் மெசிலாட் பந்தய தூரத்தை 13.05 வினாடிகளில் கடந்து தங்கம் வென் றார். இதன்மூலம் ஒலிம்பிக் 110 மீற்றர் தடை தாண்டும் ஓட்டத்தில் ஜமைக்காவுக்கு முதல் தங்கம் கிடைத்துள்ளது.

ஸ்பெயின் வீரர் ஓர்டேகா 13.17 வினாடி களில் கடந்து வெள்ளிப்பதக்கமும், பிரான்சை சேர்ந்த டிமிட்ரி பாஸ்கோவ் 13.24 வினாடி களில் கடந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

பிரிட்டனின் முன்னணி வீரர்களான ஆண்ட்ரூ போஸி மற்றும் லாரன்ஸ் கிளார்க ஆகிய இருவரும் இறுதிச் சுற்றுக்கு முன்னே றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)














தென்மராட்சியின் புகழ்பூத்த கல்விமானும் தமிழ் அரசுக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளருமான க.அருந்தவபாலனின் மணிவிழா நிகழ்வு நேற்றைய தினம் புதன்கிழமை சாவகச்சேரி சிவன்கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மனித உரிமை நிறுவன வடமாகாணப் பணிப்பாளர் கலாநிதி வை. சிவராசாவினால் "அருந்தவம்" எனும் மணிவிழா மலர் வெளியிடப்பட்டதுடன் விழாக்குழுவினராலும் பொது மக்களாலும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டு விழா நாயக தம்பதிகள் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன், வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், தமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகா ணசபை உறுப்பினர்கள், கல்விமான்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-சோபிகா,விஜயவாசன்)

# புத்தர் சிலை சதி முயற்சி

## இந்து சமயப் பேரவை சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழர் வாழும் பிர தேசத் தில் அர்த்தமற்ற முறையில் புத்தர் சிலைகளை அமைத்து வருவது நாட்டில் மீண்டும் குழப்ப நிலையை ஏற்படுத்து வதற்கான ஒரு பாரிய சதி முய ற்சியே. இதனை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத் தாவிட்டால் இந் நாடு மீண்டும் ஓர் பாரிய அழிவையே சந்திக் கும் என்றே கருதுகிறோம் என யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை யின் செயலாளர் சி. சக்திகிரீவன் தெரிவித் துள்ளார்.

உருவான அமைதிச் சூழ்நிலையை குழப் பியதன் பொறுப்பை சம்பந்தப்பட்ட வர்கள் ஏற்க வேண்டிவரும்.

இலங்கைத் தீவில் இந்துக்களும் பௌத் தர்களும் ஒற்று மையுடன் வாழ வேண்டுமா னால் மதச் சுதந்திரத்தின் தனித்துவத்திற்கு மதிப்ப ளித்து நடக்க வேண்டும். தமிழர் பிரதே சத்தில் எவ்வித காரணமுமின்றிப் புத்தர் சிலை களை அமைத்து வரு வது தமிழ் மக்களுக்கு சின மூட்டும் நடவடிக்கை என் பதை தெளிவு படுத்துகிறோம். இந் நடவடிக்கையில் உள்ள பின்னணியில் யார் செயற் படுகிறார்கள் என்பதை அரசு கண்டறிந்து அவர்களுக்கு தகுந்த புத்திமதி கூற வேண் டும் என்று கேட்டுக் கொள் கிறோம்.

எமது பிரதேசத்தில் நடை பெற்ற .யுத் தத்தின் போது அழிக்கப்பட்ட ஆலயங்க ளைப் புனரமைக்க கோடிக் கணக்கான பண ங்களை மக்களே செலவிட்டுள்ளனர். கண் துடைப்பிற்காக சில இலட்சம் ரூபாய்களை அரசு வழங்கியிருந்தது.

இந்து ஆலயங்கள் இரு ந்த இடங்களில் புத்தர் சிலையை அமக்க முயற்சி கள் மேற் கொள்ளப்பட்டு வரு கின்றன.

இதனை அரசு நிறு த்த, உடனடியாக தகு ந்த நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# நடமாடும் சேவை 20 ஆம் திகதி

*(யாழ்ப்பாணம்)*

*யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணை ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கியதான மீள்குடியேற்றத்திற்கான விசேட நடமாடும் சேவை நாளை மறுதினம் 20 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)*


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி வனிதா அருட்செல்வன் அவர்களது அன்புத் தாயார்

**திருமதி அன்னலட்சுமி சேனாதிராசா (ஓய்வுபெற்ற ஆசிரியை)**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி நாளிலே அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை. பாடசாலை சமூகம்

(இ-5476)


# மரண அறிவித்தல்

## அமரர்.செல்லத்துரை- நாகேந்திரன்

**(ஓய்வுபெற்ற கட்டடப் பொறியியலாளர்)**

மலர்வு : 1937.03.05 உதிர்வு : 2016.08.11

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் வைமன் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.செல்லத்துரை நாகேந்திரன் அவர்கள் 11.08.2016 அன்று அவுஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்தார். அன்னார் காலம் சென்றவர்களான கந்தர் மடத்தைச் சேர்ந்த திரு.செல்லத்துரை சரஸ்வதி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலம் சென்றவர்களான சாயுடை மாவிட்ட புரத்தைச் சேர்ந்த திரு.கந்தப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதி யினரின் மருமகனும் சயனொளிபவன் , ரவீந்திரன் காலஞ்சென்ற பத்மலோசனி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னார் வைத்திய கலாநிதி திருமதி சின்னப்பிள்ளை நாகேந்திரன் (ஓய்வு பெற்ற பொது வைத்திய நிபுணர் யாழ். போதனா வைத்தியசாலை. யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும் உமா. மாதவன். சர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும் குகதாஸ். கவிதாபிரியதர்சினி. ஹரேந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் சேயோன். பிரமியா. சௌமியா. ஹரேஸ். ஹரிசா. ஆரூரன். ஆரூபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 21.08.2016 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் கல்கிஸை மகிந்த மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் பி.ப. 2.00 மணியளவில் கல்கிஸை இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.18 1/4, கொலிங்வூட் பிளேஸ் கொழும்பு -06

தகவல்: நா.மாதவன் 077 918 4002

(5641)

# கலந்துரையாடல்

*(யாழ்ப்பாணம்)*

*சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் சமூக விஞ்ஞானமும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தொடர்பான கலந்துரையாடல் நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு புத்தூர் சோமா ஸ்கந்தக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள கதிர் கல்வி நிலையத்தில் நடைபெறும்.*

*புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் இ.கோகுலராகவன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் கருத்துரையினை த.தணிகாசலம் வழங்குவார். (இ-3)*


# 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி தேவராணி தவகோபால்

**(மில்க்வைற் தொழிற்சாலை உரிமையாளரின் மனைவி)**



கள்ளமில்லா உள்ளமும்
கபடமில்லாமனமும்.
வேசமில்லாப் புன்னகையும்
கொண்ட தாயே! அள்ள
அள்ளக் குறையாத உங்கள்
அன்பை இழந்து சொல்
லொண்ணாத் துயர் கொண்டு
ஆண்டு பதினான்கானதுவே!
ஆறாது உங்கள் பிரிவு என்.
றும் மாறாது உங்கள் பாசம்
எம் கண்கள் உள்ளவரை
கண்ணீராய்
சொரியும் உங்கள் நினைவு
உங்கள் ஆத்மா
இறைவனின் அமைதி பெற
பிரார்த்திக்கிறோம்.

த.பெ. இல. 77, மில்க் வைற், யாழ்ப்பாணம். (5627) குடும்பத்தினர்


# இராசி பலன்

18.08.2016

(ஆவணி 02, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பூரணை பிற்பகல் 3.53மணிவரை
அவிட்டம் பின்னிரவு 01.11மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை
பூரணை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம்,பூசம் மதியம் 1.21 மணிக்கு கும்-சந் | | |
| சந் | | | சூரி சுக் புத ராகு |
| | சனி செவ் | | குரு |

**மேடம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கௌரவமான நாள்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், தொழில் வளர்ச்சிக்கு வித்திடுவீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், வேலையாட்களிடம் போராடி வேலையை முடிப்பீர்கள், நடைபெறவிருந்த காரியமொன்று தாமதமாகலாம்.

**சிம்மம்:** மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி:** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் மனம் மகிழும் தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், நிதிநிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், வாகன சுகமுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

**தனுசு:** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், தொழிலில் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**மீனம்:** கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்திக்கொள்ள முற்படுவீர்கள், சகோதரர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயணங்கள் இடம் பெறலாம்.

## முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி விவகாரம்

# சர்வதேச விசாரணை மட்டும்தான் உண்மையை வெளிக்கொணரும்

## வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

**முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டது தொடர்பில் சர்வதேச விசாரணை இடம்பெற்றால் மாத்திரமே உண்மைகள் வெளிவரும். இல்லையேல் அனைத்துமே மூடி மறைக்கப்படும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண சபையின் 59 ஆவது அமர்வு நேற்று முன்தினம்கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன். முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டது என்ற குற்றச்சாட்டு குறித்து இரகசியமாக பரிசோதன்னை செய்திருக்க வேண்டும். இந்த வாய்மூலகுற்றச்சாட்டு தொடர்பில்மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் முடிவு வேறுவிதமாக வந்தால் அது ஒட்டுமொத்த தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அவப்பெயரை ஏற்படுத்தி விடும்.

தமிழர்கள் சர்வதேசத்திடம் பொய் கூறுபவர்கள் என்றாகிவிடும். இவ்வாறு தான் இந்த ஆய்வில் ஒன்றும் இல்லை என முடிவு வரும் என அமைச்சர் டெனீஸ்வரன் கூறினார். திடீரென முன்னாள் போராளிகள் மீது சிலர் அக்கறை காட்டுகின்றனர். யாரிடமாவது வடக்கில் உள்ள முன்னாள் போராளிகளது விபரங்கள் உள்ளனவா? என அவர் பேசினார்.

அமைச்சர் இவ்வாறு உரையாற்றியதும் பதிலளித்த உறுப்பினர் து.ரவிகரன், விஷ ஊசி விவகாரம் தொடர்பில் அமைச்சர் டெனீஸ்வரன் கூறியது போல அரசியல்வாதிகள் எவரும் முதலில் கூறவில்லை. நல்லிணக்க கலந்தாலோசனைக்கான செயலணியிடம் முன்னாள் போராளிகளே கூறியிருந்தனர். இது தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெற்றால் போராளிகளின் குற்றச்சாட்டு உறுதியாகலாம். உள்ளக விசாரணை இடம்பெற்றால் அமைச்சர் கூறுவதுபோல் ஒன்றும் இல்லாமல் போகலாம்.

இது தவிர அமைச்சர் டெனீஸ்வரன் தன்னிடம் முன்னாள் போராளிகளது விபரங்கள் இருப்பதாக கூறுகின்றார். ஆனால் அவர் தனது அமைச்சின் மூலம் மேற்கொண்ட வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே அந்த விபரங்களை பெற்றுக் கொண்டார். எனினும் நான் முல்லைத்தீவில் உள்ள முன்னாள் போராளிகளது விபரங்களை வைத்துள்ளேன்.

ஆகவே இது தொடர்பில் விவாதம் நடத்தாமல் முன்னாள் போராளிகளுக்கு என்ன நடந்தது என்று முதலில் ஆராயுங்கள். அதன் பின்னர் அது உண்மையா? இல்லையா? என ஆய்வுகள் முடிவு செய்யட்டும். நாங்கள் ஒன்றும் நடக்கவில்லை என கூறுவது விசாரணையை பாதித்து விடும் என மேலும் தெரிவித்தார். (இ-4)

### கடல் தீர்த்தம்

வடமராட்சிக் கிழக்கு வெற்றிலைக்கேணி ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. யோக சம்பந்தக்குருக்கள் தலைமையில் ஆரம்பமாகி, தொடர்ந்து 14 நாட்கள் திருவிழா இடம்பெற்று 15 ஆம் திருவிழா வான இன்றுவியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆலயத்திலிருந்து சுவாமி புறப்பட்டு வெற்றிலைக்கேணி தீர்த்தக்கரையை அடைந்ததும் 8.30 மணிக்கு கடல் தீர்த்தம் இடம் பெறும்.

கடல் தீர்த்தம் முடிவடைந்ததும் சுவாமி ஆலயத்தை வந்தடைந்து யாக பூசை இடம்பெறும். தொடர்ந்து மாலை கொடியிறக்கத்துடன் மஹோற்சவம் நிறைவடை யும். இரவு வெற்றிலைக் கேணி றம்போ விளையாட்டுக்கழகத்தினரதும் விநாயகர் சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் வெற்றிலைக்கேணி கிராம மக்களின் ஒத்துழைப்போடும் சாரங்கா இசைக்குழு வினரின் இசை நிகழ்வும் இடம்பெறும்.(இ-3-64)

## வடக்கு அமைச்சர்கள் 2162

# செலவீனங்களுக்குரிய கணக்கு காட்டவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் ஐந்து அமைச்சுக்களில் உள்ள 28 திணைக்களங்களில் மேற்கொள்ளப்பட்ட 2 ஆயிரத்து 162 செலவீனங்களுக்கு கணக்கு எதுவும் காட்டப்படவில்லை என எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா குற்றம் சாட்டியுள்ளார்.

தேசிய கணக்காய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையை மேற்கோள் காட்டியே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 59 ஆவது அமர்வு நேற்று முன்தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவீனமான கோடிக் கணக்கான ரூபாய்களுக்கு முறையான பற்றுச் சீட்டு மற்றும் ஆவணம். எவையும் இல்லாமல் செலவளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர வடக்கு மாகாண சபையினால் பயன்படுத்தப்பட்ட, பயன்படுத்தப்பட்டு வரும் 26 கட்டடங்கள் முறையான நடைமுறைகள் பின்பற்றப்படாமல் பாவனையில் உள்ளன. 2014 ஆம் ஆண்டு வரவு- செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் 39 கோடியே 45 இலட்சத்து 857 ரூபா செலவு செய்யப்பட்டதாக காட்டப்பட்டுள்ள போதிலும், அது வேறு ஒரு வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டு இறுதி நேரத்திலேயே செலவு செய்யப்பட்டது.

இவ்வாறான திறனற்ற செயற்பாடுகள் தான் வடக்கு மாகாண சபையில் இடம்பெற்று வருகின்றன என்ற குற்றச்சாட்டை அவர் ஆதாரத்துடன் முன்வைத்தார்.

மேலும் வடக்கு மாகாண சபை தனக்குரிய நியதிச் சட்டங்களை உருவாக்காமல் பலமாக செயற்பட முடியாது. மத்திய அரசிலே தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டிய நிலை இருக்கும்.

குறிப்பாக நீதிமன்ற அபராதங்கள் வடக்கு மாகாண சபைக்குத்தான் என பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இப்போது உள்ளூராட்சி சபைகளுக்கு அவை மாற்றப்பட்டுள்ளன. இவை எல்லாம் நடைமுறைக்கு பிறழ்வான விடயங்கள் எனவும் அவர் தனது உரையில் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார். (இ-4)




### விழுமியங்களில் விவாதப் போட்டி பரிசளிப்பு விழா

வடமாகாணக்கல்வி அமைச்சின் அனுசரணையில் சுகதாமம் மண்டபத்தின் ஓராண்டு நிறைவையொட்டிய விழுமியங்களில் விவாதப் போட்டி பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சுகதாமம் மண்டபத்தில் (213, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா, அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)



தேச இலங்கை மன்னன் எழுதிய "சர்வதேச மனித உரிமைச் சாசனம் 1948" எனும் நூல் வெளியீட்டு விழா நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. எழுத்தாளர் எஸ். சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினராக தமிழரசுக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, வடமாகாண சபை எதிர்க்கட்சித்தலைவர் எஸ்.தவராசா, முன்னாள் வடகிழக்கு முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள், யாழ். பல்கலைக்கழக மாணவி வி.பிரியதர்சினி, அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.கேசவரூபன் ஆகியோர் கலந்து கொண்டு நூல் பற்றிய கருத்துரைகளை வழங்கியிருந்தனர். (படங்கள்: பொ.சோபிகா)

# செஞ்சோலைப் படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு ஜேர்மனியில் அனுஷ்டிப்பு





(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுமிகள் இல்லத்தின் மீது, கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி இலங்கை விமானப்படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில், 61 அப்பாவி சிறுமிகள் கொல்லப்பட்டதோடு, 129 பேர் படுகாயமடைந்தனர்.குறித்த தாக்குதலில் காயமடைந்த பலர் தமது அவயவங்களை இழந்த நிலையில் வாழ்க்கையில் இன்றும் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

செஞ்சோலை படுகொலையின் 10 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு 14ஆம் திகதி மாலை ஸ்டுட்கார்ட் (Stuttgart) நகரிலும் நேற்று முன்தினம் மாலை டுசெல்டோர்ப் (Duesseldorf) நகரிலும் கவனயீர்ப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன.சிங்கள பேரினவாத அரசின்படுகொலையை வெளிப்படுத்தும் முகமாக பதாகையை ஏந்தியவாறு இளையோர்களால் ஆங்கில மற்றும் ஜேர்மன் மொழியில் துண்டுப்பிரசுரம் பல்லின மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. (இ-7)

# மோதலில் மூவருக்கு காயம்

வீதியில் தேவையற்று இருந்தவர்களை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தட்டிக் கேட்க முற்பட்ட போது மோதல் மூண்டதில் முவர் காயங் களுடன்வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (16-08-2016) இரவு 8.00 மணியளவில் கரவெட்டிப்பகுதியில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர்கள் வீதியின் மருங்கில் படுத்திருந்தவர்களை தட்டிக் கேட்க முற்பட்டபோது இவ்வாறு மோதல் மூண்டது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் திருப்பித்தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் இருவர் காயங்களுக்கு உள்ளானார்கள்.

இவர்களில் இருவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையிலும் மற்றைய நபர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்க ப்பட்டுள்ளனர். (இ

# பண்ணிசைப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவினரால் யாழ்.மாவட்ட அறநெறி பாடசாலைகளின் மாணவர்களுக்கு இடையில் பண்ணிசைப் போட்டி நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்டு வெற்றியீட்டிய முதல் 3 மாணவர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

**பாலர் பிரிவு**

முதலாம் இடம் சுட்டு இல. P-2 மதுவந்தி அனிருத்தன் இல.11 முதலாம் ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இரண்டாம் இடம் சுட்டு இல. P-151 நிலாவிழி கிருஷ்ணாகரன் சுழிபுரம், மேற்கு சுழிபுரம்.

மூன்றாம் இடம் சுட்டு இல. P-180 ஜெகதீஸ்வரன்-மகிழினி வட்டக்குளம், கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் சுட்டு இல. K-190ரேவதி முகுந்தன் தேவாலய வீதி ,மூளாய்.

இரண்டாம் இடம் சுட்டு இல. K-35 கனிமொழி கணேசானந்தன் பன்னாலை, தெல்லிப்பழை.

மூன்றாமிடம் சுட்டு இல. K-195கிருஸ்ணரூபன்-யதுசிகாபுலோலி தெற்கு, புலோலி.

**மத்திய பிரிவு**

முதலாமிடம் சுட்டு இல. N-30 கணேசலிங்கம் தனுசன் மதவடி லேன், கட்டுடை, மானிப்பாய். இரண்டாமிடம் சுட்டு இல.N- 153 லோஜினி கிருபாகரன் துர்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை. மூன்றாமிடம்- சுட்டு இல.N-168 சிவகோணேசன் கோபிராம் 16, கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**மேற்பிரிவு**

முதலாமிடம்சுட்டுஇல.M-36 லாதங்கி இராம கிருஸ்னன் இல.11, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், இரண்டாமிடம் சுட்டு இல. N-106 சிவகோணேசன் சிவாம்சன் 16 கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். மூன்றாமிடம் சுட்டு இல.N-99 கணேசானந்தன் வித்திகன் பன்னாலை, தெல்லிப்பழை.

இவ்கள்அனைவரும் சைவ சமய விவகாரக் குழுவின் 24 ஆவது மலர் வெளியிடப்படவிருக்கும்24 ஆம்திகதிகாலை 9 மணிக்கு நாவலர் மண்டபத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் முதல் மூன்று இடங்களைப் பெறாத மாணவர்களுக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழ் காலக்கிரமத்தில் உரிய அறநெறிப் பாடசா லைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என ஆணையாளரும் சைவ சமய விவகாரக்குழுதலைவருமான பொ.வாகீசன் அறிவித்துள்ளார். (இ

# புராண இசை நாடகங்கள்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகவரத நாராயணர் கோவில் வருடாந்த மஹோற்சவத் திருவிழாவை முன்னிட்டு ஆலய முன்றலில் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற்கழகம் வழங்கும் புராண இசை நாடகங்கள் , கூத்துக்கள் இன்றும் இடம் பெறும். இதில்,இரவு 7.30 மணி தொடக்கம் 10 மணி வரை வள்ளி திருமணம் இசை நாடகம் இடம்பெறும். (இ-3)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா:6
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: B/4959

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 48
உயரம்: 175cm
தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்
தொ.இ: B/4963

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 31செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:வைத்தியர்
தொ.இ: B/4975

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 31செவ் 7 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்:படவரைஞர் (அரச)
தொ.இ: B/4977

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 27
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:பட்டதாரி/அரச தொழில்
எதிர்பார்ப்பு:சைவபோசனம்
தொ.இ: G/803

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 36சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/820

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 7
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/829

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 36செவ் 4 இல்
உயரம்: 5'2'
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/848

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# வெளிக்கள நிலையத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்குதொண்டைமானாறுவெளிக்கள நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வெளிக்கள நிலையம் மற்றும் மீன்பிடியியல்துறைதலைவர்பேராசிரியர் திருமதி. சிவசா ந்தினி குகநாதன்தலைமையில்நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண் பாட்டலுவல்கள், விளையாட் டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குரு குலராஜா கலந்து கொள்ளவு ள்ளார். இந் நிகழ்வில் வரவேற்புரையினை வெளிக் கள நிலைய உப தலைவர் ந.அனந்தராஜ், ஆசியுரையை செல்வச்சந்நிதி முருகன் ஆலய பிரதம குரு த. அகிலேந்திர ஐயா, வாழ்த்துரை களை பருத்தித்துறைபிரதேசசெயலர்த. ஜெயசீலன் வட மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார், யாழ். வலயக் கல்விப் பணிப்பா ளரும் வெளிக்கள நிலையப் போசகருமாகிய ந. தெய்வேந் திரராஜா, வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், வடமாகா ணக் கல்வி அமைச்சின் செயலா ளர் இ.இரவீந்திரன் ஆகியோரும் நன்றியுரையினை வெளிக்கள நிலைய செயலா ளர் சி. சுகுமாரனும் வழங்கவுள்ளனர். (இ-3)







நல்லிணக்க பொறிமுறைக்கான செயலணியின் மக்கள் கருத்தறியும் அமர்வின் கிளிநொச்சி மாவட்டத் திற்கான இறுதி அமர்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் ஆரம்பமானது. இவ் அமர்வில் பலர் தமது கருத்துக்களை பதிவு செய்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாவி, கிளிநொச்சி-1, செய்தியாளர்கள்)

# அத்துமீறி புத்த விஹாரைகள் அமைக்கப்படுவது நல்லிணக்கத்தை பாதிக்கும் செயற்பாடாகும்

## நல்லிணக்க செயலணியிடம் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று தெரிவிப்பு

அரசாங்கத்தினால் தற்போது செயற்படுத் தப்பட்டு வரும் நல்லிணக்கம் தொடர்பான பொறிமுறை செயலணியின் பொது அமைப் புக்களின் கருத்துக்களை கேட்டறியும் இறுதி அமர்வு கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு சபை மண்டபத்தில் நேற்றுக் காலை 9. 30 மணிக்கு ஆரம்பமானது.

இந்தக் கருத்தறியும் அமர்வில் கிளிநொ ச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பொதுஅமை ப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

இதில் முக்கியமாக வடக்கில் இராணுவ த்தின் பூரண ஒத்துழைப்புடன் அமைக்கப்ப டும் புத்த விஹாரைகள் நிறுத்தப்படவேண்டும். அத்துமீறி அமைக்கப்படும் செயலானது நல்லிணக்கத்தை பாதிக்கும் செயற்பாடா கவே அமையும் எனத் தெரிவக்கப்பட்டது.

யுத்தம் முடிவு பெற்று ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் தமிழ் அரசியல்கைதிகள் விடுதலை செய்யப்படாமை, காணாமல் ஆக் கப்பட்டோர் தொடர்பில் நீதி கிடைக்காமை, யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றப் படாமை, யுத்தத்தின் போது அழிவடைந்த சொத்துக்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படாமை ஆகிய நடவடிக்கைகள் மூலம் இனங்களுக்கி டையிலான நிலையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது எனவும் கடந்தகால ஆட்சியில் இருநத அரசாங்கம் போன்றே தற்போதைய அரசு செயற்பட்டு வருகின்றது எனவும் கூறப்பட்டது.

நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கான அர்ப்பணிப்பை அரசு கொண்டிருக்கவில் லையெனவும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் சுட்டிக்காட்டினர்.

நல்லிணக்க செயலணியின் கருத்தறியும் அமர்வுகள் அண்மை நாட்களாக பிரதேச செயலகங்களில் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-277)




# சிரமதானப் பணி



கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் சமுர்த்திப் பயனாளிகளால் பரவலாக சிரமதா னப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் அக்கராயன் பிரதேச வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தரின் ஒழுங்கு படுத்தலின் கீழ் சமுர்த்தி பயனாளிகளால் கிளி/ அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், அக்கராயன் மத்தி பொதுநோக்கு மண்டபம், கெங்காதரக் குடியிருப்பு பொதுநோக்கு மண் டபம் ஆகிய வளாகங்கள் நேற்று முன்தினம் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப் பட்டது.

இதன்போது பெருமளவான சமுர்த்தி பயனாளிகள் இச் சமூகப் பணியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-272)

# ‘அழகான நகரம் சுத்தமான சூழல்’ தொனிப்பொருளில் றொட்டரிக் கழகத்தினால் சிரமதானப்பணி முன்னெடுப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர றொட்டரிக்கழகத்தின் ஏற்பாட்டில் ‘அழகான நகரம் சுத்தமான சூழல்’ எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி டிப் போ சந்தியில் இருந்து கர டிப்போக்கு சந்தி வரையிலான ஏ-9 வீதியின் இருமருங் கி லும் உள்ள கழிவுப் பொரு ட்களை சிரமதானப் பணி மூலம் சேகரிக்கும் செயற் பாடு ஒன்று நேற்றுக்காலை 9.30 மணியிலிருந்து நண் பகல் 12 மணிவரை முன் னெடுக்கப்பட்டது.

இச்சிரமதானப்பணியை கரைச்சி தெற்கு பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம், கரைச்சி பிரதேசசபை ஆகியன இணைந்து முன்னெடுத்தமை குறிப்பிடத் தக்கது. (2-277)

# கேப்பாப்புலவு மக்களின் காணி விடுவிப்புத் தொடர்பில் வடக்கு மாகாண சபை செயற்பாடுகளை முன்னெடுக்கும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் உறுதி

(பனிக்கன்குளம்)

கேப்பாப்புலவு மக்களின் பூர்வீக காணி கள் விடுவிப்பு தொடர்பில் வடக்கு மாகாண சபை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றத்தின்போது கேப்பாப்புலவு மக்களை அவர்களின் சொந்த இடத்தில் குடியேற்றவில்லை. மாறாக, சூரிபுரம் பிலக்குடியிருப்பு என்ற இடத்தில் “கேப்பாப்புலவு மாதிரிக் கிராமம்” எனும் பெயரில் தற்கா லிகமாகத்தான் குடியேற்றினார்கள்.

பல நாட்கள் கடந்த போதிலும் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பவில்லையே என்ற ஆதங்கத்துடன் அவ்வூர் மக்கள், மக்கள் பிரதிநிதிகளுடன் சேர்ந்து பல தடவை போராட்டங்கள் நடத்தியும் தீர்வுகள் எட்டப்படவில்லை.

இதனொருகட்டமாக, தாம் தமது சொந்த இடத்திலேயே வாழ்வதற்கான வழி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் கடந்த மார்ச் 24 ஆம் திகதி க.வேலாயுதம்பிள்ளை சாகும் வரையிலான உணவு தவிர்ப்பு போரா ட்டத்தை ஆரம்பித்தார்.

இம்முன்னெடுப்பினை மாகாண முதல் வரின் கவனத்திற்கு தெரியப்படுத்தியபோது கேப்பாப்புலவு மக்களுக்கும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட வேலாயுதம்பிள் ளைக்கு முதலமைச்சர் எழுத்து மூலமான அறிவித்தலை வழங்கினார்.

அவ்வறிவித்தலைத்தொடர்ந்து கடந்த மார்ச் 26 ஆம் திகதி உணவு தவிர்ப்பு போராட்டம் கைவிடப்பட்டது.

இதன்பின்பு முதலமைச்சர் இச்சிக்கல் நிலையை ஆய்வுசெய்யவென ஓய்வுபெற்ற உயரதிகாரிகள் ஐவர் கொண்ட நிபுணர் குழுவை நியமித்திருந்தார்.

சம்பந்தப்பட்ட அனைவரிடமும் இக் காணிகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து, இராணுவ முகாமை மக்களின் குடியிருப்பு பகுதிகளிலிருந்து நகர்த்த வேண்டுமென்ற அறிவித்தலுடன் அக்குழுவினர் சிபார்சு செய்திருந்தனர்.

அவர்களின் அறிக்கையானது கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி முதல மைச்சரினால் மீள்குடியேற்ற அமைச்சருக்கு அனுப்பப்பட்டிருப்பதோடு அதன் பிரதியானது ஜனாதிபதியின் செயலாளருக்கும் பிரதமரின் செயலாளருக்கும் பிரதமரின் ஆலோசக ருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

எமது மக்களின் பூர்வீக காணிகள் விடுவிப்புக்கான ஆக்கபூர்வ செயற்பாடுகளை வடக்கு மாகாணசபை தொடர்ந்தும் முன்னெ டுக்குமென அவர் மேலும் தெரிவித்துள் ளார். (2-281)

# முல்லைத்தீவில் இன்று போராட்டம்

(பனிக்கன்குளம்)

காணாமற்போனோர் அலுவலகம் என்ற ஒன்று தேவையில்லை என தெரிவித்து முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப் பட்டுள்ள மக்கள் இன்று போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடு க்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

போராட்டத்தின் முடிவில் பாதிக்கப்பட்ட மக்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்ரன் ஆகி யோருக்கு மகஜர்களையும் கையளிக்க வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் காணாமற்போ னோரின் உறவினர்கள், அரசியல் கைதி களின் உறவினர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். (2-281)

# நாங்கள் நீதியை மதித்தாலும் எமக்கான நீதி மறுக்கப்படுகிறது

## நல்லிணக்க செயலணியிடம் நபரொருவர் கருத்து



நாங்கள் இலங்கையின் நீதித்துறையை மதிக்கின்றோம். ஆனால் நீதித்துறை தமிழ் மக்களுக்கு நீதியைத் தரவில்லை என நல்லிணக்க பொறிமுறை செயலணி குழுவிடம் செ.சபாநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நல்லிணக்க பொறிமுறை செயலணியின் கருத்தமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கூறுகையில்.

இலங்கையைப் பொறுத்தவரை நீதித்துறை சரியாக இல்லை. நாங்கள் அன்று தொடக்கம் இன்று வரை நீதித்துறையை மதிக்கின்றோம். ஆனால் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு நீதித்துறை சரியான நீதியைப் பெற்றுத் தரவில்லை. குறிப்பாக முன்னர் நடந்த இனக்கலவரம் மற்றும் இறுதியாக தீர்ப்பு வழங்கப்பட்ட குமரபுரம் படுகொலை சம்பவங்கள் தொடர்பில் சரியான நீதி கிடைக்கவில்லை. கண்முன்னே நடந்த கொலைகளுக்கு நீதி கிடைக்கவில்லை. குற்றவாளிகள் கண்முன்னே சுதந்திரமாக நடமாடுகிறார்கள். இவ்வாறான நிலையில் எவ்வாறு நல்லிணக்கத்தை நாம் எதிர்பார்க்க முடியும்.

இராணுவம் தொடர்ச்சியாக நில அபகரிப்புக்களை செய்து வருகின்றது. வவுனியாவில் வைத்தியசாலை, கோவில், பாடசாலை என்பவற்றுக்கு மத்தியில் உள்ள குடியிருப்பு கலாசார மண்டபம் கூட இராணுவ முகாமாக உள்ளது. இது போல பல பொது இடங்கள், தனியார் காணிகள் இராணுவத்தினர் வசம் உள்ளது. தற்போதும் அபகரிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு புதிய அரசாங்கம் துணைபோய்க் கொண்டிருக்கின்ற நிலையில் நாம் ஒரு நல்லிணக்கத்தை எதிர்பார்க்க முடியாது. இதில் மாற்றங்கள் ஏற்பட்டால் மட்டுமே இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். இந்த நாட்டில் இனக்கலவரம் முதல் இறுதி யுத்தம் வரை நடந்த குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை மூலமே நாம் தீர்வைப் பெற முடியும். அவ்வளவு தூரம் எமது மக்களும் நாமும் இந்த அரசாங்கத்தின் நீதிப்பொறிமுறைகளில் நம்பிக்கையிழந்துள்ளோம் எனத் தெரிவித்தார். (2-250)

# தாயகம், தேசியம், சுயாட்சி என்ற கோஷங்கள் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது

## நல்லிணக்க செயலணியின் முன் ஆசிரியர் ஒருவர் தெரிவிப்பு



தாயகம், தேசியம், சுயாட்சி என்ற கோஷங்கள் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை கொண்டு வரப் போவதில்லை. ஒரு நாடாக ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என ஆசிரியரான த.சிவசோதி தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஆரம்பமான நல்லிணக்க பொறிமுறை தொடர்பிலான கருத்துப் பெறும் அமர்வின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,


தாயகம், தேசியம், சுயாட்சி என்ற கோஷங்கள் இனங்களுக்கு இடையில் ஒரு போதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. இது அரசியல்வாதிகளின் செயற்பாடுகளுக்கு தான் பொருத்தமானது. இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் கிராம இராச்சியங்கள் உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலம் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு ஒரு நாடாக ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். நாட்டில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற வேண்டும். குற்றவாளிகள் யார் யார் என்பது கண்டறியப்பட வேண்டும். தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை. இரு தரப்பிலும் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் குற்றவாளிகளை இனங்காண ஒரு பொறிமுறை விசாரணை தேவை.

யுத்தத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு இழப்பீடுகள் சரியான முறையில் வழங்கப்பட வேண்டும். அதில் கூட பாரபட்சம் காட்டப்படுகின்றது. வீதிகளில் உள்ள போக்குவரத்து பொலிஸார் கூட தமிழர் பகுதிகளில் சிங்களத்திலேயே பேசி பணம் பறிக்கிறார்கள். சிங்களத்தில் ஏதோ பேசுகிறார்கள். அது மக்களுக்கு புரிவதில்லை. எமது பகுதிகளில் தமிழ் பொலிஸாரை கூட குறைந்தபட்சம் நியமிக்காத போது நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்பது கேள்விக்குறியே எனத் தெரிவித்தார். (2-250)




# எதிர்க்கட்சித்தலைவரின் உறுதிமொழிக்கமைய

# பரவிப்பாஞ்சான் மக்களின் போராட்டம் கைவிடப்பட்டது



கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மக்கள் இராணுவத்தின் வசமுள்ள தமது சொந்தக் காணிகளை விடுவிக்கக் கோரி கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை முதல் இரவு பகலாக ஐந்து நாட்கள் இராணுவ முகாம் முன்பாக முன்னெடுத்த போராட்டம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் அப்பகுதிக்கு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் வழங்கிய உறுதிமொழிக்கமைய கைவிடப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறிதரன் , சுமந்திரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் சகிதம் போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மக்களுடன் கலந்துரையாடினார்.

பாதுகாப்பு செயலாளருடன் தொடர்பு கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் பரவிப்பாஞ்சான் காணி தொடர்பில் கேட்டறிந்தார். குறித்த மக்களின் காணியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தார். இதன் போது 15 நாட்களிற்குள் காணிவிடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வழங்கப்பட்ட உறுதிமொழியை எதிர்க்கட்சித் தலைவர் மக்களிடம் தெரியப்படுத்தினார்.

எதிர்க்கட்சித்தலைவர்வழங்கிய உறுதிமொழிக்கமைய போராட்டத்தை தற்காலிக மாக கைவிடுவதாக மக்கள் தெரிவித்தனர். குறித்த காலப் பகுதிக்குள் காணிகள் விடுவிக்கப்படாத விடத்து மீண்டும் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

காணி உரிமையாளர்கள் ஐந்து நாட்களாக இரவு பகலாக பல சிரமங்கள் மற்றும் இராணுவத்தினரின் இடையூறுகள் மத்தியிலும் குறித்த இடத்தில் சமைத்து உணவு உண்டு போராட்டத்தில் ஈடுபட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (2-15-309-307-312)

# காணாமற்போனோர் விசாரணைக்கான அலுவலகம் கிளி.யில் அமையவேண்டும்

## நல்லிணக்க செயலணியிடம் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளுக்கான நிரந்தர அலுவலகம் கிளிநொச்சியில் அமைக்கப்பட வேண்டும் என கிளிநொச்சி கிராம அபிவிருத்தி சமாசங்களின் சங்கத்தலைவர் த.ஜெயக்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

நல்லிணக்க பொறிமுறை செயலணியின் மக்கள் கருத்தறியும் அமர்வு நேற்றுக் காலை 9 .30 மணியளவில் ஆரம்பமானது.

இதில் கருத்துக்களை முன்வைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் தொடர்ந்து கூறுகையில்,


தென்பகுதியில் 80 வீத மானவர்கள் போதைப் பொருள் மற்றும் பாலியல் ரீதியிலான குற்றச்சாட்டை மேற்கொண்டவர்களே காணாமற் போயுள்ளனர். ஆனால் வடக்கு தமிழ் மக்கள், இராணுவத்தினரால் கடத்தப்பட்டே காணாமற் போயுள்ளனர். ஆதலால் காணாமற் போனவர்களுக்கான நிரந்தர அலுவல்கத்தை கிளிநொச்சியில் அமைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கான தீர்வு சரியான முறையில் கையாளப்பட வேண்டும் என்றும் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து உயிர்நீத்த மாவீரர்களுக்கான துயிலும் இல்ல நினைவு தினம் கொண்டாடுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜே.வி.பியில் இருந்து உயிர்நீத்த வீரர்களுக்கு நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில், ஏன் விடுதலைப்புலிகளில் இருந்து உயிர்நீத்த வீரர்களுக்கான நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (2-281)

# புகையிரதம் மோதி நான்கு யானைகள் பலி



தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த அதிவேக புகையிரதத்தில் மோதுண்டு நான்கு யானைகள் பலியாகியுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட புகையிரதத்தில் வவுனியா மெனிக்பாம் பகுதியில் புகையிரதக்கடவையை கடக்க முற்பட்ட யானைக்கூட்டம் மோதுண்டே நான்கு யானைகள் பலியாகியுள்ளன.

இதன், காரணமாக புகையிரதப்பாதை சிறிது நேரம் சேதமடைந்ததுடன் புகையிரத போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளது. (2-250)

# அரசாங்கமே ஆட்சியை நடத்தவேண்டும்!

# கும்பல் ஒன்றின் விருப்பத்திற்கு இடமளித்துவிடக்கூடாது



ஜனநாயகமொன்றில், மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அரசாங்கமொன்றினால் மக்கள் நலனுக்கான வழிகளிலிருந்து தடம்மாறும் செயற்பாடுகள் அல்லது அவ்விதமான செயற்பாடுகள் இடம்பெறுவதாக அஞ்சப்படும் விடயங்கள் மட்டில் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்துவது எதிர்க்கட்சியினது கடமையாகும். ஜனநாயகக் கோட்பாடுகளான பேச்சுச் சுதந்திரம், நடமாடுவதற்கான சுதந்திரம் போன்றவை வீதிகளிலோ ஏனைய பொது இடங்களிலோ பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற எதிர்ப்பு இயக்கங்கள் நடத்தப்படுவதை அனுமதிக்கின்றன. இருப்பினும் பொது மக்களின் நடமாட்டம் மற்றும் மக்கள் நலனுக்கான அரசாங்கத்தின் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இடையூறுகள் ஏற்படுத்தாத விதத்திலும் அரச நடைமுறைச்சட்டவிதிகள் மற்றும் வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளுக்கு இணக்கமான விதத்திலுமே அவை மேற்கொள்ளப்படுவது அவசியமாகிறது. சுதந்திரமான முறையில் நடத்தப்படும் நீதியான தேர்தல் மூலம் மக்களால் ஆணை வழங்கப்பட்ட அரசு நாட்டையும் மக்களையும் ஆளுவதற்கான முதல்தர கடமையைக் கொண்டுள்ளதென்பது வெளிப்படையானதே. எதிர்க்கட்சியானது ஜனநாயக ரீதியான தனது எதிர்ப்புக்களை பொதுவான மக்கள் விருப்பத்திற்கு குந்தகம் இல்லாத வகையில் ஜனநாயக சட்ட வரையறைகளுக்குட்பட்ட விதமாக வெளிப்படுத்த முடியும். இதற்கு முரணாக நிகழ்பவை மக்களதும் நாட்டினதும் இறைமையை மீறும் செயல்களாகவே கருதப்படும்.

வகுப்பறைகளில் கற்பிக்கப்பட்டுவரும் இந்த அடிப்படை குடிமக்கள் சட்ட ஒழுங்குவிதிகள் தற்போது அரசியல் கும்பல் ஒன்றின் குறுக்கீடுகள் காரணமாக நாட்டில் வளர்ச்சிகண்டு வரும் இன்றைய அரசியல் சூழ்நிலைகளில் இரட்டிப்பான அக்கறைக்குரியவையாகி வருகின்றன. அதாவது ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகள் என்றில்லாவிட்டாலும்கூட அவற்றுட்சில தோல்வி கண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்று சேர்த்து அரசியல் பித்தலாட்டங்களின் மூலம் அரசாங்கத்தின் முக்கிய பிரேரணைகளை முறியடிப்பதற்கென்றே தான்தோன்றித்தனமாகச் செயற்படும் அராஜக அரசியல் சூழ்நிலை தற்போது வளர்ச்சி கண்டு வருவதே அதற்கான காரணமாகும்.


இவ்வாறான சந்தர்ப்பங்கள், நாட்டை, ஆள்வது யார்? என்ற கேள்விக்கே இட்டுச்செல்வதாக இருக்கிறது. நாட்டை ஆளுவது ராஜபக்ஷ கும்பலா? அல்லது சட்டப்படி தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சிறிசேன-விக்கிரமசிங்க அரசாங்கமா?

அண்மையில் ராஜபக்ஷ கும்பலினால் அரங்கேற்றப்பட்ட கண்டி-கொழும்பு பாதயாத்திரையானது இரண்டு மில்லியன் மக்களை அணி திரட்டி அரசாங்கத்திற்கெதிரான ஒரு மாபெரும் எதிர்ப்பலையாக அவர்களது எதிர்ப்பினை மேலும் அதிகரித்த விதமாக காட்டி மக்களை முட்டாள்களாக்கும் முறையில் மேற்கொள்ளப்பட்ட மடைத்தனமான பிரசார இயக்கமொன்றேயாகும். சாதாரண கண்ணோட்டத்தில் மேலோட்டமாகப் பார்த்தால் நாடு முழுவதும் பரந்து வாழும் 20 மில்லியன் மக்களில் பத்தில் ஒருவர் இதில் பங்குபற்றியிருக்கிறார்கள் என்பதே அர்த்தமாகும். கொழும்பு மாநகர சபையின் ஒட்டுமொத்த சனத் தொகை 600,000-700,000 வரையிலிருக்கும். இலங்கையின் குடிசனத்தொகை கூடிய மாவட்டங்களான கொழும்பு,கம்பஹா மாவட்டங்களின் மொத்த குடிசனத் தொகை 2 மில்லியன்களாகும். நாட்டினது எடுத்துக்காட்டான இந்த குடிப்பரம்பல் புள்ளி விபரமானது(Demographic statistics) ராஜபக்ஷ கும்பலின் போலித்தனமான உரிமைக்கோரல்கள் எப்படிப்பட்டவை என்பதை வெளிப்படுத்துவதற்கு போதுமானதாகும்.

தனிநபர்களில் சிலர் மாயாவிக்கதை போன்ற கற்பனைக்கதைகளைக் கூறி சிரமத்திலிருக்கும் மக்களை களிப்பேற்றுபவர்களாக மனிதர்கள் மத்தியில் அடிக்கடி தலைகாட்டுவது வழமையாக நிகழ்ந்து வருவது தான். ஆனாலும் மகிந்த ராஜபக்ஷவினதும் அவரது கும்பலினதும் கதைகளோவென்றால் வெறும் கட்டுக்கதைகளுக்கோ உண்மையான வீரதீரக்கதைகளுக்கோ மாறுபட்டவையாக, சர்வாதிகாரி ஹிட்லரது பிரசார பீரங்கியாகிய (பிரசார அமைச்சர்) ஜோசப் கொயபல்ஸ் என்பவரது மிகவும் பிரபல்யம் வாய்ந்த புரளிகளையும் விஞ்சுபவையாகவே உள்ளன. ஒரே பொய்யையே திரும்பத் திரும்ப கூறி வந்தாலும் அதுவே மறுக்க முடியாத ஒரு உண்மையாகி விடும் என்பதே அவரது பிரசாரக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடாக இருந்து வந்தது.



அரசாங்கமே இந்த ஆட்சியை நடத்த .... எனும் தலைப்பில் சண்டேலீடர் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.




மடைத்தனமான எவ்வித பொய்களையும் வெளிப்படையாகவே திரும்பத் திரும்ப கூறுவதன் மூலம் அவற்றை புனிதமான உண்மைகளென மக்களை நம்பவைத்து விடலாம் என்ற எதிர்பார்ப்பில் இயந்திரத்தனமான அரசியல் கட்சி மாறிகள் இருவரை மாத்தறைக்கான பாதை வழியாக கடந்து வரும் போது ராஜபக்ஷ கும்பல் தமது பிரசாரப் பணியில் ஈடுபடுத்தியமை கோயபல்ஸினது பிரசார உத்திகளையே கூட சிறுமைப்படுத்தியது போலாயிற்று.

எளிதாக ஏமாற்றக்கூடியவர்களை ஏமாற்றுவதற்காகவும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தாம் அரங்கேற்ற எதிர்பார்த்திருக்கும் மேலும் கூடுதலான பாதை யாத்திரைகளுக்கு அப்பாவி மக்களையே மேலும் மேலும் அணிதிரட்டும் நோக்கில் தாம் ஏற்கனவே கூறி வந்த "2 மில்லியன் மக்களைக் கொண்ட பேரணி", " மக்கள் வெள்ளம் " என்ற பெரும் பொய்யையே இந்த அரசியல் கும்பல் திரும்பத்திரும்ப கூறி வந்தது.

கண்டி-கொழும்பு பாதயாத்திரைகளுக்கான இந்தப்பேரணியின் இலக்கு நாட்டின் புதிய நல்லாட்சி அரசினை கவிழ்ப்பதே என்று கூறப்பட்டு வந்த போதிலும் இது மட்டிலான இப்பித்தலாட்டக்கும்பலின் பேரெடுப்புகள் எதுவுமே அரசினை ஒரு மயிரளவு கூட அசைத்து விட முடியவில்லை. ஆனாலும் ராஜபக்ஷவினது முடிவில்லாத நம்பிக்கைக்கேற்ப அவரை திருப்திப்படுத்தும் எதிர்காலப் பேரணிகளும் கூட திட்டமிடப் பட்டேயுள்ளன.

அடிப்பண்ட கொள்கை முரண்பாடுகளுடன் கூடிய இப்புதிய கூட்டணி உள் முரண்பாடுகளில் ஒழுங்குணர்வு கண்டு ஒருமைப்பாட்டை பேணிக்கொள்வதிலேயே கூடுதல் காலத்தை இதுவரை செலவிட்டிருந்தது. கூட்டணி அரசினை மட்டுமல்லாது (SLFP) கட்சியையும் பிளவுபடுத்த வேண்டும் என்ற ராஜபக்ஷவின் திருப்தியற்ற முயற்சிகளின் மத்தியிலும் பொதுவான ஓர் கொள்கையின் அடிப்படையில் சுமுகமான ஓர் இணக்கப்பாடு அரசுக்குள் உருவாக்கப்பட்டது. இந்த சாதனைகள் அனைத்தும் தொடர்ந்து பாதுகாக்கப் படுவதுடன் திருப்திகரமான அபிவிருத்தி திட்டங்களை உறுதியான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கான தருண மும் இதுவேயாகும்.

ராஜபக்ஷ ஆதரவாளர்களது எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அரசினது சட்டவாக்க பிரேரணைக்கு கிடைத்திருந்த பெரும்பான்மை ஆதரவினைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்தினை கவிழ்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் எதுவுமே பயனளிக்கப் போவதில்லை என்பது மகிந்த ராஜபக்ஷவுக்கு இப்போது நன்கு புலனாகியிருக்கும். இருந்தும் நாட்டின் அரசியலில் நிச்சயமற்ற தன்மையை உருவாக்குவதன் மூலம்



ஏற்படக்கூடிய் சீர்குலைவுகளால் அரச நிலைப்பாடுகளை தடுமாற வைக்கும் தீமையான தந்திர நோக்கமொன்று மகிந்தவிடம் இருப்பதும் உண்மை. இப்படியான ஓர் நிலைமையை உருவாக்கி விட்டால் நாட்டிற்குள் வந்து கொண்டிருக்கும் அந்நிய முதலீடுகளை குழப்பி திசை திருப்பி விடுவதுடன் அதன்மூலம் பொருளாதார அபிவிருத்திகளுக்கு அடிப்படையாக அரசு நம்பிக்கை கொண்டிருக்கும். உத்தேச திட்டங்களை முறியடித்து விடலாம் என்பதே ராஜபக்ஷவின் நப்பாசையாகும்.

இலங்கைக்கு அபிவிருத்திக்கான உதவிகளை வழங்க ஆரம்பித்திருந்த பொருளாதார சக்தி படைத்த பெரிய நாடுகளுடன் நல்லவிதமான உறவுகளை மீளவும் சீரமைத்துக்கொண்டதில் சிறிசேன-விக்கிரமசிங்க அரசு சிறப்பாகவே செயற்பட்டிருந்தது. "IMF" ,"World Bank" போன்ற உலக ஸ்தாபனங்கள் அபிவிருத்தி உதவிகளை பெருந்தன்மையுடன் அள்ளி வழங்க ஆரம்பித்த அதே நேரத்தில் ஜப்பான்,சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளும் குறிப்பிடத்தக்க அளவில் உதவிகளை ஏற்கனவே வழங்கியிருந்தன. ஆனாலும் அபிவிருத்திக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி விரைவாக முன்னெடுத்துச் செல்வதற்கென நேரடியான வெளிநாட்டு முதலீடுகளும் தேவைப்படுகின்றது. அமைதியான அரசியல் சூழ்நிலையொன்று அத்தியாவசியமான ஒரு தேவையாகும். நாம் ஏற்கனவே கூறியதுபோல் அங்கீகரிக்கப்பட்ட பாராளுமன்ற எதிர்க்கட்சியோ அல்லது ராஜபக்ஷ கும்பல் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியோ எதுவாய் இருப்பினும் அரசாங்கத்திற்கான தமது எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்கு ஜனநாயக ரீதியில் எந்தவித எதிர்த்தரப்பு நடவடிக்கையை மேற்கொள்வதானாலும் குழப்பங்களை தூண்டாது அல்லது உருவாக்காது. அரசின் சட்டங்களுக்கமைவான முறையில் அவற்றை முன்னெடுத்துச் செல்லட்டும்.

எந்தவிதத்திலும் அரச விரோதக் கும்பல்களோ, அரசியல் குழுக்களோ ஆட்சி அதிகாரத்தை தங்கள் கைகளில் எடுக்காதபடி தமது இணைந்த பலமான சொந்தக்கரங்களை உறுதியான முறையில் பயன்படுத்தி ஆட்சியை நடத்திச் செல்வதற்கான தார்மீக உரிமையும் மக்களால் வழங்கப்பட்ட முறையான அதிகாரமும் அரசாங்கத்திற்கே உள்ளது.

**தமிழில்:யோகர்**

## இரட்டினம் விபத்தில் எண்மர் காயம்

கண்டி- பலகொல்ல பண்டாரநாயக்க மகா வித்தியாலயத்தின் மைதானத்தில் இடம்பெற்ற களியாட்ட விழாவில், இராட்டினத்தினால் ஏற்பட்ட விபத்தில் எட்டுப்பேர் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பலகொல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த அனைவரும் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இராட்டினம் மேலெழும்பியதும் வயதான பெண்ணொருவர் தன்னுடைய இருக்கையை மாற்றிக்கொள்வதற்கு முயன்றபோது இராட்டினத்தின் சமநிலை அற்றுப் போனதனால் இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்த பொலிஸார், கண்டி பெரஹராவையொட்டி முன்னெடுக்கப்படும் இவ்வாறான களியாட்ட விழாக்களின் போது மக்கள் மிக அவதானத்துடன் இருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளனர். (இ-7-10)

## சிகிரியாவை குறிவைக்கும் வெளிநாட்டுப் பயணிகள்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சிகிரியா குன்று போன்ற உலக பாரம்பரிய சொத்துக்களை பார்வையிடுவதில் அதிகளவான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சிகிரியா குன்றை நோக்கி படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள் அங்குள்ள கற்களின் மீது பயணிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவதாக மத்திய கலாசார நிதியத்தின் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு நாளைக்கு 5000 பேர் சிகிரியாவுக்கு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-10)

## தோட்டத்திலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

தங்கல்ல ரன்ன கோடயிம்புரவத்தை பகுதியிலுள்ள வீட்டுத்தோட்டத்தில் இருந்து சிசுவின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சிசு நேற்று முன்தினம் காலை பிறந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். பிரதேசவாசி பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமையவே பொலிஸார் இந்த சடலத்தை கண்டெடுத்துள்ளனர்.

குழந்தையை பிரசுவித்துள்ளதாக சந்தேகிக்கப்படும் 21 வயதுடைய யுவதி பொலிஸ் பாதுகாப்பின் கீழ் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-10)

## தொடரும் இறக்குமதியால் கவலையில் விவசாயிகள்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் சந்தைகளில் குறைவான விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் உள்நாட்டு விவசாயிகள் பாதிக்கப்படுவதாக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.


இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை சந்தைகளில் 40 தொடக்கம் 50 ரூபாவிற்கு விற்கப்படுவதாகவும் விவசாயிகள் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7-10)

## மலேசியாவில் 9லட்சம் லீற்றர் டீசல் கொண்டு சென்ற கப்பல் கடத்தல்



(கோலாலம்பூர்)

மலேசியாவில் 9 இலட்சம் லீற்றர் டீசலை கொண்டு சென்ற கப்பல் நேற்று கடத்தப்பட்டது என்று அந்நாட்டு கடல்வழி போக்குவரத்து அதிகாரிகள் கூறியுள்ளனர். (இ)



# நல்லூர் ஆலய சூழலில் இன்று

## தெய்வீகச் சொற்பொழிவு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு உலக சைவத்திருச் சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் ''தெய்வீகச் சொற்பொழிவு'' இன்றும் இடம்பெறும். மாலை 6.30 மணிக்கு நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப் புலவர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சைவப்புலவர் ச.முகுந்தன் "அலங்காரக்கந்தன்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தெய்வீக இசைச்சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க்கந்தனின் பெருந்திருவிழாவினை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7மணி முதல் 8 மணிவரை நடத்தி வரும் தெய்வீக இசைச்சங்கமத்தில் இன்று வியாழக்கிழமை செல்வி. சுபாங்கி கெங்காதரக் குருக்கள், செல்வி சிந்துஜா சோமசபேசக்குருக்கள் ஆகியோரின் வீணை இசை இடம்பெறும். (இ-3)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லைக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர்கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை ''ஆறுமுகமான பொருள்'' எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர், செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் சிறப்புச் சொற் பொழிவாற்றுவார். (இ-7)

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று 18 ஆம் திகதி வியாழக்கிழமை பாட்டு- மா.யோகேஸ்வரன், வயலின்-கே.குகபரன், மிருதங்கம்- க.கண்ணதாஸ், முகர்சிங்-ந.சதீஸ்குமார் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## அருள்நெறி விழாவில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க்கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா இன்றும் பி.ப. 3 மணி தொடக்கம் மாலை 6மணிவரை நடைபெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி. காண்டீபன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலாளர் எஸ். கிருஷ்ணேந்திரன் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் கு.பாலசண்முகன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)


## ஆன்மீக அருளுரைகள்

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ''ஆன்மீக அருளுரைகள்'' (ஞானயக்ஞம்) எனும் நிகழ்வு நல்லூர் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இரவு 7.15 மணி தொடக்கம் 8 மணிவரை இடம்பெறும் இந்நிகழ்வில் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ''செயலா ஞானமா சிறந்தது'' எனும் தலைப்பில் அருளுரை வழங்குவார். (இ-3)

## வில்லிபாரதத்தில் 'பீஷ்மர் சபதம்'

நல்லூர்க்கந்தப்பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவமகா சபை முப்பது வருடங் களுக்கு மேலாக நடத்தி வரும் தெய்வீகத்தொடர் இசைப் பேருரை-நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் இந்நிகழ்வில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவின் வில்லிபாரதம் பற்றிய தொடரில் இன்று வியாழக்கிழமை பீஷ்மர் சபதம் பற்றி சங்கீத கதாப் பிரசங்கம் நடைபெறும். (இ-3)

## நல்லூரானுக்கு இன்று 11 ஆம் திருவிழா



## நலம் அருள்வாய்



நெற்றிக்கண்ணில் அவதரித்த
வெற்றிவேல் முருகா
நக்கீரன் தமிழ் பாடி
நன்றே உனைப் போற்ற
சுற்றி வந்து பகை முடித்த
சக்தி உமை பாலா
பற்றிப் படர் வினை அறுத்த பால முருகா
நமக்கும் நலம் அருள்வாய்
நல்லூர் அமர்ந்த நாயகனே

-சி.திவ்வியா,
யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

கலியுகந் தன்னிலே காண்கின்ற காட்சிகள்
கவலைக் குகந்ததன்றோ
வலிபோக்கிக் கலிநீக்கி வாழ்வாங்கு வாழவே
வழியின்றிப் போதல்நன்றோ
மலிவாகிப் போனதே மாபஞ்ச பாதகம்
மகிழ்ச்சியைக் காண்பதென்றோ
நலிவாகி மெலிவாகிப் பலியாகி வீழ்வதோ
நல்லூரின் கந்தவேளே!

*கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்*

## அதிகாலையில் அலங்காரக்கந்தன்

அதிகாலையில் துயில் எழுந்து அவசரமாய் நீராடி
அலங்காரக்கந்தனின் ஆயத்த மணி அடிக்கமுதல் ஆலயம் சென்று
ஆடவர் கூட்டத்தின் அரோகரா ஒலியில் வெளிவீதி தனிலே
வேண்டிய வரம் வேண்டி பலரும் விளையாட்டாக
சிலரும் சரீரத்தை பாதமாக்கி பவனிவரும் வேளையிலே
தேர்முட்டி கழந்து திருக்கோபுரம் தெரிகையிலேயே
சற்று சிரம் தூக்கிப் பார்த்தாயா?
திருச்செந்தூரும் தோற்குமையா!

-விழி
வவுனியா பல்கலைக்கழகம், கொக்குவில்.

## 'தொந்தி வயிறுடை தம்பியை நிதம் ஏற்றிடுவோம்'



கந்தனை எண்ணி வணங்கிடுவோம் –எம்
பந்தவினைகளை அழித்திடுவோம்
சந்தமிகுதிருப்புகழ் படித்திடுவோம்
நல்லை சரவணபவனை சரணடைவோம்
வல்லமை யாம் பெற்றிடவே வீதி வலம்
வந்து பணிந்திடுவோம் மங்கைமார்
புடைசூழ வரும் நல்லை கந்தனை
சென்று ஓர் முறை தொழுதிடுவோம்
தொந்தியுடை தம்பியை நிதம்பாடி
ஏற்றிடுவோம்


-வேலணைபாலா ஜே.பி.
(ப.பாலசுப்பிரமணியம்)

## ஆறுதலைத் தந்திடுவாய்

நல்லையிலே கோயில் கொண்டு அடியவர்க்கு அருள் புரியும்
எல்லையில்லா பரம் பொருளே எங்கள் குருநாதா
வீண் வம்புகளில் வீழ்ந்திடாமல் துணை புரிவாய் வேலா
நீ வேண்டும் வரம் ஈந்து எம்மைக்காத்தருள வேண்டும்
சங்கடங்கள் நீக்கும் எங்கள் சங்கரனின் புதல்வா
அபயமளித்து எங்கள் குறைகளையும் பொறுமையுடன் கேட்டு
ஆனந்தமாய் இப்புவியில் அடியவர்கள் வாழ
ஆறுதலைத் தந்திடுவாய் அப்பனே முருகா

-மு.விக்னேஸ்வரன்,கோப்பாய்.

## தங்கப் புதையல் புகையிரதத்தை மீட்க பூமியைத்தோண்டும் பணி ஆரம்பம்



போலந்தில் மண்ணில் புதைக்கப்பட்ட நாஜி தங்க புதையல் புகையிரதத்தை மீட்க பூமியைத் தோண்டும் பணி தொடங்கியது.

இரண்டாம் உலகப் போரின் போது சர்வாதிகாரி ஹிட்லரின் நாஷிப் படைகள் ஆதிக்கம் செலுத்தின. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. அங்கு சுரங்க புகையிரதங்களை இயக்கி இராணுவ ஆயுதங்கள், தளபாடங்கள், தங்கம் மற்றும் வைரங்களை இரகசியமாக கடத்தி வந்தனர்.

இந்த நிலையில் பிறநாடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட தங்கம்மற்றும்வைர நகைகள், போர் ஆயுதங்களுடன் 'நாஜி' புகையிரதம் ஒன்று போலந்தின் சுரங்கப் பாதையில் சென்று கொண்டிருந்தது.

இந்த புகையிரதம் போலந்தில் வால்பிரசிக் அருகே 3 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளக்சியாஷ் கேஸ்டில் என்ற இடத்தில் வந்த போது திடீரென மாயமானது. அப் போது 'நாஜி'க்களுக்கு க்டும் போட்டியாக திகழ்ந்த சோவியத்ரஷ்யாவின் செம்படை (சிவப்பு படை) வ்ரோகிலோ என்ற இடத்தில் சுரங்க புகையிரத பாதையை மூடிவிட்டது. இச்சம்பவம் கடந்த 1945 ஆம் ஆண்டு நடந்தது.அந்த புகையிரதம் பூமிக்குள் அப்படியே புதைந்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே பல கோடி மதிப்புள்ள தங்கம் மற்றும் வைரத்துடன் புதைந்து கிடக்கும் புகையிரதத்தை கண்டுபிடித்து மீட்கும் பணி பல ஆண்டுகளாகநடந்துவருகிறது.

போலந்தை சேர்ந்த பியோடர் கோபர், ஜேர்மனியை சேர்ந்த ஆண்ட்ரியாஸ் ரிச்டர் ஆகிய ஆராய்ச்சியாளர்கள் இதில் ஈடுபட்டனர். பூமிக்குள் கதிர்வீச்சு மூலம் ஸ்கான் செய்த போது வால்பிரிச் பகுதியில் சுரங்கப் புகையிரதப் பாதை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, அங்கு தங்கத்துடன் புதைந்து கிடக்கும் புகையிரதத்தை மீட்க பூமியை தோண்டும்பணி தொடங்கியது. அதே நேரத்தில் அங்கு இதுபோன்று புகையிரதம் எதுவும் புதைக்கப்படவில்லை என போலந்து பல்கலைக்கழக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## நாவலர் எழுதிய நூல்களின் பிரதிகள் விரைவில் யாழ்.நூலகத்துக்கு வரும்

(யாழ்ப்பாணம்)

தஞ்சாவூர் கும்பகோணம் நூலகத்தில் உள்ள ஆறுமுக நாவலர் எழுதிய நூல்களின் பிரதிகள் யாழ். பொதுநூலகத்துக்கு விரைவில் எடுத்து வரப்படவுள்ளதாக யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

தேச இலங்கை மன்னன் எழுதிய "சர்வதேச மனித உரிமைச் சாசனம் 1948" எனும் நூல் வெளியீட்டு விழா நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்.

யாழ். மண் என்பது இலக்கிய மண், அறிவு நிறைந்த மண் என்று அனைத்து இடங்களிலும் கூறிவருகிறேன். இங்குள்ள எழுத்தாளர்கள் அதை தொடர்ந்தும் நிரூபித்துக் கொண்டே வருகிறார்கள்.

இங்குள்ள எழுத்தாளர்கள் அதிகளவான நூல்களை எழுதி வெளியிடுகிறார்கள். நம் தாய்மொழி ஒன்றாக இருப்பதால் பெருமையாக உள்ளது.

உலகத்தில் எல்லோரும் விரும்பும் அரசியல் ஜனநாயகம், மனித உரிமைகளை பற்றி ஒருவர் நூல் எழுதுகிறார் என்றால் அவர் ஜனநாயகத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கை என்பதை குறிக்கின்றது. அவர்களுடைய எண்ணம் நேர்மறையாகத்தான் இருக்கும். எதிர்மறையாக இருக்காது என்பதே உண்மை.

வடக்கில் உள்ள எழுத்தாளர்களின் நூல்கள் அதிகளவாக இந்தியாவில் கிடைப்பதில்லை. வேறு நாடுகளில் கிடைக்கிறது.ஆனால் சமீபத்தில் தஞ்சாவூர் சென்றிருந்தேன். கும்பகோணம் பகுதியில் உள்ள நூலகத்தில் ஆறுமுக நாவலர் எழுதிய சில நூல்கள் இன்றும் இருக்கின்றன. நூலகரிடம் அதைக் காட்டுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதனுடைய பிரதிகள் யாழ். பொது நூலகத்துக்கு கொண்டுவரப்படும். அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. விரைவில் கொண்டுவரப்படும்.

இங்கு நிறைய எழுத்தாளர்கள் உள்ளார்கள். உலகத்தில் தமிழ் எழுத்தாளர்கள் அதிகமாக உள்ளார்கள். அதிலும் இலங்கையில் தான் அதிகமான தமிழ் எழுத்தாளர்கள் உள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## கலிபோர்னியாவில் காட்டுத்தீ பரவலால் 82 ஆயிரம் பேரை வெளியேற உத்தரவு

தெற்கு கலிபோர்னியாவில் ஏற்பட்டுள்ள பாரிய காட்டுத் தீயின் காரணமாக, அப்பிரதேசங்களில் உள்ள சுமார் 82 ஆயிரம் பேருக்கு அங்கிருந்து வெளியேறுவதற்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிடப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவின் சென் பேர்னாடினோவில் உள்ள மலைப்பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயின் காரணமாக இதுவரை சுமார் 9 ஆயிரம் ஏக்கர்கள் தீப்பற்றி அழிந்துள்ளன. இந்நிலையில்தொடர்ந்தும் தீ ஏனைய பகுதிகளுக்கும் பரவியவாறே உள்ளது.

இந்நிலையில், லொஸ் ஏன்ஜல்ஸ் நகரின் கிழக்குப் பகுதியில் உள்ள சுமார் 82 ஆயிரம் பொதுமக்கள் தமது இடங்களில் இருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்று கலிபோர்னியாவின் காடுகள் மற்றும் தீ பாதுகாப்பு துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளனர்.

அப்பகுதியில் இதுவரையில் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் என சுமார் 175 கட்டடங்கள் தீயினால் சேதமடைந்துள்ள நிலையில், தொடரும் காட்டுத் தீயின் காரணமாக சேதங்கள் மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

எனவே, இக்காட்டுத் தீயினைக் கட்டுப்படுத்துவதற்காக சுமார் 700 தீயணைப்புப் படை வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனினும் காட்டுத் தீ மிகவும் வேகமாகப் பரவி வருவதனால் தீயை அணைப்பதில் படையினர் பல சவால்களை எதிர்கொள்வதாக அமெரிக்க காட்டுத் தீயணைப்புப் பிரிவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்தக் காட்டுத் தீயின் காரணமாக ஏற்கனவே லஸ் வேகாஸ் மற்றும் லொஸ் ஏன்ஜல்ஸ் ஆகிய நகரங்களுக்கு இடையிலான நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காட்டுத் தீ ஏற்பட்டமைக்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் தற்பொழுது இடம் பெற்று வருகின்றன. (இ-7)

## வீண்போகாதையா உன் தமிழ்த் தேசியப்பற்றும் தன்மான உணர்வும் விட்டுச் சென்ற விழுதுகள்நாம் விருட்சமாய் எழுந்து நிற்போம்

மனிதர்களும், காலமாகியும்
காலமாக வாழவே செய்கிறார்கள்....
வரதராஜனைப்போல்... ஆமாம்...
வரதம் எமக்கு கடவுள் தந்த வரம் தான்...

எல்லோரும் வாழ்வியலை பொருளியலாக்கியவர்கள்தான்
ஆனால் இவரோ பொருளியலையே தன் வாழ்வியலாக
மட்டுமல்ல வாழ்வியக்கமாக மாற்றிக் கொண்டவர்
வாழ்வாங்கு வாழ்தலே வாழும் வாழ்விற்குப் பொருள் என
வாழ்ந்து காட்டியவர்... பொருளியலாளன் என்ற
சொல்லுக்கு திசைதோறும் அர்த்தம் கூறியவர்

புன்னகைக்கு பொருள் அவர் முகத்திலுண்டு
பொருளியலின் அர்த்தம் அவர் நாவிலுண்டு
இன் தமிழன் உணர்வு அவர் நெஞ்சிலுண்டு
என்றென்றும் மாறா மண்பற்றுமுண்டு
சென்ற இடம் வென்று வரும் அறிவுமுண்டு
சேர்ந்தோரை முன்னேற்றும் மனமும் உண்டு
எந்த நிலைவந்தாலும் தளரா நெஞ்சுறுதி உண்டு
அரசியலில் அவர்க்கு ஒரு நேர்மையுண்டு
"வரதர்" தலை வணங்காத மனிதனென்று
வரலாற்றில் அவர்க்கு ஓர் இடமுண்டு
உரிமை என்று வந்துவிட்டால் குரலோ உயரும்
உதட்டசைவில் கனல் பறக்க புருவம் உயரும்
நெருப்பெனவே கருத்துதிர கைகள் உயரும்
நீதிக்காய் நின்ற குரல் ஓய்ந்ததென்ன
நிமிர்ந்த நெடுந்தோற்றம் மறைந்ததென்ன

வீதிச் சுவர்களில் பொருளியல் என்ற எழுத்துக்கள்
தென்படும் சமயங்களில் பொருளியல் மாணவர்களுடன்
அளவளவும் போதுகளில் ..
தமிழர் தேசிய வளங்கள் பற்றிய எண்ணங்கள்
எழும்வேளைகளில்...

**வரதராஜன் என்ற மானுடனின் உயிர்ப்பு**
**மீண்டும் மீண்டும் நிகழவே செய்யும்.**



சென்றன ஆண்டுகள் இரண்டு

(5645)

தமிழ்த் தேசியப்பற்றாளர்

**சின்னத்துரை வரதராஜன்**

(ஈழத்தின் பிரபல பொருளியல் பேராசான்,
முன்னாள் விரிவுரையாளர், பொருளியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்,
ஆலோசகர் யாழ்.ஏய்ட் அறக்கட்டளை, கலிங்கம் பல்சுவை இதழ்)

– குடும்பத்தினர்

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2016–16.09.2016



*ஒப்படைத்த காரியங்களை ஒழுங காகச் செய்து முடிக்கும் மேஷ ராசி நேயர்களே!*

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிநாதன் செவ்வாய் சொந்த வீட்டில் பலம் பெற்று சஞ்சரிக்கின்றார். எனவே, ஆரோக்கியத்திற்காக செலவிட்ட தொகை குறையும். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு செயற படுவீர்கள். மற்றவர்கள் மகிழ்ச்சியடைய இதுவரை வழிவகுத்துக் கொடுத்து வந்த நீங்கள், இப்பொழுது உங்களுடைய குடும்பம் மகிழ்ச்சியடைய வழிகிடைப்பது கண்டு பெருமைப்படுவீர்கள்.

புத்திர ஸ்தானத்தில் 4 கிரகங்கள் பலம் பெற்றுச் சஞ்சரிக்கின்றன. சூரியன், புதன், சுக்ரன் ஆகிய மூன்றும் இணைந்து சஞ்சரிப்பது யோகம் தான். தனாதிபதி, சகாய ஸ்தானாதிபதி, பாக்யாதிபதி ஆகியோர் இணைந்து பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பணக்கவலையும் மனக்கவலையும் தீரும். அனைவரும் இணக்கத்துடன் நடந்து கொள்வர்.

பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். முல்லை மலர்மாலை அணிவித்து வழிபடும் குருபகவான் இப்பொழுது 6ஆம் இடத்திற்கு வந்துவிட்டார். ஆறிலே வந்த குருவை நேரிலே சென்று வழிபட்டால் ஊரிலே உள்ள பகை மாறும். உங்கள் எதிர்பார்ப்புகளும் நிறைவேறும்.

குரு பார்வை 2ஆம் இடத்தில் பதிவதால் குடும்பத்தில் ஏற்பட்ட சலசலப்பு மாறும். கலகலப்பு கூடும். முக்கியப் பிரமுகர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர். தொழில் வளர்ச்சி சென்ற மாதத்தை விட சிறப்பாகவே இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்கபலமாக இருந்து உங்களை விட்டு விலகியவர்கள் மீண்டும் வந்திணைவர். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். திசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு இது போன்ற யோகம் வரும்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் வக்ரமாக இருந்தாலும் கூட, அதனால் சில தடைகளும், குறுக்கீடுகளும் வரத்தான் செய்யும். தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி அமைத்துக் கொடுப்பது வழிபாடுகள் தான் என்பதால், சனி பகவானை நம்பி

## குடும்ப முன்னேற்றம் கூடும்!

க்கையோடு வழிபாடு செய்யுங்கள். சனி பகவான் வீற்றிருக்கும் ஆலயத்திற்கு யோக பலம் பெற்ற நாளில் சென்று வழிபாடு செய யுங்கள். மணியான வாழ்க்கை அமையும்.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

ஓகஸ்ட் 26ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் நீச்சம் பெறுகின றார். தன சப்தமாதிபதி நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் திருப்திகரமாக இருக்காது. ஒரு சிலருக்கு உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம். வெளி மாநிலங்களுக்கும் தூரதேசங்களுக்கும் செல்லும் வாய்ப்பு வந்தாலும் அதைக் கைப்பற்றிக் கொள்ள இயலாமல் போகலாம். விரயங்கள்




கூடும் நேரமிது.

**செல்வ நிலையை உயர்த்தும் செவ் வாய் பெயர்ச்சி!**

கடந்த ஆறுமாத காலமாக அஷ்டமத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய், அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டு 9ஆம் மாதமான செப்டெம்பர் மாதத்தில் 9ஆம் திகதி அன்றைக்கு 9ஆம் இடத்திற்குச் செல்கின்றது. இனி பொன், பொருள் சேர்க்கையும் புகழேணியின் உச்சிக்கு செல்லும் வாய்ப்பும் கிடைக்கப் போகின்றது. மண், பூமி சேர்க்கை ஏற்படும். மாற்று இனத்தவர்களால் நன்மை உண டாகும். துர்முகி ஆண்டில் இதுவரை தொடர்ந்த துன்பங்கள் எல்லாம் இனி துள்ளியோடப் போகின்றது. செவ்வாய் பெயர்ச்சி அன்றைக்கு முருகப்பெருமானை வழிபாடு செய்வது நல்லது. இம்மாதம் விநாயகர் சதுர்த்தியன்று விநாயகபெருமானை வழிபாடு செய்வதன் மூலம் அனைத்து நலன்களையும் பெறலாம்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் தன ஸ்தானத்தை குரு பார்ப்பதால் தனவரவு திருப்திகரமாகவே இருக்கின்றது. மனதளவில் செய்ய நினைத்த காரியத்தை மறு நிமிடமே செய்து முடிப்பீர்கள். சுப விரயம் அதிகரிக்கும். ஓகஸ்ட் 26 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 8ஆம் திகதி வரை கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவர் மற்றும் குடும்பத்தினரோடு அனுசரித்துச் செல்வதன் மூலமே அனுகூலங்கள் அதிகமாகும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவீர்கள். பிரபலஸ்தர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து வெற்றியைத் தேடிக் கொடுப்பர். செப்டெம்பர் 9ஆம் திகதிக்கு மேல் செல்வச் செழிப்பு மேலோங்கும். ஆனைமுகன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:**

ஓகஸ்ட்: 19, 20, 25, 26, 30, 31

செப்டெம்பர்: 10, 11, 12, 16

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



*மனதில் பட்டதை மறைக்காமல் எடுத்துரைக்கும் ரிஷப ராசி நேயர்களே!*

ஆவணி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்ரன் தனாதிபதி புதனோடு இணைந்து சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே, ஆரம்பம் கோலாகலமாகவே உள்ளது. சுகங்களும் சந்தோஷங்களும் எதிர்பார்த்த அளவிற்கு கிடைக்கும்.

ராசிநாதன் மாதத்தொடக்கத்தில் நல்ல நிலையில் சஞ்சரிப்பதால் குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். கூட்டாளிகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். அரசியல்வாதிகளால் அனுகூலம் கிடைக்கும். ராஜகிரகமான சூரியன் புதனோடு இணைந்து சஞ்சரிப்பதால் புத ஆதித்ய யோகம் உருவாகிறது. எனவே, முக்கிய புள்ளிகள் உங்கள் இல்லம் தேடிவந்து முன்னேற்றத்திற்கு வித்திடுவர்.

செவ்வாய், சனி பார்வை உங்கள் ராசியில் பதிவதால் உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது. பூமி வாங்கும் யோகம் உங்களுக்கு ஏற்பட்டாலும் வாங்கிய பூமியில் சில பிரச்சினைகளும் உருவாகலாம். உடன் பிறப்புகளால் விரயங்களும் உண்டு. வீட்டுப் பிரச்சினைகளும் தலை தூக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக குருவின் பார்வை பலம் ஒன்றுதான் உங்களுக்கு கைகொடுத்து உதவப் போகின்றது. இதுவரை உங்கள் ராசிக்கு 4இல் இருந்த குரு, அர்த்தாஷ்டம குருவாக இருந்து அல்லல்கள் பலவற்றையும் கொடுத்திருக்கலாம். இனி அந்தக் கவலை மாறப் போகின்றது. பஞ்சம ஸ்தானத்தில் குரு பவனி வரத் தொடங்கிவிட்டார். தொழிலில் மிஞ்சும் பலன் கிடைக்கும். மிக வேகமான முன்னேற்றம் வந்து சேரும்.

நஞ்சுண்ட சிவபெருமானுக்குரிய நாளாக விளங்கும் பிரதோஷத்தன்று, நந்தியெம்பெருமானை வழிபட்டால் துயரங்கள் பஞ்சாய்ப் பறக்கும். உத்தியோகத்தில் உயர்வும் உடன் இருப்பவர்களால் நன்மையும் கிடைக்கும். சப்தமச் சனி விலகும் வரை சற்று பொறு

## வருமானம் திருப்தி தரும்!

மையைக் கடைப்பிடிப்பது நல்லது. கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்பட்டால் முன்னேற்றம் கூடுதலாக கிடைக்கும். நவக்கிரகங்களை பூஜிப்பது நல்லது.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

இதுவரை உங்கள் ராசிநாதன் சுக்ரன் சுக ஸ்தானம் எனப்படும் 4ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்தார். ஓகஸ்ட் 26ஆம்திகதி முதல் கன்னி ராசியில் சஞ்சரித்து நீச்சம் பெறப்போகின்றார். ராசிநாதன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உடல் ஆரோக்கியக் குறைபாடுகளும் உள்ளத்தில் அமைதிக் குறைவும் உருவாகும். இருப்பினும் 6ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால், கெட்டவன் கெட்டிடின் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கு ஏற்ப திடீர் மாற்றங்கள் பலவும் நடைபெறும். நன்மைகள் ஏற்படும். குறிப்பாக உத்தியோ




கத்தில் திடீர் மாற்றங்களும் ஊதிய உயர்வும் வந்து சேரும். பணி நிரந்தரம் பற்றிய தகவல் ஒரு சிலருக்கு கிடைக்கும். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த புதிய வழி பிறக்கும்.

**அஷ்டமத்துச் செவ்வாயின் ஆதிக்கம்!**

இதுவரை சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய், செப்டெம்பர் 9ஆம் திகதி அஷ்டமத்திற்கு அடியெடுத்து வைக்கப் போகின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. மருத்துவச் செலவுகள், விரயங்கள், மனக்கவலை, உழைப்பிற்கேற்ற பலன் இல்லாமை, உடன்பிறப்புகளின் பகை, களைப்பின்றி பணிபுரிந்தாலும் கடைசி நேரத்தில் ஆதாயம் குறைவு போன்ற பலவகையான இன்னல்களுக்கு ஆளாகும் சூழ்நிலையை அஷ்டமத்துச் செவ்வாய் வழங்கப் போகின்றது. ஆரோக்கியத் தொல்லைகளும் அதிகரிக்கும். மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தை சீராக்கிக் கொள்ளுங்கள். வரவறிந்து செலவு செய்தால் கடன்சுமை கூடாது. வழிபாட்டிலும் கவனம் செலுத்துங்கள். இம்மாதம் செவ்வாய்க்கிழமையன்று முருகப்பெருமானையும் சனிக்கிழமை தோறும் அனுமனையும் வழிபட்டு வாருங்கள். சதுர்த்தியன்று செய்யும் விநாயகர் வழிபாடு சஞ்சலங்களைத் தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் வரவும் செலவும் சமமாகும். வாய்ப்புகள் வந்தாலும், அதை உபயோகப்படுத்திக்கொள்ள இயலுமா? என்பது சந்தேகம் தான். மின்சாதனங்களையும் விலை உயர்ந்த பொருட்களையும் கையாளுவதில் கவனம் செலுத்துங்கள். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே கணவன்-மனைவிக்குள் விருப்பங்கள் நிறைவேறும். தொழிலில் ஏமாற்றம், தோழிகளிடத்திலும் ஏமாற்றம் என்ற நிலை உருவாகலாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. ஆரோக்கியத்திற்கென்று ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை அமையும். உத்தியோகத்தர்களுக்கு நீண்ட தூரத்திற்கு மாறுதல் கிடைக்கலாம். பயணங்களில் கவனம் தேவை. விநாயகர் வழிபாடும் நந்தி வழிபாடும் வெற்றியை வழங்கும்.

பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:

ஓகஸ்ட்: 17, 18, 21, 22, 28, 29

செப்டெம்பர்: 1, 2, 14, 15

(தொடரும்)

# விசாரணைகளின் விளைவுகளை விரைவில் எதிர்கொள்வார் கோத்தா

## சரத் பொன்சேகா எச்சரிக்கை

(கொழும்பு)

**முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான இரண்டு முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் 90 வீதம் முடிந்துவிட்டதாகவும் அதன் விளைவுகளை அவர் விரைவில் எதிர்கொள்வார் என்றும் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக இரண்டு முறைப்பாடுகள் கிடைத்தன. முறைகேடான வகையில் இலங்கை விமானப்படைக்கு 7 மில்லியன் டொலர் செலவில் மிக் போர் விமானங்களைக் கொள்வனவு செய்தது முதலாவது முறைப்பாடு.


டி.ஏ.ராஜபக்ஷ நினைவிடத்தை புனரமைப்பதற்கு 90 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியது இரண்டாவது குற்றச்சாட்டு.

இந்த இரண்டு முறைப்பாடுகள் தொடர்பாகவும். நடத்தப்படும் விசாரணைகள் 90 வீதம் பூர்த்தியாகியுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அவர் விரைவில் பதிலளிக்க வேண்டும்.

எழுத்துமூலமான ஆதாரங்கள் ஆவணங்களின் அடிப்படையில் தான் நாமல் ராஜபக்ஷ விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் குறித்தும் ஊழல்கள் குறித்தும் விசாரிப்போம் என்று நாம் மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளோம்.

அதனைத் தான் நாம் செய்கிறோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ



தனது குடும்பத்துக்கு வெள்ளையடிக்க முனைகிறார். அதற்கு காலம் தாமதமாகிவிட்டது.


சட்டத்தை மீறாத படையினர் எவரும் காணாமற்போனோர் பணியகத்தினால் இலக்கு வைக்கப்படமாட்டார்கள்.

இந்தப் பணியகம் வெளிநாட்டு சக்தியின் அழுத்தங்களுக்காக அமைக்கப்பட்டதல்ல.

இலங்கையில் எல்லாமே வெளிப்படையாகவும் சட்டரீதியாகவும் நடைபெறுகிறது என்று அனைத்துலக சமூகத்துக்கு காட்டவே காணாமற்போனோர் பணியகம் அமைக்கப்பட்டது.

இதனை நாம் அனைத்துலக சட்டங்கள், மனித உரிமைச் சட்டங்களுக்கு மதிப்பளிப்பதாகவே பார்க்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

# விமல் வீரவன்ச, உதய கம்மன்பிலவுக்கு சவால் விடுகின்றார் மகிந்த அமரவீர







வரப்போகும் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியுமா? என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மற்றும் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோருக்கு சவால் விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலரும் அமைச்சருமான மகிந்த அமரவீர.

"விமல் வீரவன்சவும் உதய கம்மன்பிலவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உதவியுடன் தான் தப்பிப் பிழைத்தவர்கள். அவர்களுக்கென்று தனியான வாக்கு வங்கி கிடையாது.

தமது அரசியல் நலனுக்காக, இலங்கை சுதந்திரக் கட்சிக்குப் பின்னால் ஒட்டிக் கொண்டவர்கள் அவர்கள்.

ஐ.நா. பணியகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி அனைத்துலக சமூகத்துக்கு கோபத்தை ஏற்படுத்தினார் விமல் வீரவன்ச. அதன் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தோற்கடிக்கப்படுவதற்கான வழி திறக்கப்பட்டது.

மகிந்த அரசாங்கத்தை 162 நாடுகளின் எதிரியாக இவர்களே மாற்றினர். அவர்கள் பற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் நன்றாக அறிவார்கள்" என்றும் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (இ-7-10)

# போர் முடிவுக்குவர யார் காரணம் மக்கள் நன்றாக அறிவார்களாம்

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

யார் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார்கள் என்பதனை மக்கள் நன்கு அறிவார்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை பார்வையிட்டு திரும்பிய போது அவர் ஊடகங்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

போரை முடிவுறுத்தியதில் தமக்கும் பங்கு உண்டு என சிலர் கூறுகின்றார்கள். இவ்வாறான கூற்றுக்களை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு மக்கள் முட்டாள்கள் இல்லை.

வடக்கில் எப்போது போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது என்பதனை மக்கள் அறிவார்கள்.

போர் முடிவுறுத்தப்பட்டமை குறித்து பல்வேறு நபர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட முடியும். எனினும் மக்கள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டுள்ளனர்.

எனது மகன் சிறைச்சாலையில் நன்றாக இருக்கின்றார். அதுபற்றி பேசுவதற்கு இனி ஒன்றுமில்லை என மகிந்த ராஜபக்ஷ மேலும்



தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## வேலைக்காரர்களை நம் வழிக்குக் கொண்டுவருவது எப்படி?

நல்ல வேலைக்காரர்கள் அமைவது என்பது இந்தக் காலத்தில் அபூர்வமாகிவிட்டது.

இவர்களைச் சமாளித்து வேலை வாங்குவது என்றால் சாதாரணமா? மகாகஷ்டம்.

இது விரிந்து பரந்த உலகம். இராமசாமி இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறார் குப்புசாமி என்று கிளம்பிவிடும் வாய்ப்பு இன்று வேலை செய்பவர்களுக்கு அதிகம். ஆதலால், மலருக்கு மலர் தாவும் வண்டுகள் போல் வேலையாட்கள் தாவத்தயாராக இருப்பார்கள். இவர்களை ஓரளவு நம்மிடத்தில் தங்கவைப்பது தான் நம்முடைய முதல் வெற்றி–

வேலைக்கு ஆட்களை அமர்த்தும் எவரும் ஓர் அடிப்படை உண்மையை உணர்ந்தாக வேண்டும்.

அது மனிதன் என்றாலே குறைபாடு உடையவன் என்பதே. எனவே மாசற்றமணியாய், புடம் போட்ட தங்கமாய், 100 இற்கு 100 நாம் எதிர்பார்க்கும் வகையில் எவரும் அமையமாட்டார்கள் என்பதை நாம் அவசியம் உணர்ந்தாக வேண்டும்.

இந்த உண்மையை உணர்ந்தாலே நமக்குப் பொறுமை வந்து விடும். குறைகளைப் பெரிதுபடுத்தும் மனோபாவம் மறைந்துவிடும்.

கண்டிப்பது என்பது சிறந்த ஆயுதம்தான். ஆனால், அதைப் பலர் அடிக்கடி பயன்படுத்தப்படுத்துகிறார்கள். அடிக்கடி பயன்படுத்தப்படும் எதற்குமே வீரியம் இருக்காது என்பதை சொல்ல வேண்டியதில்லை.

பலருக்குப் பாராட்ட மனம் வருவதே இல்லை. பாராட்டு என்றால் மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்த வேண்டும் என்று அர்த்தமில்லை. நல்ல வேளை, நான் சொல்லாமலே நீயா செய்துவிட்டாய். இல்லை என்றால் விபரீதமாகியிருக்கும் என்ற பாணியில் தட்டிக் கொடுத்தால் கூடப் போதுமானது.

நம்முடைய வேலையாட்களை விரோதிகளைப் போலும் ஆகாதவர்களைப் போலும் நடத்தாமல், அவர்கள் நம் சிரமத்தைக் குறைக்க உதவுபவர்கள் என்பதை உணர்ந்து, மிகவும் வித்தியாசம் காட்டிப் பழகுவதைத் தவிர்க்க வேண்டியதுதான். அதற்காக அடிமைகளைப் போல நடத்தக் கூடாது.

அவர்களுடைய தேவைகளையும் மனக் குறைகளையும் குறிப்பால் உணர்ந்து, அவர்களாக அணுகு முன் செய்துவிட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, பிரியத்தை உள்ளுக்குள் வைத்து சமயம் வரும் போதெல்லாம் அதைத் தயங்காமல் வெளிப்படுத்த வேண்டும்.

அவர்களுக்கு உடல் நலமில்லை என்றால் ஓடிப் போய்ப் பார்க்க வேண்டும். அவர்கள் வீட்டு நல்லது, கெட்டதுகளில் தவறாமல் பங்கு கொள்ள வேண்டும்.

நாம் இவர்களைவிட்டுப் பிரிந்து சென்று வேறு இடத்தில் சேர்ந்தால், சம்பளம் வேண்டுமானால் சற்று அதிகமாகக் கிடைக்கலாமே தவிர, இந்த மதிப்பும் மரியாதையும் வேறு எங்கும் கிடைக்காது. நமக்கு ஏதும் என்றால் நம்மவர் இருக்கவே இருக்கிறார், என்னும் படியான எண்ணம் ஏற்படும்படியாக நாம் நடந்து கொண்டால்தான் நாம் வேலைக்காரர்களை நம் வழிக்குக் கொண்டு வர முடியும்.

இதைவிடுத்து நல்ல வேலைக்காரர்கள் அமைவதென்றால் அதற்கெல்லாம் போன பிறவியில் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்கிற பாணியில் வேதாந்தம் பேசிக் கொண்டிருப்பவர்கள் காலம் முழுவதும் அப்படியே பேசிக் கொண்டிருக்க வேண்டியது தான்.

**லேனா தமிழ்வாணன்**

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## வரலாறு பகுதி-I

ஆசிரியர்:-ஈ.ஆர்.ரி.சுரேன், யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

01) இலங்கையின் வரலாற்றை தெளிவுறக்கூறும் நூலாகக் கொள்ளத்தக்க நூல் பின்வருவனவற்றுள் யாது?
1.மகாவம்சம் 2.தீபவம்சம் 3.தாதுவம்சம் 4.போதிவம்சம்

02)டிமுண்டோ, இண்டிகா போன்ற நூல்கள் அன்றைய இலங்கை பற்றிய தகவல்களை வழங்குகின்ற இந்நூல்கள்
1.கிரேக்க மூலாதாரம் 2.உரோமமூலாதாரம்
3.சீன மூலாதாரம் 4.போர்த்துக்கேய மூலாதாரம்

03)சீதாவர்க்க சட்டன, இங்கிரிசி சட்டன, கொன்ஸ்தந்தினுசட்டனு போன்ற நூல்கள்
1.தூது காவியம் 2.புகழ் காவியம் 3.போர்க்காவியம் 4.வீரகாவியம்

04)சிகிரிய பொத்தான, சிகிரிய அலிகெல என்பன
1.கரையோர வெட்ட வெளிகள் 2.தாழ்நில ஈர வலயக் குகைகள்
3.தாழ்நில உலர் வலய குகைகள் 4.தாழ்நில உலர்வலய வெட்டவெளி பாசறைகள்

05)உப்புடன் கலக்கப்பட்ட நந்தைகளின் எச்சங்கள் கண்டறியப்பட்ட பண்டைய மனிதனின் வாழ்விடம்
1.கித்துள்கல பெலிலென 2.பாகியன்கல
3.பெல்லன் பதிபெலச 4.குருவிட்டபட்டதொம்பலேன

06)சுடப்பட்ட மட்பாண்ட உற்பத்தியும் முறையானமரணச்சடங்குகளும் இரும்பின்பாவனையும் உருவான வரலாற்றுக் கால கட்டம்
1.வரலாற்றுக்கு முற்பட்ட காலம் 2.முன்வரலாற்றுக்காலம்
3.வரலாற்றுக்காலம் 4.நவீனகாலம்

07)நிரல்(i)இல் பல்வேறு தொழில்களைச் செய்த மக்கள் வாழ்ந்த கிராமங்களும் நிரல்(ii) இல் அக்கிராமங்களுக்கு வழங்கப்பட்ட பெயர்களும் தரப்பட்டுள்ளன. அவற்றை தொடர்புபடுத்தி சரியான விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| 1.குயவர் வாழ்ந்த கிராமம் | A.மணிகாரகாம |
| 2.மீனவர் வாழ்ந்த கிராமம் | B.கும்பகாரகாம |
| 3.பட்டைதீட்டுவோர் வாழ்ந்த கிராமம் | C.கனீகாரகாம |
| 4.விவசாயிகள் வாழும் கிராமம் | D.கேவட்டகாம |

1.BDCA 2.BDAC 3.DBAC 4.BCAD

08)நிரல் 1 இல் தரப்பட்டுள்ள சொற்களுடன் தொடர்புபடும் சொற்கள் நிரல் 2 இல் இருந்து தெரிவு செய்க

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| 1.பரிகித்தகம | A.பாதுகாப்பற்ற கிராமம் |
| 2.அபரிகித்தகம | b.பெரும் நகரங்கள் |
| 3.புரம் | C.அநுராதபுரம் |
| 4.நுருபுரம் | D.வேலியிட்டு பாதுகாக்கப்பட்ட கிராமம் |

1.DACB 2.DCBA 3.DABC 4.ABCD

09) புராதன மக்கள் நீர் பிரச்சினையைக் கையாள குளத்தொகுதிகளை உருவாக்கினர். அவ்வாறான குளத் தொகுதிகள் அழைக்கப்பட்ட பெயர்
1.தொட்டபோயக 2.எம்புள் அம்பே
3.வெவ்பரபாதனய 4.மாபறுமுகா

10) தேவநம்பிய எனும் பட்டப்பெயரைப் பயன்படுத்திய இந்திய அரசன்
1.அசோகன் 2.இராஜராஜசோழன்
3.சமுத்திரபுத்தன் 4.சந்திரகுப்தன்

11) நிரல் 1 இல் தரப்பட்டுள்ள அரசர்கள் பயன்படுத்திய சிறப்புப் பெயர்கள் நிரல் 2 இல் தரப்பட்டுள்ளன. அவற்றை இணைக்கும் போது பெறப்படும் சரியான விடைத்தொகுதி

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| 1.குட்டகண்ண | A.காளிங்க சக்கரவர்த்தி |
| 2.மகாசேன | B. நரேஸ்வரர் |
| 3.காசியப்பன் | C.மின்னேரித்தெய்வம் |
| 4.நிஸ்ஸங்க மல்லன் | D.குபேரக்கடவுள் |

1.BDCA 2.BCAD 3.BADC 4.BCDA

12) காவந்தீச மன்னனுக்குப் பின் அரசுரிமை துட்டகைமுனுக்கு கிடைத்தது போன்று வசப மன்னனுக்குப் பின் அரசுரிமையைப் பெற்றவர்
1.சத்தாதீசன் 2.வங்கநாசிக்கதிஸ்ஸ 3.விஜயபாகு 4.காசியப்பன்

13) நிரல் 1 இல் பண்டைய பதவிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை நிரல் 2 உடன் இணைக்கும் போது பெறப்படும் சரியான விடை

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| 1.மஹமத | A.உணவுச்சாலை அதிகாரி |
| 2.படகரிக | B.பொருளாளர் |
| 3.பதகு | C. வழக்கங்கள் மரபுமுறை அதிகாரி |
| 4.கொதுறுகேனா | D. தலைமை அமைச்சர் |

1.DBAC 2.BACD 3.DBCA 4.DACB

14) துட்டகைமுனு மன்னன் இறந்த எல்லாளனின் சமாதிக்கு மரியாதை செலுத்தும்படி ஆணையிட்ட செயற்பாட்டை
1. போர் தர்மமாகக் கொள்ளமுடியும் 2.எதிரியின் மீது கொண்ட இரக்கம்
3.மனிதாபிமானம் கொண்ட செயற்பாடு 4.இராஜதந்திர செயற்பாடு

15) யாழ்ப்பாணத்தை வசப மன்னனின் பிரதிநிதியாக நிர்வகித்த ரிசிகிரி எனும் அமைச்சர் உருவாக்கிய விஹாரை
1.அபயகிரி 2.நாகவிஹாரை
3.ஜம்புகோள விஹாரை 4.பிரியங்கதிஸ்ஸ விஹாரை

16) நிரல் 1 உடன் நிரல் 2 ஐ இணைக்கும் போது பெறப்படும் விடைத்தொகுதி

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| 1.ஐந்தாம் மஹிந்தன் | A.பஸவந்தி நாம சால |
| 2.நான்காம் காசியப்பன் | B.வைத்தியசாலைகளுக்கான வசதிகளை வழங்கினார் |
| 3.உப திஸ்ஸ | C.சொத்திசால |
| 4.பண்டுகாபயன் | D.உபசக்கரோகநாச |

1.DBAC 2.BDAC 3.BCAD 4.BDCA

17) கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அராபிய வரலாற்று ஆசிரியர் அல்-பல-சூரி இலங்கையை அழைத்த பெயர்
1.தம்பபன்னி 2.இரத்தினதுபீபம் 3.சிவப்புத்தீவு 4.செரன்டிப்

18) கெதிஅட, கெடுகனக போன்ற வரிகளை நீக்கி மக்களுக்கு உதவியவர்
1.முதலாம் விஜயபாகு 2.நிஸங்கமல்லன்
3.துட்டகைமுனு 4.பராக்கிரமபாகு

19) ஹெமடைட், ஹெமடைட் போன்ற இரசாயனப் பெயர்களை உடைய கற்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டது
1.கேத்திரகணித கல்லாயுதங்கள் 2.செப்புலோகம்
3.இரும்புலோகம் 4.செந்நிற மட்பாண்டங்கள்

20)நில அளவீட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட முகத்தலளவைகளில் ஒன்று
1.கரீசை 2.பரமானு 3.வியத்த 4.லிக்க

21) வாய்க்கால்களில் மீன்பிடிப்பதற்காக அரசுக்குச் செலுத்திய வரி
1.தக்கபதி 2.மதரமஞ்சக்க 3.போஜக்கபதி 4.சுங்கவரி

22) நீர்நிலைகளில் வாழும் உயிரினங்களை கொல்லக்கூடாது என சட்டம் இயற்றிய மன்னன் யார்?
1.பண்டுகாபயன் 2.ஆமண்டகாமினி
3.நிஸங்கமல்லன் 4. 4 ஆம் மகிந்தன்

23) இந்நாட்டை ஆட்சி புரிந்த அரசியின் பெயர் யாது?
1.சூலசீவலி தேவி 2.லீலாவதி அரசி
3.திரிலோக சுந்தரி அரசி 4.சுகலாதேவி அரசி

24)இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் சிறப்புப் பெயர்
1.பண்டித பராக்கிரமபாகு 2.சக்கரவர்த்தி
3.கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டிதர் 4.திரிசிங்கள தீஸ்வர

25) பொலநறுவை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான உடனடிக்காரணம்
1.பொருளாதார வீழ்ச்சி
2.பலவீனமான மன்னர்கள்
3.கலிங்கமாகனின் ஆக்கிரமிப்பு
4.கலிங்க பாண்டிய வம்சங்களிடையேயான சிம்மாசன போட்டி

26) இலங்கையில் மிக நீண்ட காலமாகப் புகழ்பெற்று விளங்கிய நகரங்கள் முறையே
1.அநுராதபுரம், மாகம 2.அநுராதபுரம், யாப்பகூவ
3.மாகம, தம்பதெனியா 4.மாகம, கொழும்பு

27) பாளி மொழியிலிருந்த ஜாதகக் கதைப்புத்தகத்தை பன்சிய பணஸ் ஜாதகம் எனும் பெயரில் மொழி பெயர்த்த மன்னன்
1.நான்காம் பராக்கிரமபாகு 2.நான்காம் புவனேகபாகு
3.இரண்டாம் பராக்கிரமபாகு 4.ஆறாம் பராக்கிரமபாகு

28) மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த சமய சீர்திருத்தவாதி
1.பொட்டி ஷெல்லி 2.மைக்கல் ஆஞ்சலோ
3.ஜொஹென்ஸ் கெப்லர் 4.மார்ட்டின் லூதர்

29) இந்தியாவின் கள்ளிக்கோட்டைத் துறைமுகத்திற்கு முதன்முதலாக வருகை தந்த நாடுகாண் பயணி
1.கிறிஸ்தோபர் கொலம்பஸ் 2.பர்த்தலோமியு டயஸ்
3.பெர்டினட் மகலன் 4.வாஸ்கொடகாமா

30) மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் தொடர்பான தகவல்களை முன்வைத்தவர்
1.வில்லியம் ஹார்வே 2.பெரசல்சஸ்
3.மைக்கல் சர்வேட்ஸ் 4.ஐசாக் நியூட்டன்

31) ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வருகைதந்த சமயம் இந்தியாவில் பரவலான அதிகாரத்தை கொண்டிருந்த அரசு
1.மொகலாயப் பேரரசு 2.டில்லி சுல்தான் பேரரசு
3.விஜயநகரப் பேரரசு 4.சோழப்பேரரசு

32) 1789 இல் ஐரோப்பிய கண்டத்தில் பாரிய அதிர்வுகளை ஏற்படுத்திய புரட்சி எது?
1.பிரான்சியப்புரட்சி 2.ரஷ்யப்புரட்சி
3.அமெரிக்க சுதந்திரப்போர் 4.கைத்தொழில் புரட்சி

33) 1818 ஆம் ஆண்டு போராட்டத்திற்கான உடனடிக்காரணம் யாது?
1.தெங்குவரி உள்ளிட்ட புதிய வரிகள்
2.கோல்புறூக் சீர்திருத்தத்தின் விளைவுகள்
3.தரிசு நிலச்சட்டம் அமுல்படுத்தப்பட்டமை
4.ஊவா வெல்லஸ பகுதிக்கு முஸ்லிம் முகாந்திரம் நியமிக்கப்பட்டமை

34) அச்சகம் ஒன்றை அமைக்க சீயநாட்டு அரசரின் உதவியைப் பெற்ற பௌத்த தேரர்
1.வலானை சித்தாத்த தேரர் 2.ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
3.தர்மாலோக்க தேரர் 4.சுமணதிஸ்ஸ தேரர்

35) பௌத்த பாடசாலைகளை அமைப்பதில் முன்னோடியாக செயற்பட்டவர் யார்?
1.ஹென்ரி ஸ்டீல் ஒல்கோட் 2.பொன் கரோலிஸ் ஹே வாவிதாரண
3. ஆதர் வீ. தியெஸ் 4.டீ.எஸ்.சேனநாயக்க

36) புராதன கலாசாரம் தொடர்பான விடயங்களை தொல்பொருள் அகழ்வாராய்ச்சி மூலம் வெளிக் கொண்டுவந்த ஐரோப்பிய கல்விமான்களில் ஒருவர்
1.ஜோர்ஸ் டர்ணர் 2. ஆதர் வீ தியெல்
3.மனிங் 4.றொபேட் அன்ரூஸ்

37) கண்டி - கொழும்பு பெருந்தெரு அமைக்கப்பட காரணமாக இருந்த ஆளுநர்
1.எட்வட் பான்ஸ் 2.வில்மட் ஹோடன்
3.ஹென்றி வோட் 4.வெஜ்றிஸ்வே

38) பிரித்தானியாவின் பருத்தி உற்பத்திகள் தொடர்பில் அதிக கேள்வியை கொண்ட நாடாக அமைந்தது
1.இந்தியா 2.சீனா 3.அரேபியா 4.இலங்கை

39)1912 இல் இடம்பெற்ற முதலாவது தேர்தலின்மூலம் கல்வி கற்ற இலங்கையரின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டவர்
1.சேர்.பொன்னம்பலம் இராமநாதன்
2.சேர். பொன்னம்பலம் அருணாசலம்
3.ஜேம்ஸ் பீரீஸ்
4.டி.எஸ்.சேனநாயக்க

40) 1919 இல் அரசியல் போராட்டங்களை முன்னெடுப்பதற்கான ஒன்றுபட்ட அமைப்பாக தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு
1.இலங்கை தேசிய சங்கம் 2.மது ஒழிப்பு இயக்கம்
3.இலங்கை தொழிற்சங்கம் 4.சிலாபச்சங்கம்.

## பகுதி II

பகுதி 1 இன் முதலாம் வினா கட்டாயமானது. அதன் அனைத்துப் பிரிவுகளுக்கும் விடைதருக. பகுதி 2 இல் நான்கு வினாக்களுக்கும் பகுதி 3 இல் ஒரு வினாவுக்குமாக மொத்தமாக ஆறு வினாக்களுக்கும் விடை தருக.


### பகுதி 1

01)
அ. வழங்கப்பட்ட இலங்கை புற உருவப்படத்தில் (i) இன் கீழ் தரப்பட்டுள்ள அனைத்து வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள உலக புற உருவப்படத்தில் (ii) இன் கீழ் தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.
i.ஆனையிறவு, மாதோட்டம், ஹல்துமுல்ல, உபரஞ்ஞாமடம், பாகியன்கல, கிரிந்திஓயா, அநுராதபுரம், சிகிரியா, அலிகல, நில்வள தித்த, ஜம்புகோளப்பட்டினம், தேவநகரம்
ii. கொன்ஸ்தாந்திநோபிள், வெனிஸ், கள்ளிக்கோட்டை, பிலிப்பீன் தீவுகள், சுயெஸ் கால்வாய், சிங்கப்பூர்

ஆ)கீழே A,B,C,D எனக் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை அதே ஒழுங்கில் தருக.
A- இலங்கையை சிவப்புத்தீவு எனக்குறிப்பிட்ட அராபிய வரலாற்று ஆசிரியர்
B- இலங்கையில் முதலாவது முறையான யுத்தச் செயற்பாட்டிற்கு தலைமைத்துவம் வழங்கிய மன்னன்
C- காலிங்க சக்கரவர்த்தி பெருமான் என தன்னை அழைத்துக்கொண்ட மன்னன்.
D-வல்லிபுரம் பொற்சாசனத்தை பொறிப்பித்த மன்னன்

(இ)

1. அருகில் காணப்படும் படத்தைப் பெயரிடுக
2.இதனை வடிவமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உலோகம்?
3.இதன்மூலம் அறியக்கூடிய விடயம்?
4.புராதன காலத்தில் இதன் வெளியீட்டிற்குப் பொறுப்பான அதிகாரி?

ஈ)

1. அருகில் காணப்படும் படத்தினை பெயரிடுக?
2.இது அமைந்துள்ள மாவட்டம்?
3.இதனை அமைத்த மன்னன்?
4.இதனை 1270-1272 காலத்தில் புனரமைத்த மன்னன்?

### பகுதி II

02. 1). வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த குகைகள் 3 தருக?
2).பின்வரும் பதவிப்பெயர்கள் குறிப்பிடும் பதவிகளைத் தருக?

16 ஆம் பக்கம் பார்க்க....

## வரலாறு தொடர்ச்சி....

1.புரகமத்த 2.பருமக 3.குர்ஹபதி 4.கமிக

3) முன்வரலாற்றுக்கால மனிதன் அமைத்த இரு வகையான மயானங்களைத் தந்து அதுபற்றி விளக்குக.

4)வரலாற்றுக்கால மனிதனின் குடியிருப்புக்களின் பரம்பரை செல்வாக்குச் செலுத்திய 3 காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

03. i)அநுராதபுரத்தை மையமாகக் கொண்டு ஆட்சி புரிந்த 3 அரசர்களைத் தருக

2) இலங்கையின் அரசுரிமை தந்தையிடம் இருந்து மகனுக்கு கைமாறியமை தொடர்பில் ஒரு உதாரணமும் மூத்த சகோதரனுக்குப் பின் இளைய சகோதரனுக்கு கைமாறியமை தொடர்பில் ஒரு உதாரணத்தையும் குறிப்பிடுக.

3) பண்டைய அரசர்கள் கொண்டுள்ள கடமைக் கூறுகள் 2 குறிப்பிட்டு விளக்குக.

4) விஜயபாகு மன்னனின் பணிகள் 3 குறிப்பிட்டு விளக்குக?

04. i) ஒன்பதாம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் காணப்படும் பின்வரும் குறியீடுகள் குறிப்பவற்றைத் தருக

விசிறி சந்திரப்பிறை நாயும் காகமும்

2)பின்வரும் மன்னர்களின் வெளியுறவுக் கொள்கையுடன் சம்பந்தப்பட்ட நாடுகளைத் தருக

முதலாம் கஜபாகு கனிட்ட திஸ்ஸ அரசன்
ஆறாம் அக்கிரபோதி முதலாம் விஜயபாகு

3) பண்டைய விவசாயத்தின் பிரதான இரு பிரிவுகளையும் தந்து விளக்குக

4) பண்டைய கைத்தொழில் வர்த்தகம், சமயம் தொடர்பில் விளக்கம் தருக.

05. i)இலங்கையில் அமைக்கப்பட்ட பாரிய குளங்கள் 3 தருக?

2) பின்வரும் குள உறுப்புகளின் பணிகளைத் தருக?

1.குளக்கட்டு
2.அலைதாங்கி
3.கலிங்கற்தொட்டி
4.மடைக்கதவு

**3) இலங்கையின் பண்டைய கட்டடக்கலைக்கு சிறந்த உதாரணமாக நீர் கருதும் இரண்டு அமைப்புக்களை குறிப்பிட்டு விளக்குக.**

**4) பின்வரும் விடயங்களுக்கு பொருத்தமான உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக.**

**1.சுகாதார சேவை**

2.இரும்பை பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம்
3.சிறுகைத்தொழில்கள்

06. i) இலங்கையை ஆட்சி புரிந்த ஐரோப்பிய இனத்தவர்கள் மூவரைத் தருக

2) பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்ற விரும்பியமைக்கான காரணங்கள் 4 தருக?

3)இலங்கையில் பிரித்தானியர் பின்பற்றிய ஆட்சி முறைகள் இரண்டினைத் தந்து விளக்குக?

4)1848 ஆம் ஆண்டு கலவரத்துக்கான காரணங்கள் மூன்று தந்து விளக்குக?

07. i) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் செயற்பட்ட மூன்று மிஷனறி இயக்கங்களைத் தருக?

2)கோல்புறூக் முன்வைத்த 4 சீர்திருத்தத்தைத் தருக?

3) மது ஒழிப்பு இயக்கத்தின் செயற்பாடுகள் 2 ஐக் குறிப்பிட்டு விளக்குக?

4)டொனமூர் சீர்திருத்த 3 பிரதான அம்சத்தை குறிப்பிட்டு விளக்குக?

### பகுதி III

08. i) கைத்தொழில் புரட்சி என்றால் என்ன?

2)பின்வரும் துறைகளில் ஏற்பட்ட ஒவ்வொரு கண்டுபிடிப்புக்களையும் தருக?

1.நெசவு 2.நிலக்கரி
3.இரும்புருக்கு 4.போக்குவரத்து

3)கைத்தொழில் புரட்சி பிரித்தானியாவில் ஆரம்பித்தமைக்கான காரணங்கள் 2 குறிப்பிட்டு விளக்குக

4) கைத்தொழில் புரட்சியின் சாதக விளைவுகள் 3 குறிப்பிட்டு விளக்குக.

09. i)மறுமலர்ச்சிக்காலத்தில் உருவான வர்த்தக நகரங்கள் 3 தருக?

2)பின்வரும் கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தியவர்களைத் தருக?

1.பூமி கோளவடிவமானது
2.தொலைநோக்கி
3.புவியீர்ப்பு சக்தி
4.குருதிச்சுற்றோட்டம்

3)நாடுகாண் பயணிகள் இருவரைக் குறிப்பிட்டு அவர்களின் சாதனைகளை விளக்குக

4)மறுமலர்ச்சி இலங்கை மீது தாக்கம் செலுத்திய 3 துறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

**10. i) முதலாம் உலக மகா யுத்தத்தின் ஆரம்பத்தில் பங்குபற்றிய 3 நாடுகளைத் தருக**

**2)முதலாம் உலக மகா யுத்தம் உருவானமைக்கான 4 காரணம் தருக?**

**3)முதலாம் உலக மகா யுத்த விளைவுகளை குறிப்பிட்டு விளக்குக?**

**4)சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணம் 3 குறிப்பிட்டு விளக்குக.**

◆ ◆ ◆

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

வலம்புரி கல்விச்சிறகு

## வரலாறு பகுதி-I,II விடைகள்

ஆசிரியர்:-ஈ.ஆர்.ரி.சுரேன், யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 01 | 11) | 04 | 21) | 02 | 31) | 01 |
| 02) | 01 | 12) | 02 | 22) | 03 | 32) | 01 |
| 03) | 03 | 13) | 01 | 23) | 02 | 33) | 04 |
| 04) | 03 | 14) | 04 | 24) | 03 | 34) | 04 |
| 05) | 01 | 15) | 04 | 25) | 03 | 35) | 01 |
| 06) | 02 | 16) | 02 | 26) | 01 | 36) | 01 |
| 07) | 02 | 17) | 03 | 27) | 01 | 37) | 01 |
| 08) | 03 | 18) | 02 | 28) | 04 | 38) | 01 |
| 09) | 03 | 19) | 03 | 29) | 04 | 39) | 01 |
| 10) | 01 | 20) | 01 | 30) | 01 | 40) | 01 |

### பகுதி-II

#### பகுதி I

01)

அ) i)இலங்கைப்படத்தில் குறித்தல்
ii)உலகப்படத்தில் குறித்தல்

ஆ) A.அல்-பல-சூரி
B. துட்டகைமுனு
C.நிஸங்கமல்லன்
D. வசபன்

இ) i)கஹப்பண
2)தங்கம்
3)அக்கால உலோக தொழில்நுட்பம்
4)ரூபதக்க

ஈ) i) லங்கா திலக சிலைமனை 2)பொலநறுவை 3)1ம் பராக்கிரமபாகு

#### பகுதி II

02) i) பாகியன் கல
குருவிட்ட பட்டதொம்ப லேனா
பெல்லன் பெதி பெல்லஸ

2) I. நகரத்துக்கு பொறுப்பான வாஸ்து கலைஞர்
II.குளத்தில் இருந்து நீரை வெளியேற்றும் அதிகாரி
III.குடும்பத்தலைவன்
IV.கிராமத் தலைவன்

3) களிமண் ஒடமயானங்கள், கல்லறை மயானங்கள்

4) காலநிலை, நீர்ப்பாசன வசதி, மண்வளம்

03)

(i) தேவநம்பியதீசன்
பண்டுகாபயன்
துட்டகைமுனு

(ii) தந்தை-மகன்-மூத்தசிவன்-தேவநம்பியதீசன்
மூத்த சகோதரன்-இளைய சகோதரன்-தேவநம்பியதீசன்-உத்தியன்

(iii) நாட்டை பாதுகாத்தல்
நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

(iv)
i) சோழர் ஆட்சியில் இருந்து நாட்டை விடுவித்தமை
ii) அழிந்திருந்த நீர்ப்பாசன திட்டங்களை புனரமைத்தமை
iii) உபசம்பதா சடங்கினூடாக பௌத்த சமயத்தை சீர்திருத்தியமை

04)
i) விசிறி-செங்கோலும் கொடியும்
சந்திரன் கொடுப்பனவின் நிலைத்திருக்கும் தன்மை
நாயும் காகமும் இக்கொடுப்பனவை தவறாக பயன்படுத்துவோர் எதிர்காலத்தில் அடையும் நிலை

2) 1-தென் இந்தியா
2-உரோம்
3-கலிங்கம்

3) சேனைப் பயிர்ச்செய்கை, நெற்பயிர்ச்செய்கை

4) கைத்தொழில்-இரும்பு-தங்கநகை
வர்த்தகம்-உள்நாடு-வெளிநாடு
சமயம்-பௌத்தம்,இந்து,இஸ்லாம்

05)
i) i)கலாவாவி ii) பராக்கிரம சமுத்திரம் iii)மின்னேரியா

2) 1.நீரினை தடுத்து பாதுகாத்தல்
2.நீரரிப்பில் இருந்து குளத்தை பாதுகாத்தல்
3.நீர் அமுக்கத்திலிருந்து குளக்கட்டை பாதுகாத்தல்
4.நீரை நீர்ப்பாய்ச்சலுக்கு திறந்து விடுதல்

06)
01) i) போர்த்துக்கேயர் ii)ஒல்லாந்தர் iii) பிரித்தானியர்

02) i)இலங்கையின் கேத்திர நிலைய முக்கியத்துவம்
2)திருகோணமலை துறைமுக முக்கியத்துவம்
3)இந்தியாவிற்கு அருகில் அமைந்திருந்தமை
4)வாசனைத் திரவியங்களின் கிடைப்பனவும்

03) i)இரட்டை ஆட்சி
ii)முடிக்குரிய ஆட்சி

04) i) கோல்புறூக் சீர்திருத்தத்தின் படி பெருந்தோட்டங்கள் அமைக்கப்பட்டமை
நீதித்துறை சீர்திருத்தங்கள்
றொலிங்டனின் சீர்திருத்தங்கள்

07)
i) i) பப்டிஸ் மிசனறி
சேர்ச் மிசனறி
அமெரிக்கன் மிசனறி

ii) 1.இலங்கை ஒன்றிணைந்த ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டமை
2.சட்டவாக்க கழகம்,சட்ட நிர்வாக கழகம் என்பன உருவாக்கப்பட்டமை
3.16 நிர்வாக மாகாணங்கள் 05 ஆக்கப்பட்டமை
4.இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை

iii) பிரசாரம் மேற்கொள்ளல்
துண்டுப் பிரசுரங்கள் வெளியிடல்

iv) சர்வஜன வாக்குரிமை
நிர்வாக குழு முறை
பிரதேச வாரி பிரதிநிதித்துவம்

மிகுதி நாளை வெளிவரும்

### கணிதம் பகுதி-II விடைகள் தொடர்ச்சி...

10) i) $l^2 = 124^2 + 7^2$
$= 25^2$
$l = 25$

ii) $\pi rl + 2\pi rh$
$= (22/7 \times 7 \times 25) + 2 \times 22/7 \times 7/2 \times 30$
$= 550 + 1320$
$= 1870 cm^2$

iii) $1/3 \times 22/7 \times 7 \times 7 \times 24$
$= 44 \times 7 \times 8$
$= 2464$

$\pi r^2 h$
$= 22/7 \times 7/2 \times 7/2 \times 30$
$= 77 \times 15$
$= 1155 cm^2$
$= 40 \times 40 \times 40$
$= 64000 cm^3$
$64000 + 1155 + 2464$
$= 67619 cm^3$

iv) $67619 - 4556$
எனின் $= 63063/4/3 \times 22/7 \times 21/2 \times 21/2 \times 21/2 = 13$ கோலங்கள்.

11) i) $\Delta AOP = \Delta BOQ$

ii) $AB = BD$ ஆனால்
$AB = 1/2 BD$
ஆனால் $AB = PQ$ (விட்டம்)
$PQ = 1/2 AD$ ஆகும்.

iii) $A\hat{P}O = B\hat{Q}O$ (ஒருங்கிசை) ஆனால் இவை
$AP // QB$ ஆகும்
$\Delta APD$ யின்
$AP // BR$
$AB = BD$
தேற்றப்பட்டது.
$PR = RD$
∴ PD இன் நடுப்புள்ளி R


12) i) $P\hat{Q}B$ ii) $A\hat{P}B$

iii) $P\hat{Q}B = X$
$A\hat{P}B = Y$ என்க
$P\hat{B}Q = y - x$ ()
$S\hat{A}T = y - X$
∴ $S\hat{A}T = P\hat{B}Q$

◆◆◆

# வடக்கில் நிலைகொண்டுள்ள ராணுவத்தினருக்கு மனித உரிமைகள் பற்றி கற்பிக்க வேண்டும்

## அரசிடம் மாவை எம்.பி.வலியுறுத்து



(கொழும்பு)

**அரசாங்கம் வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கு மனித உரிமைகள் பற்றி கற்பிக்க வேண்டும் என தமிழரசுக்கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**

தேச இலங்கை மன்னன் எழுதிய "சர்வதேச மனித உரிமைச் சாசனம் 1948" எனும் நூல் வெளியீட்டு விழா நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், சர்வதேசத்தில் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கும் மனித உரிமைகள் பற்றி கற்பிக்கிறார்கள். எமது பல்கலைக்கழகங்களிலும் மனித உரிமைகள் உட்பட பல பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதற்கு அரசு வழி செய்ய வேண்டும். அத்துடன் மாகாண சபை அதில் முக்கியமான பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

தற்போது 60 வீதத்துக்கு மேல் கலைப்பாடத்துக்கு செல்லும் மாணவர்கள் விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்குச் செல்ல வேண்டும்.

எமது மாணவர்கள் சர்வதேச ரீதியிலான அரசியலைப் படிக்க வேண்டும். அத்துடன் சர்வதேச சமூகத்துக்குள் சென்று ஆய்வு செய்யக்கூடிய தத்துவங்களை பல்கலையில் ஆய்வு செய்ய வேண்டும். எமது எதிர்கால திட்டங்கள் தொடர்பாக ஆய்வு செய்ய வேண்டும். ஆனால் எமது மாணவர்கள் எமது எதிர்காலம் என்ன என்பதை ஆய்வு செய்ய முடியாத நிலையில் உள்ளார்கள். எமது நாடு சீரழிந்தும் அடக்குமுறைக்குள்ளும் போதைப்பொருள் பாவனையிலும் சென்று கொண்டுள்ளது. எனவே மாணவர்கள் மத்தியில் மனித உரிமைகளை படிப்பிக்க வேண்டும்.

இராணுவ ஆதிக்கம் நிறைந்த எமது பிரதேசத்தில் உள்ள இராணுவத்தினருக்கு மிக முக்கியமாக மனித உரிமைகள் பற்றி இந்த அரசாங்கம் படிப்பிக்க வேண்டும். சமூகத்துடன் தொடர்பில் உள்ளவர்களுக்கு மனித உரிமைகள் பற்றி கற்பிக்க வேண்டும்.

மனித உரிமைகள் பற்றி பேசும் மாணவர்கள் மத்தியில் இந்த விடயம் தொடர்பாக அதிகமாக பேசப்பட வேண்டும். ஆய்வு கோட்பாடுகளை தெரிந்து வைத்திருக்க வேண்டும். எமது எதிர்காலம் பற்றி தீர்மானிப்பதில் மனித உரிமைகள் எவ்வாறு முக்கியத்துவம் பெற்றுள்ளதோ அதேபோல எம் மத்தியில் விடுதலைக்காக போராடும் எமது எதிர்கால சமூகத்தினருக்கும் தெளிவாக தெரிவதற்கு மனித உரிமைகள் தொடர்பான ஆய்வு நூல்கள் சமுதாயத்துக்கு பயனுள்ளதாக அமையும்.

ஐ. நா. மனித உரிமை பேரவையில் 2015 ஆம் ஆண்டு 47 நாடுகள் சேர்ந்து எமது இனப் பிரச்சினை, அரசியல் கைதிகள் விடுதலை, பெண்களின் உரிமை, நிலங்கள் விடுவிப்பு போன்ற பிரச்சினைகளை உள்ளடக்கி தற்போது புது வடிவம் பெற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. சிலர் கூறுவதைப் போல நாங்கள் எதையும் சாதித்தது என்று சொல்லமாட்டோம். ஆனால் ஐ.நா. மனித உரிமை பேரவையில் எமது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது வித்தியாசமான அணுகல் முறை ஆகும்.

இலங்கையில் இருந்த மோசமான, கொடூரமான, சர்வாதிகாரமான, இராணுவமயமான ஊழல் நிறைந்த ஆட்சி முறையை வேறு நாடுகள் செய்தது போல போர் தொடுத்தோ அல்லது இராணுவத்துக்குள் சதியை ஏற்படுத்தியோ நேரடியாகவோ போரை நடத்தாமல் ஜனநாயக ரீதியில் மிகத்துல்லியமாக எமது மக்கள் வாக்களித்து இந்த ஆட்சியை மாற்றினார்கள். அத்துடன் பல வெளிநாடுகளும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தன.

தேர்தல் தீர்ப்பைக்கூட மாற்றியமைக்க முற்பட்ட மகிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்காமல் சில நாடுகள் நேரடியாக தலையிட்டு அந்த ஆட்சியை மாற்றியிருந்தன. அதைவிட முக்கியமாக பல துன்பத்துக்கு பின்னரும் எமது மக்கள் நாம் வீடுவீடாகச் செல்லாமலே எமக்கு வாக்களித்து இந்த ஆட்சியை மாற்றினார்கள்.

இலங்கை நிறைவேற்றத் தவறியுள்ள ஐ.நா. பிரேரணை தொடர்பாக ஐ.நா. பிரதிநிதிகள், வெளிநாட்டு பிரதமர்கள் தமது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு வரவுள்ளார்கள். குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் 10 வீத நலன்களை தான் குறிப்பிட முடியும். அதன் பின்னர் இந்த அரசானது 70 வீதத்துக்கு மேல் அதாவது நிரந்தர அரசியல் தீர்வையும் மனித உரிமை சாசனத்தின் தத்துவங்கள் புதிய அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 812

Search for people, places and things Nagendram Home

**சர்மி சர்மி**





**விமல்**



**பொலிஸ்:** இவர நீதான் கொலை பண்ணினியா?
**கைதி:** நான் இல்ல சார், துப்பாக்கிக் குண்டு. அது இரும்பால செஞ்சது, இரும்பு பூமியில கிடைக்குது. பூமி இயற்கையானது. இது ஒரு இயற்கை மரணம் சார்.

**தர்சினி**




**பிரசன்னா**




எனக்கு வழி கொடுங்கள் என்று கேட்கவில்லை
என்னை நம்பியவருக்கு அவர்கள் வாழ
வாழ்க்கை கொடுங்கள் என்று தான் கேட்கிறேன்
"நீங்கள் விடும் வழி
அவர்கள் வாழ்விற்கு ஒளி"

**சிந்து**



கல்யாணத்துக்கு போகும் போது அடுத்தவங்க புடைவை பார்த்து.
இந்த மாதிரி கிடைக்கவில்லை என்று ஏங்குபவள் மனைவி.
அடுத்தவங்க பொண்டாட்டியைப் பார்த்து இந்தப் பொண்டாட்டி
நமக்கு கிடைக்கவில்லை என்று ஏங்குபவன் கணவன்.

**ரகுவரன்**

ஏதாவது சாதிக்கனும் என்று
காலையிலே வேகமா எழுந்தேன்
மணி பார்த்தேன்
ஏழு தான் ஆகுது
எட்டு மணிக்கு
சாதிச்சுக்கலாம் என்று
திரும்பத்
தூங்கிட்டேன்.

**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.**
**அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# இலங்கை முஸ்லிம்கள் மது அருந்துவது குறைவு

## அமைச்சர் ராஜித நன்றி



முஸ்லிம் மக்கள் மதுபானம் அருந்துவது குறைவு என்றும் எமது நாட்டில் இவர்கள் மதுபானம் பாவிப்பது குறைந்தளவிலே காணப்படுவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் ஹலால், ஹராம் காரணங்களால் இவர்கள் மது அருந்துவதை தவிர்ப்பதாகவும் இதனால் முஸ்லிம்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எனவே நாட்டில் உள்ள அனைவரையும் மதுப்பாவனையில் இருந்து மீட்டெடுக்கவும் மது பாவனையற்ற நாடாக இலங்கையை மாற்றும் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு மஹாசங்கத்தினருக்கு அழைப்பு விடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டிலிருந்து மது பாவனையை முற்றாக ஒழிக்கும் வேலைத்திட்டம் ஒன்று அவசியம் என்றும் எனவே இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க மஹாசங்கத தினரின் தலையீடு அவசியம் என்பதால் அவர்களை அழைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# பலத்த காற்றினால் பாரிய தீ; உடைமைகள் கருகி நாசம்

மட்டக்களப்பு, ஏறாவூர் மிச்நகர் கிராமத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திடீரென ஏற்பட்ட பலத்த காற்றில் மின்கம்பங்களின் கம்பிகள் ஒன்றோடொன்று உராய்ந்து ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக மோட்டார் சைக்கிளொன்றும் பல பனை மரங்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்றின் காரணமாக வீதியோரத்தில் நிறுவப்பட்டுள்ள மின்கம்பங்களின் கம்பிகள் ஒன்றோடொன்று உராய்ந்து தீப்பற்றிக் கொண்டு அறுந்து வீதியோரத்தில் வரிசையாக நின்றிருந்த பனை மரங்கள் மீது விழுந்துள்ளன.

இதனால் காய்ந்து போயிருந்த பனை மட்டைகளில் இலகுவாகத் தீப்பற்றிக் கொண்டதோடு பனை மரங்களின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் தீயில் கருகி சாம்பலாகியுள்ளன.

சம்பவத்தைக் கேள்வியுற்று உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி சிந்தக பீரிஸ் தலைமையிலான குழுவினர், தீயணைப்புப் பிரிவு, மற்றும் மின்சார சபை ஆகியவற்றை அழைப்பித்ததோடு தீ வீடுகளுக்கு பரவாமல் அணைப்பதில் ஈடுபடுட்டனர். (இ-7-10)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 50 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 150 | 180 | 240 | 200 |
| தக்காளி | 60 | 40 | 40 | 60 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 | 90 | 60 | 100 |
| கோவா | 100 | 100 | 70 | 120 | 100 | 100 |
| கரட் | 150 | 200 | 90 | 120 | 140 | 120 |
| பூசணி | 30 | 40 | 30 | 50 | 50 | 50 |
| புடோல் | 40 | 20 | 20 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 100 | 20 | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 60 | 60 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 65 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 80 | 60 | 60 | 90 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 | 80 | 40 |
| கருணைக்கிழங்கு | 80 | 120 | — | 120 | 160 | 180 |
| பயற்றங்காய் | 60 | 20 | 20 | 40 | 40 | 60 |
| லீக்ஸ் | 120 | 100 | 80 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 40 | 50 | 60 | 100 |
| கறிமிளகாய் | 200 | 100 | 140 | 140 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 80 | 20 | 60 | 100 | 100 | 70 |
| போஞ்சி | 200 | 200 | 130 | 180 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | 40 | 60 | 60 | 70 |
| கீரை - 1பிடி | 30 | 10 | 20 | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 150 | 200 | 160 | 150 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-50 | 15-25 | 30 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 120 | — | 80 | 100 | 200 | 150 |
| முள்ளங்கி | 30 | — | 30 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 30 | 30 | 30 | 50 | 60 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## 'போர் கசப்பான முடிவுக்கு வந்துவிட்டது' விடுதலைப்புலிகள் அறிவிப்பு

**255**



**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பு**

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்தார். அவர் ஜோர்தான் நாட்டில் இருந்து 17-05-2009 அன்று கொழும்பு திரும்பினார். அவரை அமைச்சர்களும் புத்த, இந்து, கத்தோலிக்க, முஸ்லிம் மத குருமார்களும் கட்சித் தொண்டர்களும் வரவேற்றனர்.

விமானத்தில் இருந்து இறங்கியவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரையில் மண்டியிட்டு நெற்றி தரையில் படும் வகையில் மண்ணை வணங்கினார். இராணுவத்தின் வெற்றியைச் சிங்களவர்கள் உற்சாகமாகக் கொண்டாடினர்.

**பிரபாகரன் மரணமா?**

இதற்கிடையே பிரபாகரன் மரணம் அடைந்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இது பற்றி பெயர் வெளியிட விரும்பாத ஒரு இராணுவ அதிகாரி கூறியதாவது,

விடுதலைப்புலிகளின் கடைசி மறைவிடத்தை இராணுவம் முற்றுகையிட்ட போது குண்டு வெடிப்பை நிகழ்த்தி 300 விடுதலைப்புலிகள் கூண்டோடு தற்கொலை செய்து கொண்டனர். அந்த இடத்தை இராணுவத்தினர் அடைந்தபோது பிரபாகரனின் உடல் என்று நம்பப்படும் ஒரு உடல் கைப்பற்றப்பட்டது. அது கருகிய நிலையில் இருந்தது. அது பிரபாகரன் தானா? என்பதை உறுதிப்படுத்த அந்த உடலை இராணுவம் கொழும்புக்கு எடுத்துச் சென்றது. உடலை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

இதே தகவலை மேலும் 4 இராணுவ அதிகாரிகளும் தெரிவித்தனர். இராணுவத்தினருடன் இந்த சண்டையில் பிரபாகரன் கொல்லப்பட்டதாகவும் மற்றொரு தகவல் கூறியது.

**அரசு மறுப்பு**

ஆனால் இந்த தகவல்களை அரசு மறுத்தது. இது குறித்து தகவல் துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன கூறியதாவது,

பிரபாகரன் மரணம் அடைந்ததாக எங்களுக்கு எந்தத் தகவலும் வரவில்லை. இந்தத் தகவல் உண்மை அல்ல. கருகிய உடல்கள் கைப்பற்றப்பட்டதாக வெளியான தகவல்களும் சரியல்ல.

இவ்வாறு அவர் கூறினார்.

பிரபாகரன் மரணம் பற்றிய தகவலை இராணுவ செய்தித்தொடர்பாளர் உதய நாணயக்காராவும் மறுத்தார்.

**விடுதலைப்புலிகளின் அறிக்கை**

இதற்கிடையே விடுதலைப் புலிகள் அமைப்பின் அனைத்துலக விவகாரங்களுக்கான பொறுப்பாளர் செ. பத்மநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது,

இந்தப் போர் கசப்பான ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. எமது மக்களின் முடிவில்லாத ஆதரவையும் உதவியையும் தவிர எமக்கு எந்த உதவியும் இல்லாத நிலையில் சிங்கள படையினர் முன்னேறியபோது நாம் பின்வாங்க வேண்டியிருந்தது. எமது மக்கள் மேலும் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.

எம்மிடம் இப்போது கடைசியாக ஒரே தெரிவுதான் இருக்கிறது. எமது துப்பாக்கிகளை மௌனிக்கச் செய்வற்கு தீர்மானித்திருக்கிறோம். எமது அப்பாவி மக்களுடைய இரத்தம் தொடர்ந்து சிந்தப்படுவதை எம்மால் சகித்துக் கொள்ள முடியாது. இன்றைய தருணத்தில் இது தான் தேவை. இதன் மூலமாக ஆயிரக்கணக்கான மக்களுடைய உயிர்களைப் பாதுகாக்க முடியுமாயின் அது செய்யப்படவேண்டும். பொதுமக்களைப் பாதுகாக்குமாறு அனைத்துலக சமூகத்திடம் தொடர்ந்து கோருவதை விட எம்மிடம் வேறு தெரிவுகள் எதுவும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**25 ஆயிரம் பேர் மரணம்**

இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் படுகாயமடைந்த சுமார் 25 ஆயிரம் பேர் மருத்துவ பராமரிப்பு இல்லாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில் மரணம் அடைந்து விட்டதாகக் கடற்புலிகள் சிறப்புத் தள்பதி சூசை ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

இராணுத்துடன் நடந்த போரில் விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் மரணம் அடைந்ததாக அரசு அறிவித்தது. மேலும் அவரது மகன் சார்லஸ் அன்ரனி உட்பட முக்கிய தலைவர்கள் அனைவரும் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் வசமிருந்த பகுதிகளை ஒவ்வொன்றாக கைப்பற்றிய சிங்கள இராணுவம் கடைசியில் அவர்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கரையோரம் உள்ள 2 சதுர கிலோமீற்றர் பகுதிக்குள் முடக்கியது.

அந்தப் பகுதியை இராணுவத்தின் முப்படைகளும் சுற்றி வளைத்து தாக்கின. இதனால் அங்கு இறுதிக்கட்ட போர் நடந்து வந்தது.

**உயிருக்குப் போராட்டம்**

இதற்கிடையே விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவர் பி.நடேசன், சமாதான செயலக பிரிவின் தலைவர் எஸ். புலித்தேவன் ஆகியோர் 17-05-2009 அன்று அதிகாலை 2.30 மணியளவில் தொலைபேசி மூலம் ஐரோப்பாவில் உள்ள தங்கள் ஆதரவாளர்களைத் தொடர்பு கொண்டு பேசினார்கள்.

அப்போது பாதுகாக்கப்பட்ட பகுதியில் போரில் காயம் அடைந்த ஆயிரம் விடுதலைப்புலிகள் மற்றும் இயக்க அதிகாரிகள், பொது மக்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாகவும் இது பற்றி சர்வதேச மனித உரிமை கழகத்திடம் தகவல் தெரிவித்து அவர்களை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டனர். அத்துடன் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துவதை நிறுத்தி விட்டதாகவும் அவர்கள் இருவரும் தெரிவித்தனர். (தொடரும்)

# ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக்கு யுனெஸ்கோ பணிப்பாளர் பாராட்டு

(கொழும்பு)

**காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் சூழலைப் பாதுகாப்பதற்குமான உடன்படிக்கைகள் உரியமுறையில் நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் போன்று நேர்மையான அரசியல் தலைமைகள் அவசியம் என யுனெஸ்கோ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ஜரினா பொகோவா பாராட்டு தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்துள்ள யுனெஸ்கோ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்தார். (இ-7-10)

# எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்டு திரும்பிய பெண்ணுக்கு விளம்பர தூதுவர் பதவி

(கொழும்பு)

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த இலங்கையின் முதலாவது பெண் என்ற பெருமையைப் பெற்ற ஜயந்தி குரே உத்தும்பாலவுக்கு பரிசாக விளம்பர தூதுவர் பதவியொன்றை வழங்க, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.



அதற்கமைய, பெண்கள் உரிமையை பாதுகாப்போம் தொடர்பான வருடத்தின் விளம்பரத் தூதுவராக நியமிக்க, குறித்த அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அவருக்கான தூதுவர் பதவி. நாளை 19ஆம் திகதி வழங்கப்படும்.

2016.08.19 முதல் 2017.05.17 வரையான காலப்பகுதியில், இவர் விளம்பரத் தூதுவராக செயற்படுவார் என்றும் இந்த அமைச்சு அறிவித்துள்ளது. (இ-7-10)

# நீதியரசர் விழுந்தாரா? குதித்தாரா?

## பல கோணங்களில் தீவிர விசாரணை



கல்கிஸையிலுள்ள தனது வீட்டின் மாடியிலிருந்து விழுந்து உயிரிழந்த. உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் சரத் அப்றூவின் மரணம் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ள நிலையில், அது தொடர்பான விசாரணைகளை மும்முரமாக முன்னெடுத்து வருவதாக, கல்கிஸை பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது மரணம், தற்கொலையா? தள்ளிவிடப்பட்டு கொலை செய்யப்பட்டாரா? அல்லது சுயநினைவிழந்த நிலையில் விழுந்து உயிரிழுந்தாரா? என்ற கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார்தெரிவித்தனர்.

ஓய்வுபெற்ற நீதியரசரின், இரண்டு மாடிகளைக் கொண்ட கல்கிஸை வீட்டில், நீதியரசர். அவரது மனைவி. மகள். பணிப்பெண் மற்றும் மகளுக்கு கற்பிக்கும் ஆசிரியை ஆகியோரே தங்கியிருந்துள்ளனர்.

சம்பவ தினத்தன்று காலை வேளையில், நீதியரசருக்கு ஏற்பட்ட உடல் உபாதை காரணமாக. அவர் வழமையாக சிகிச்சைக்குச் செல்லும் கட்டு பெத்தயில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்தியசாலையொன்றுக்குச் சென்று திரும்பியிருந்தார் என்றும், பின்னர் அவர், மேல் மாடியிலுள்ள அவரது அறைக்குச் சென்று ஓய்வு வெடுத்தார் என்றும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவத்தை அடுத்து. பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது. அவரது அறையிலிருந்து மதுபானப் போத்தலொன்றும் கண்ணாடிக் குவளையொன்றும், சிகரெட் பக்கெற் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர் தனது அறைக்குள்ளிருந்து, அன்றைய தினம் காலை மதுவருந்தியுள்ளார் என்றும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

தனது அறைக்குள் சில மணி நேரம் இருந்துள்ள அவர், பின்னர் மாடியின் முன்பாகத்தில் (பெல்கனி) வந்து நின்றுகொண்டு. அவரது மகளை கடுமையாகப் பேசியுள்ளார் எனவும் வீட்டுக்குள் வரும் கடிதங்கள் தொடர்பில் மகள் கவனிப்பாரற்று இருந்துள்ளமைக்காக கடும் கோபமடைந்திருந்ததாகவும், அதன் பின்னரே அவர் கீழே விழுந்து உயிரிழுந்துள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

போதையில் இருந்துள்ள அவர், கோபத்தில் சத்தம் போட்டுக்கொண்டிருந்த போது, தட்டுத்தடுமாறி கீழே விழுந்தாரா?, கோபத்தில் கீழே குதித்தாரா?, அல்லது எவரேனும் தள்ளிவிட்டார்களா என்பது தொடர்பில், சந்தேகம் எழுந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

மாடியின் முன்பக்கத்திலிருந்து, 16 அடிகள் கீழேயுள்ள சீமெந்துக்கற்கள் பதிக்கப்பட்டுள்ள வீட்டு வாசலிலேயே அவர் விழுந்துள்ளார். கீழே விழுந்த அவரது தலை. சீமெந்துக்கற்களில் பட்டு நசிந்துள்ளதாகவும், அதனால் அவருக்கு அதிகளவில் இரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளதாகவும் மரண விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வீட்டிலிருந்த ஆசிரியையே, சம்பவத்தைக் கண்டு, பாதையில் பயணித்துக்கொண்டிருந்த ஆட்டோ சாரதியொருவரை அழைத்துக்கொண்டு வந்துள்ளார், அவரின் உதவியுடனேயே நீதியரசருக்குச் சொந்தமான ஜீப் வண்டியில் அவரை ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். இருப்பினும், அதிக இரத்தப்போக்கு காரணமாக, வைத்தியசாலைக்குச் செல்லும் வழியிலேயே அவர் உயிரிழுந்துள்ளார்.

நீதியரசரின் மகள், போதிய மனநிலையில் இல்லாமையால், அவரது கல்வி நடவடிக்கைகளுக்காக, வீட்டில் தங்கியிருந்தே கற்பிக்கும் வகையில் மேற்படி ஆசிரியர் தங்கவைக்கப்பட்டுள்ளார் என்றும். நீதியரசர் மாடியிலிருந்து குதித்ததைத்தான் கண்டதாக அந்த ஆசிரியையே, பொலிஸாரிடம் வாக்கு மூலம் வழங்கியுள்ளார் என்றும் பொலிஸார் கூறினர். சம்பவம் தொடர்பில், சீ.சீ.டிவி கமராப் பதிவுகளைக் கொண்டு, விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக கல்கிஸை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7-10)

# ஐ.நா.சபையின் புதிய தலைவராக பெண்ணொருவரே வர வேண்டும்




ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைப் பொறுப்பை தனக்கு அடுத்து பெண்ணொருவர் ஏற்பதைத் தான் விரும்புவதாக அந்த சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 70 வருடத்திற்கு மேற்பட்ட வரலாற்றில் 8 ஆண் தலைவர்கள் பதவிப் பொறுப்பை வகித்துள்ள நிலையில் தற்போது அந்தப் பதவிப் பொறுப்பை பெண்ணொருவர் ஏற்பது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுவதாக அவர் கூறினார். தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைத்துவ பதவிக்கு போட்டியிடும் 11 வேட்பாளர்களில் 5 பேர் பெண்களாவர்.

செயலாளர் நாயகத்துக்கான பதவி நிலைக்கான நியமனம் அந்த சபையில் வகிபாகத்தைக் கொண்ட 15 நாடுகளால் சிபாரிசு செய்யப்பட்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையிலுள்ள 193 நாடுகளால் தெரிவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

புதிய தலைவருக்கான தெரிவு பாரம்பரிய முறைப்படி உலகமெங்குமுள்ள நாடுகளிடையே சுழற்சி முறையில் மேற்கொள்ளப்படும்.

மேற்படி பதவி நிலைக்கு கிழக்கு ஐரோப்பா மற்றும் ரஷ்யா என்பன ஒருபோதும் பிரதிநிதிகளை கொண்டிருக்காதுள்ளன.

இந்த ஆண்டுக்கான செயலாளர் நாயகப் பதவி நிலைக்கான வேட்பாளர்கள் இலத்தீன் அமெரிக்கா. மேற்கு ஐரோப்பா. கிழக்கு ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களாவர்.

யார் அந்த பதவியை ஏற்பினும் எதிர்காலம் தொடர்பில் தெளிவான கண்ணோட்டம், சமாதானம், அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அர்ப்பணிப்பு என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என பான் கீ மூன் வலியுறுத்தினார். பெண்கள், சிறுமிகள், விசேட தேவையுள்ளவர்கள். சிறுபான்மை சமூகத்தவர்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை அக்கறை காட்டாவிட்டால் வேறு யார் அக்கறை காட்டுவார்கள்? என அவர் கேள்வி எழுப்பினார். (இ-7)

# தமிழக சட்டசபையில் அமளி; தி.மு.க.எம்.எல்.ஏக்கள் அனைவரும் வெளியேற்றம் - ஒருவாரம் சஸ்பெண்ட்

நமக்கு நாமே பயணம் குறித்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ. வெளியிட்ட விமர்சனத்தை அவைக்குறிப்பில் இருந்து நீக்க மறுத்த சபாநாயகருக்கு எதிராக தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூச்சல் எழுப்பி, அமளியில் ஈடுபட்டதால் அவர்கள் அனைவரையும் சட்டசபையில் இருந்து வெளியேற்றுமாறு சபாநாயகர் தனபால் உத்தரவிட்டார்.

தமிழ்நாடு சட்டசபையில் நேற்று மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடை பெற்றது. இந்த விவாதத்தின் போது பேசிய அ.தி.மு.க. எம்.எல்.ஏ. குணசேகரன், 'நமக்கு நாமே பயணம் மூலம் கோட்டையை பிடிப்போம்' என்று கூறியவர்கள்., என்று மு.க.ஸ்டாலினை மறை முகமாக குறிப்பிட்டு பேசினார்.

இந்தப் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூச்சலிட்டனர். அ.தி.மு.க. எம்.எல்.ஏ. குணசேகரன் தெரிவித்த கருத்தை வெளியிட்ட விமர்சனத்தை அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என சபாநாயகர் தனபாலை கேட்டுக் கொண்டனர்.

இதை ஏற்றுக்கொள்ளாத சபாநாயகர், 'நமக்கு நாமே பயணம்மூலம்கோட்டையை பிடிப்போம்' என்று கூறியவர்கள் என்றுதான் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. குணசேகரன் தெரிவித்துள்ளார். அவர் யார் பெயரையும் குறிப்பிட்டு பேசவில்லை. எனவே, அந்தப் பேச்சை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டிய அவசியமில்லை என தெரிவித்தார்.

சபாநாயகரின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூச்சல் எழுப்பி, சுமார் 15 நிமிடங்கள்வரை தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து. அவைக்காவலர்களை அழைத்த சபாநாயகர் தனபால். தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அனைவரையும் சபையில் இருந்து வெளியேற்றுமாறு உத்தரவிட்டார்.

இதையடுத்து. சபையின் மையப்பகுதிக்கு வந்த அவைக் காவலர்கள், சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் மு.க. ஸ்டாலின், துணைத்தலைவர் துரைமுருகன் உட்பட தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 88 பேரையும் குண்டுக்கட்டாக தூக்கிச் சென்று சட்டசபையில் இருந்து வெளியேற்றினர்.

இதன்பின்னர். அவை முன்னவரான நிதி அமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம் கொண்டு வந்த தீர்மானத்தை ஏற்று வெளியேற்றப்பட்ட தி.மு.க. எம்.எல். ஏக்கள் அனைவரையும் ஒருவார காலத்துக்கு 'சஸ்பெண்ட்' செய்வதாக சபாநாயகர் தனபால் அறிவித்துள்ளார். (இ-7)

# காணாமற்போனோருக்கான நீதி?



(நேற்றைய தொடர்ச்சி)

காலத்திற்குக் காலம் காணாமற் போனோர் விடயத்தில் ஆணைக்குழுக்களும் விசாரணைகளும் கொண்டுவரப்பட்டன. இறுதியாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் ஜனாதிபதி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற நீதிபதி மக்ஸ்வெல் பரணகமவைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்ட இக் குழுவிடம் 19 ஆயிரத்திற்கும் மேலான முறைப்பாடுகள் முன் வைக்கப்பட்டன. எனினும் இவ் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்ட விதங்களில் பல்வேறு குறைபாடுகள் நிலவின.

மொழி பெயர்ப்புத் தவறுகள், சாட்சியங்கள் படையினரால் அச்சுறுத்தப்பட்ட சம்பவங்கள், பதில்களை ஆணைக்குழு ஏற்கனவே தாம்நிர்ணயித்து விட்டு உள்நோக்கங்களுடன் கேள்விகள் பாதிக்கப்பட்டவர்களிடம் கேட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இக் குற்றச்சாட்டுக்களை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளிப்படையாகவே தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக நிலைமைகள் காணப்படும் போது, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த முன்னாள் ஜனாதிபதியும் நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவருமான சந்திரிகா பண்டாரநாயக்கா, காணாமற் போனோர்விடயத்தில் கடந்த கால விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளையும் அடிப படையாகக் கொண்டு மேலதிக விசாரணைகளை தொடர முடியும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறாக காணாமற் போனோர் விடயத்தில் கடந்த கால ஆணைக்குழுக்களின் விசாரணைகள் முடிவுகளையும் அடிப்படையாக ஏற்றுக்கொண்டு தற்போதைய அலுவலகத்தின் செயற்பாடுகள் அமைந்தால் காணாமற் போனோர் விடயத்தில் தகுந்த தீர்வு அமையுமா என்ற கேள்வி பொதுவில் உள்ளது.

மேலும் காணாமற் போனவர்கள் தமது உறவுகளுக்காக ஏங்குபவர்கள். இவர்களின் விடயத்தில் இனிவருங்காலத்திலும் தாம தங்கள் பிரயோகிக்கப்படுமாயின் அது மக்களை மீளவும் பாதிக்கும் விடயமாகவே அமையும். தாமதிக்கப்படும்நீதியை மறுக்கப்படும் நீதி என்பார்கள்.

அந்த வகையில் தற்போது அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கையாவது பொருத்தமுடைய நியாயத்தினை காணாமற் போனோர் விடயத்தில்



முன்வைக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு. காணாமற் போனோரைக் கண்டறியும் அலுவலகம் ஊடாக காணாமற் போனோரை கண்டறிவதற்கான நடவடிக்கைகள் ,காணாமற் போனோர் சான்றிதழ் வழுங்கல் ,காணாமற் போனோர் உயிரு டன் இருந்தால் உறவுகளுக்கு அறிவித்தல் ,காணாமற போனோர புதைகுழிகள் பற்றி உறுதியான தகவல்கள் காணப்படுமாயின் அதனைத் தோண்டுமாறு நீதி மன்றங்களிடம் விண்ணப்பம் செய்தல் போன்ற செயற்பாடுகள் உள்ளடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் காணாமற் போனோரின் உறவுகள் தமக்கான நீதியைப்பொறுத்தளவில் எவ்வாறான மனப்பான்மையில் உள்ளனர் என்பது பற்றிய தெளிவான வெளிப்படுத்துகைகள் அவசியம்.இந்த இடத்தில் காணாமற் போனோரின் கருத்துக்களும் பங்கேற்பும் அதிகம்.காணாமற் போனோருக்கான அலுவலகத்தினுள் உள்வாங்கப்பட்டு நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டிய தேவையுள்ளது.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் நாட்டில் வெள்ளை வான்களிலும் ஆயுத முனைகளிலும் கடத்தப்பட்ட தமது உற வுகள் வீடு திரும்ப வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே எப்போதும் காத்திருக்கின்றனர். கைது செய்யப்பட்டும் உறவினரின் கண்காண சரணடைந்தும் இன்று வரையில் வீடு திரும்பாதவர்கள் ஆயிரக்கணக்கில் இன்றும் காணாமற் போனோராக உள்ளனர்.

இவ்வாறாக நிலைமைகள் காணப்படுகையில் சர்வதேசத்தினையும் நடைமுறை அழுத்தங்களையும் சமாளிப்பதற்கான அணுகுமுறையாக தற்போதைய அரசாங்கத்தின் காணாமற் போனோர் தொடர்பான அணுகுமுறைகள் அமையக்கூடாது என்பதுவே சகலரினதும் எதிர்பார்ப்பு. (முற்றும்)

நிருபா

# தமிழ் சினிமா வரலாறு

## சிவாஜிகணேசன் சுய விமர்சனம் 235

**மனிதனும் மிருகமும்:** கவிஞர் எஸ்.டி.சுந்தரம் அவர்களின் கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கும் நல்ல வாய்ப்பு.

**மனோகரா:** நான் நடித்த முதல் மும்மொழிப் படம்.

**இல்லறஜோதி:** கவிஞரின் திரைக்கதைக்குள் வரும் "அனார்கலி" நாடகத்திற்கு கலைஞர் வசனம் எழுதிய படம்.

**அந்த நாள்:** பாட்டு ஆட்டம் இல்லாமல் எடுக்கப்பட்ட முதல் தமிழ்ப்படம். நடிப்பிலே பரிசு பெற்ற முதல் படம் என்ற பெருமையும் அதற்கு உண்டு.

**கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி:** நான் நடித்த முதல் முழு நீள நகைச் சுவைப்படம்.

**துளி விஷம்:** நான் துணிந்து வில்லனாக நடித்த முதல் படம். கே.ஆர். ராமசாமி அவர்களும் நானும் சேர்ந்து நடித்த ஒரே படம்.

**கூண்டுக்கிளி:** நானும் உயர்திரு.எம்.ஜி.ஆரும் இணைந்து நடித்த ஒரே படம்.

**எதிர்பாராதது:** முதன் முதலில் ஆன்டி சென்டிமெண்ட் படத்தை மக்கள் ஒப்புக்கொள்ள வழிகாட்டிய படம்.

**காவேரி:** நான் தனியாக பரத நாட்டியம் ஆடிய படம்.

**முதல் திகதி:** வாழ்க்கையின் இன்ப-துன்பங்களை தத்ரூபமாகப் பிரதிபலிக்கும் கதையம்சம் கொண்ட இப் படம்.

இறுதியில் கதாநாயகன் கண்டதெல்லாம் கனவு என்று சித்தரிக்கப்பட்டதால் ரசிகர்கள் அக்கருத்தை ஜீரணிக்க முடியாமல்போய் படமும் எதிர்பார்த்த வெற்றியை பெற முடியவில்லை.

**உலகம் பலவிதம் :** இந்த கதை அமைப்பே பலவிதம் தான்.

**மங்கையர் திலகம்:** எனக்கு இணையாக பல படங்களில் நடித்து வந்த பத்மினி எனக்கு அண்ணியாக நடித்து வந்த படம்.

**கள்வனின் காதலி:** தலை சிறந்த நடிகையான திருமதி பானுமதியுடன் இணைந்து எப்படி நடிக்க போகிறோம் என்று நான் பயந்து கொண்டே நடித்த படம்.

**தூக்குத்தூக்கி:** தலை மு றை தலைமுறையாக நடிக் கப்படும் தெருக்கூத்தையும் நல்ல படமாக எடுத்து வெற்றி காண முடியும் என்று நிரூபித்த படம்.

**நல்ல வீடு:** இதுவும் நான் நடித்த படங்களில் ஒன்று.

**தெனாலிராமன்:** தெனாலிராமன் இராஜ விதுஷகன் கோமாளி என்று நினைத்திருந்த மக்களின் எண்ணத்தை மாற்றி அவன்



ஒரு தலைசிறந்த இராஜ தந்திரியும் கூட என்று விளங்க வைத்த படம்.

**மணமகன் தேவை:** முழுக்க முழுக்க ஆங்கிலத்தை தழுவி படம் எடுத்தால் தமிழகம் அதை ஏற்றுக்கொள்ளாது என்று உணர்த்திய படம்.

**கோடீஸ்வரன் :** புராணப் படங்களையே அதிகமாக இயக்கிய டைரக்டர் சுந்தர் ராவ் நட்கர்னி துணிச்சலுடன் தயாரித்த சமூகப்படம்

**நான் பெற்ற செல்வம்:** சகோதரர் ஏ.பி. நடராஜன் அவர்களுடன் இணைந்த முதல்படம்.

**நானே ராஜா:** ராமயணக் கதையை அடிப்படையாக வைத்து தயாரித்த ராஜா ராணிபடம் .

**பெண்ணின் பெருமை:** ஜெமினி கணேசன் அவர்களுடன் முதன் முதலில் சேர்ந்து நடித்த படம்.

**வாழ்விலே ஓர் நாள்:** என்னை விட வயதான நடிகர் ஒருவருக்கு நான் தந்தையாக ந்டித்த படம்.

**அமரதீபம்:** சிவாஜி பிலிம்ஸ் பிறைவேட் லிமிடேட் என்ற பட விநியோக கம்பனி ஆரம்பித்ததே இந்த படத்தில் இருந்துதான்.

**ரங்குன்ராதா:** அண்ணாவின் கற்பனை கதாப்பாத்திரத்தை முதன் முதலில் தாங்கி நடிக்கும் வாய்ப்பை எனக்கு அளித்த படம்.

**மக்களைப் பெற்ற மகராசி:** கொங்கு நாட்டு தமிழ் பேசிய செங்கோடன் மக்கள் மனதில் தங்கி விட்டான்.

**வணங்கா முடி:** இந்தப் படத்தின் படப்பிடிப்பின் போது 300 அடி உயரத்தில் இருந்து விழுந்திருப்பேன். ரசிகர்களின் நல்லாட்சியால் உயிர் பிழைத்தேன்.சிறுகதையாகாமல் தொடர்கதையாகி விட்டேன்.

**புதையல்:** காதல் காட்சிகளில் துணிந்து புதுமையை புகுத்திய படம்.

**தங்கமலை இரகசியம்:** பெரும் பகுதியில் நான் பேசாது நடித்த படம்.

(தொடரும்..)

அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு என்ன நேரிடுகிறது என்பதல்ல. அதைக்கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதுதான். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அமெரிக்கத் தூதுவரின் அறிவுரையை அறியுமினே!

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பல தரப்பையும் சந்தித்து பல்வேறு விடயங்கள் பற்றி எடுத்துரைத்துள்ளார்.

தான் சந்தித்தவர்களின் தன்மை, மனநிலை, அவர்கள் சார்ந்த அமைப்புகள் என்பனவற்றுக்கு ஏற்ப, அவர் தமது அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கூறியுள்ளார்.

உறவுகளைப் பறிகொடுத்து கண்ணீரும் கம்பலையுமாக இருக்கக் கூடிய தமிழினம் யாரைக் கண்டாலும் இவர்தான் நமக்கான மீட்பரோ! அதற்காகத்தான் வெளிநாட்டிலிருந்து வந்தவரோ! என்று நினைக்கின்ற மனநிலையிலேயே பலரையும் சந்தித்து வருகிறது.

அந்தவகையில் அமெரிக்கத் தூதுவருடன் சந்தித்தவர்கள் அமெரிக்கத் தூதுவர் தம்மிடம் கூறிய விடயங்களைப் பிரஸ்தாபித்து வருகின்றனர்.

வெவ்வேறு அமைப்புகள் சார்ந்தவர்கள் வெவ்வேறு நேரங்களில் அமெரிக்கத் தூதுவருடன் யாழ்ப்பாணத்தில் சந்தித்தவர்கள் ஒன்று சேர்ந்து அமெரிக்கத் தூதுவர் தங்களிடம் கூறியது பற்றி அளவளாவிய போது அமெரிக்கத் தூதுவர் ஒரு தரமான இராஜதந்திரி என்பதை நிரூபித்துள்ளார் என்ற உண்மையை உணர முடிந்தது.

எது எப்படியாயினும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஜனநாயக வழியில் தம் உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டும் என அவர் கூறிய ஆலோசனை மிகவும் முக்கியமானதும் தமிழ்த் தரப்புகள் ஆழ்ந்து கவனிக்க வேண்டியதுமாகும்.

ஏனெனில் போருக்குப் பின்பு தமிழ் மக்கள் இழப்பின் கொடுமை காரணமாகவும் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற அச்ச உணர்வு காரணமாகவும் அவர்கள் மூலைகளுக்குள் ஒதுங்கிக் கொண்டனர்.

தனிநாடு கேட்டு ஆயுதம் ஏந்திப் போராடிய இனம் தாங்க முடியாத அளவில் உயிரிழப்புக்களையும், சொத்தழிவுகளையும் சந்தித்தபோது உளவியல் ரீதியாகவே சோர்ந்து போவது வழக்கம்.

இருந்தும் அந்த இனத்துக்குப் பலமான அரசியல் தலைமை அல்லது பலமான மக்கள் இயக்கம் இருந்திருக்குமாயின் அந்த அமைப்பு தன் இனத்துக்கு ஏற்பட்ட பேரிழப்புக்களை – இனவழிப்புகளை சர்வதேசத்திடம் எடுத்துரைத்து தன் இனத்துக்கு மீண்டும் இப்படியொரு அழிவு ஏற்பட்டு விடக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்டி தனக்கான உரிமையைப் பெற்றிருக்கும்.

ஆனால் தமிழினத்தைப் பொறுத்தவரை பலமான அரசியல் தலைமை இல்லை என்ற வெறுமை நிலையில் இருக்கும் போது எதுவும் சாத்தியமாகாது என்பது உண்மையே?

இத்தகையதொரு நிலையில்தான் தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்காக ஜனநாயக ரீதியில் குரல் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு குரல் கொடுக்கும்போது தாம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என அமெரிக்கத் தூதுவர் கூறியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம், காணாமல் போனவர்களின் உறவுகள் வீதியில் வீழ்ந்து அழும் அவலங்கள் அனைத்தும் ஜனநாயக உரிமைக்கானதுதான். இருந்தும் அவை சிறு அளவில் என்பதாலோ என்னவோ அமெரிக்கா கவனிக்கவில்லைப் போலும்.

ஆகையால், தமிழ் மக்கள் அகிம்சை வழியில் ஒரு பிரமாண்டமான பேரணியை முன்னெடுப்பது பொருத்துடையது. அந்தப் பணியை மக்கள் இயக்கமாக மலர்ந்திருக்கும் தமிழ் மக்கள் பேரவை முன்னெடுப்பது காலமுணர்ந்த செயல்.

இச்செயல் வெற்றி பெற அனைத்துத் தமிழ் மக்களும் அரசியல் பேதம் கடந்து எங்கள் இனத்தின் உரிமைக்காக ஓரணியில் ஒன்று திரள்வது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# மக்கள் மனங்களை அமைதிப்படுத்தும் ஒரே சமயம் பௌத்த சமயமாகும்!

## புத்தர் சிலை பிரதிஷ்டையில் ஜனாதிபதி உரை

தற்கால சமூகத்தில் அமைதியற்ற மனங்களையுடைய மக்களை அமைதிப்படுத்தக் கூடிய ஒரே சமயம் பௌத்த சமயமாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொல்கொல்லை ஸ்ரீ சாலவன போதிவிகாரைக்கு மியன்மார் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்யும் புண்ணிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பௌத்த தத்துவத்தின் அடிப்படையில் ஏனைய இனங்களின் கருத்துக்களையும் மதித்து ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு தமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்பி ஒரு நாடு என்றவகையில் அபிவிருத்தியடைவதற்குத் தேவையான தீர்வுகள் பௌத்த தத்துவத்தில் உள்ளடங்கியிருப்பதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

இந்த சந்தர்ப்பம் பல நூறு வருடங்களாக இருந்துவரும் இலங்கை மற்றும் மியன்மார நாடுகளுக்கிடையிலான உறவுகளைப் பலப்படுத்துவதற்கு மற்றுமொரு சிறந்த சந்தர்ப்பமாகும் எனக்குறிப்பிட்ட ஜனாதிபதி, இரு நாடுகளுக்கிடையேயான இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டதோடு மகா சங்கத்தினருக்கு எண்வகைப்பூஜைப் பொருட்களை அன்பளிப்பு செய்து அவர்களது சுகதுக்கங்களையும் கேட்டறிந்தார்.

பௌத்த சமயத்திற்குச் செய்துவரும் சேவைகளை கௌரவித்து தங்கமுலாம் பூசப்பட்ட ஒரு சைத்தியவடிவிலான ஒரு சின்னத்தை ஜனாதிபதி மியன்மார் நாட்டு சங்கராஜ சங்கைக்குரிய குமா ராஹிவங்சாபிதான மகாநாயக்க தேரருக்கு அன்பளிப்புச் செய்ததோடு, ஜனாதிபதியிடம் மகாநாயக்க தேரர் மியன்மார் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு புத்தர் சிலையை அன்பளிப்புச் செய்தார்.

இந்த நிகழ்வில் சியாமோபாலி மகாநிகாயவின் அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்க தேரர் வரக்காகொட தம்மசித்தி ஸ்ரீபஞ்ஞானந்த ஞானரத்னாஹிதான தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரும் அமைச்சர் ரவி கருணாநாயக்க, மத்திய மாகாண ஆளுனநர் நிலூக்கா எக்கநாயக்க, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் எக்கநாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)

## பசில் மீது மீண்டும் விசாரணை

# செப். 02-ம் திகதி ஆஜராகுமாறு ஜனாதிபதி ஆணைக்குழு பணிப்பு

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி மீண்டும் பாரிய நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

திவிநெகும திணைக்களத்துக்குச் சொந்தமான சுமார் 3 கோடியே 60 இலட்சம் ரூபாயுக்கும் மேற்பட்ட நிதியை அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பசில் ராஜபக்ஷ பின்னர் கடந்த 8ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த போது உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் இடம்பெற்ற பாரிய துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவே எதிர்வரும் அவரை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு பாரிய நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு பணித்துள்ளது.

உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் இடம்பெற்ற பாரிய துஷ்பிரயோகங்கள் தொடர்பில் ஏற்கெனவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான யோசித ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோரிடம விசாரணைகள் இடம்பெற்றிருந்த நிலையில், இது தொடர்பில் மேலதிக விசாரணை நடத்த பாரிய நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் பசில் ராஜபக்ஷ மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தையடுத்து, ஜனவரி 10ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறிய பசில் ராஜபக்ஷ மீண்டும் 2015ஆம ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி நாடு திரும்பியிருந்தார்.

இந்நிலையில், திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற நிதிமோசடி தொடர்பில கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டிருந்தார். இதுவரை பசில் ராஜபக்ஷ நான்கு தடவைகள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# சத்திய தரிசனம்



## தெய்வத்துவம் எல்லோருக்கும் உள்ளது

❖ நீங்கள் யாவரும், எப்போதும் பரஸ்பர அன்புடன் ஒருவருக்கொருவர் கருணையுடனும் இரக்கத்துடனும் உதவி செய்து கொண்டு நல்லறத்துடன் கூடிய இல்லற வாழ்க்கை நடத்தி வருபவர்களாகவும் நல்லறிவை வளர்ப்பவர்களாகவும் கஷ்டப்படுவோர்களுக்கு தாமதமின்றி சகாயம் செய்து, உத்தம மனிதர்களாக வாழ வேண்டுமென்பதே சாதுக்களான நல்லோர்களுக்கு நான் சொல்லும் அறிவுரை.

❖ உயிரினங்கள் யாவும் தெய்வத்துவத்திலிருந்து தோன்றி தெய்வத்துவத்திலேயே வாழ்ந்து தெய்வத்துவத்திலேயே இணைந்து விடுகிறது.

❖ ஆக்கல், காத்தல், இணைதல், (ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம்) மூன்றிற்கும் தெய்வத்துவமே காரணம். சங்கல்பம் எனும் எண்ணத்திலிருந்தே மனிதன் பிறந்து, அதனாலேயே வளர்ந்து, அதிலேயே சேர்ந்து விடுகிறான். "யத் பாவம் தத்பவதி" - எப்படி எண்ணுகிறானோ அப்படியே ஆகிறான்.

❖ எண்ணத்திலிருந்து சொல்லும் சொல்லிலிருந்து செய்கையும் வருகிறது. செய்கையின்படியே விளைவும் இருக்கும்.

❖ உத்தமமான எண்ணங்களை வளர்த்து உத்தமமான சொற்களே பேசி உத்தமமான செய்கைகளில் ஈடுபட்டு இலட்சிய வாழ்க்கை வாழ வேண்டும்.

❖ மனிதன் ஆத்ம தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டுமேயன்றி சரீர தர்மத்தைக் கடைப்பிடிக்கலாகாது. இந்திரிய தர்மம் மிருக தர்மம். மனிதன் பின்பற்ற வேண்டியது தெய்வத்துவமே.

❖ இங்கே பிறந்தவர் ஒவ்வொருவருக்கும் தெய்வசக்தி உள்ளது.

❖ மனிதன் தன்னுள் உள்ள தெய்வத்துவத்தை வெளிக்காட்டவே பிறப்பு எடுக்கிறான். மனிதப்பிறவி புனிதமானது. வாழத்தக்கது. இலட்சியத்தை அடைய உதவக்கூடியது. மனிதத்துவமே தெய்வத்துவம் என்பதை உணர்த்தவே உலகில் அவதாரங்கள் தோன்றுகின்றன.

# நல்லூர்க்கந்தனுக்கு




## நல்லூரான் கிருபை வேண்டும்

நல்லூரான் கிருபை வேண்டும்– வேறென்ன வேண்டும்
நமைப்பிரி யானென நம்பிட வேண்டும்
(நல்லூரான்)
எல்லா ரிடத்தும்அவன் இருப்பதைக் காணவேண்டும்
கொல்லாமை கள்ளாமை கோபத்தை நீக்கவேண்டும்
(நல்லூரான்)
சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருக்கவேண்டும்
அல்லும் பகலுமவன் அடியிணையே தொழவேண்டும்
(நல்லூரான்)
உல்லாசமாக உலகிற் றிரிய வேண்டும்
ஓம்சிவாய நமவென ஓதிக்கொள்ள வேண்டும்
(நல்லூரான்)
பல்லோர்புகழ் நல்லூர்ச் செல்லப்பன் பாதத்தை
பக்தியாய்க் கும்பிட்டுப் பாடிட வேண்டும்
(நல்லூரான்)
சொல்லும் யோகசுவாமி தோத்திரப் பாடலை
எல்லோரும் கேட்டு மகிழ்ந்திட வேண்டும்
(நல்லூரான்)

சிவத்திரு யோகர்சுவாமிகள்

# பிரகாஸ் அதிரடி

## மல்லாகம் ஸ்ரீ முருகன் வி.கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுத்தொடர்

### அரையிறுதியில் ஞானம்ஸ்



மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் மென்பந்து சுற்றுத் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அண்மையில் நடைபெற்றன. இதில் குழு A இற்கான 2 ஆவது காலிறுதிப் போட்டியில் வதிரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயசுழற்சியில் வென்ற வதிரி ஸ்ரீ முருகன் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் வி.க. நிர்ணயிக்கப்பட்ட 6 பந்து பரிமாற்ற முடிவில் 4 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வதிரி ஸ்ரீமுருகன் வி.க. 6 பந்து பரிமாற்ற நிறைவில் 5 இலக்குகளை இழந்து 46 ஓட்டங்களை மாத்திரம் பெற கரவெட்டி ஞானம்ஸ் 14 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

கரவெட்டி ஞானம்ஸ் வி.க. சார்பில் துடுப்பாட்டத்தில் 4 சிக்சர்களுடன் 38 ஓட்டங்களை பெற்ற பிரகாஸ் ஆட்ட நாயகனாக தெரிவானார். (கு)

## கரவெட்டி ஞானம்ஸ் சம்பியன்

இமையாணன் மத்தி வி.க. நடத்திய யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையேயான மென்பந்துச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் மற்றும் உடுவில் சலஞ்சர்ஸ் அணிகள் மின்னொளியில் பலப்பரீட்சை நடத்தின.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் ஞானம்ஸ் அணி 8 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

அதைத்தொடர்ந்து இடம் பெற்ற இமையாணன் மத்தியுடனான சலஞ்சர்ஸ் கிண்ணத்திற்கான போட்டியிலும் ஞானம்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

மேற் குறித்த போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 21 ஆம் திகதி நடை பெற இருக்கிறது. (கு)



## பிறேம்குமார் ஹெற்றிக் கோல்

# மணற்காடு சென். அன்ரனிசை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தெரிவானது டயமன்ஸ்







பிறேம்குமாரின் ஹெற்றிக் கோல்கள் மூலம் வதிரி டயமன்ஸ் அணி இறுதிபோட்டிக்கு தெரிவானது.

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரை இறுதிப்போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் முதலாவது பாதியாட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் பிறேம்குமார் (பீமா) கோல் போட முதல் பாதியாட்டம் 1.0 என்ற அடிப்படையில் காணப்பட்டது. இரண்டாவது பாதியாட்டத்தின் 35 ஆவது நிமிடத்திலும் பிறேம்குமார் (பீமா) கோல் போட்டு அசத்த மறுபடியும் 41 ஆவது நிமிடத்தில் தனது மூன்றாவது கோலையும் போட்டு அணியின் கோலை உயர்த்தினார். ஆட்டம் தொடர்ந்தது. 50/59 ஆவது நிமிடத்தில் துசிகரன் (துசி) 2 கோல் போட்டார். ஆட்ட நேர முடிவில் வதிரி டயமன்ஸ் அணி 5.0 என்ற அடிப்படையில் இலகுவாக சென். அன்ரனிசை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தெரிவானது. போட்டியின் ஆட்ட நாயகன் வதிரி டயமன்ஸ் வி.க. வீரர் பிறேம்குமார் (பீமா) தெரிவு செய்யப்பட்டார். (கு)

## இணுவில் கலையொளி A காலிறுதிக்கு தெரிவு

மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் மென்பந்து சுற்றுத் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அண்மையில் நடைபெற்றன.

இதில் குழு A இற்கான ஆறாவது போட்டியில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இணுவில் கலையொளி A விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயசுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கலையொளி A வி.க. நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்ற முடிவில் 6இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிவன் வி.க. 6 பந்துப் பரிமாற்ற நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 52 ஓட்டங்களை மாத்திரம் பெற இணுவில் கலையொளி A 3 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

இணுவில் கலையொளி வி.க. சார்பில் துடுப்பாட்டத்தில் 2 சிக்சர்களுடன் 12 ஓட்டங்களையும் பந்து வீச்சில் 2 இலக்குகளையும் பெற்ற மோகன் ராஜ் ஆட்ட நாயகனாக தெரிவானார். (கு)



## பொலிகண்டி பாரதி வி. கழக உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்




பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் அண்மையில் நடைபெற்ற முதலாவது போட்டியில் ஆதிசக்தி B அணியை எதிர்த்து விளையாடிய கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி ஆட்டத்தின் முதலாவது பாதியாட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் பிரகாஷ் கோல்போட்டார். அடுத்த இரண்டாவது கோலுக்காக 12 ஆவது நிமிடத்தில் ரதன் போட ஆட்டம் தொடர்ந்தது. 17 ஆவது நிமிடத்தில் மீண்டும் ரதனால் கோல் போடப்பட முதல் பாதியாட்டம் 3.0 என்ற அடிப்படையில் முடிவுற்ற நிலையில் இரண்டாவது பாதியாட்டம் தொடர்ந்தது. 28 ஆவது நிமிடத்தில் பிரகாஷ் கோல் போட்டு அணியின் கோலை அதிகரித்தார்.

அடுத்த இறுதி நேர முடிவின் 38 ஆவது நிமிடத்தில் இளம் வீரர் பார்த்தீபன் கோல் போட்டார். ஆட்டநேர முடிவில் 5.0 என்ற அடிப்படையில் ஆதிசக்தியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது யங்கம்பன்ஸ் விளை யாட்டுக்கழகம். யங்கம்பன்ஸ் விக. சார்பாக ரதன்,பிரகாஷ் தலா 2 கோலினையும் பார்த்தீபன் ஒரு கோலினையும் போட்டார். (கு)

## கச்சாய் வொலிகிங்ஸ் வி.கழக A பிரிவுக்கான கரப்பந்தாட்ட போட்டி

### ஆவரங்கால் மத்தி வெற்றி



கச்சாய் வொலிகிங்ஸ் வி.க. நடத்தும் A பிரிவுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் அச்சுவேலி ஸ்டார் வி.க. எதிர்த்து போட்டியிட்ட ஆவரங்கால் மத்திய வி.க. 2:0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

அதனை தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்திடம் 3:2 செட் கணக்கில் தோல்வியை தழுவிக்கொண்டது. (கு)

## அமெரிக்க மரு...

யாழ்ப்பாணத்தில் 80 சதவீதமான தமிழ் மருத்துவர்கள் வைத்திய நிபுணர்கள் உள்ளனர். அவர்களுக்கு மொழியும் தெரியும் வைத்திய தகைமைகளும் உள்ளது.

எனவே, விஷ ஊசி தொடர்பில் தற்போது எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பாக வைத்திய பரிசோதனைகளை எமது நாட்டு மருத்துவர்களினாலேயே நடத்த முடியும்.

அதில் உண்மையுள்ளதா? இல்லையா என்பதனை பரிசோதனைகள் மூலம் தெரிந்து கொள்ள முடியும். எமது மருத்துவர்கள திறமையானவர்கள். எனவே அமெரிக்க மருத்துவர்களின் சேவை எமக்கு அவசியமில்லை.

அவ்வாறு வெளிநாட்டு மருத்துவர்களின் சேவை தேவைப்படுமெனில் அவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் சரியாக தருணத்தில் சரியான தீர்மானத்தை எடுக்கும்.

அமெரிக்க மருத்துவர்கள் வெளிநாட்டு மருத்துவர்களின் சேவை தேவையா என்பதனை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். அதனை தீர்மானிக்கும் அதிகாரம் வேறு எவருக்கும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார்.(செ-11)

## சுதந்திரமான அர...

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பல்வேறுசெயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் என உயர்கல்வி நெடுஞ்சாலை பெருந் தெருக்கள் வீதி அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நெடுஞ்சாலை பெரும் தெருக்கள் வீதி அபிவிருத்தி அமைச்சு மற்றும் வீதி அதிகார சபையின் ஏற்பாட்டில் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில்கடந்த மூன்று வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் புனர்நிர்மாணம் செய்யப்படாத நிலையிலிருந்த யாழ். பருத்தித்துறை மருதங்கேணி வீதியின் மீள்புனர்நிர்மாண வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை யாழ். மருதங்கேணி செம்பியன்பற்றுப் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காகப் பிரதம அதிதிகளாக உயர் கல்வி நெடுஞ்சாலை பெரும் தெருக்கள் வீதி அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சியின்தலைவருமான இரா.சம்பந்தன் ஆகியோர் கலந்துகொண்டு குறித்த வேலைத்திட்டத்தினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தனர்.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே உயர் கல்வி, நெடுஞ்சாலை பெரும் தெருக்கள் வீதி அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு,கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் காலப்பகுதிகளில் ஆயிரத்து 500 கிலோ மீற்றர்தூரமுடைய வீதிகளைக் காப்பெற் வீதிகளாக மாற்ற. அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதிலே 700 கிலோ மீற்றர் தூரமுடைய வீதிகள் யாழ். மாவட்டத்திற்கு மட்டும் கிடைக்க விருக்கின்றது.

இதற்காக உயர்கல்வி, நெடுஞ்சாலை பெரும் தெருக்கள் வீதி அபிவிருத்தி அமைச்சினால் 450 மில்லியன் ரூபாய் நிதியுதவி ஒதுக்கப்பட்டுள்ளது. 15வீதிகள் புனர்நிர்மாணம் செய்யப்படவிருக்கின்றது.

புதிய அரசாங்கம் பதவிக்காலம் ஆட்சிப் பொறுப்பினைப் பெற்றதுடன், வடக்கு, கிழக்கிலுள்ள வீதிகளைப் புனரமைப்பதற்காக எமது அரசாங்கம் மிகக் கூடிய அக்கறையினைக் கொண்டுள்ளது. அதனடிப்படையில் இந்த அபிவிருத்திகள் அடுத்த ஜனவரி மாதக் காலப்பகுதியில் ஆரம்பமாகின்றது.

இது போன்று எதிர்காலத்தில் மிகக்கூடிய அபிவிருத்திகளைச் செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

குறித்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராஜா, ஈ.சரவணபவன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன், வீதி அதிகாரசபையின் உயரதிகாரிகள், வட மாகாணசபையின் உறுப்பினர்கள், துறைசார்ந்த அதிகாரிகள், பொதுமக்கள்எனப் பலரும் கலந்துகொண்டனர். (செ-283)

## கொக்குளாய் விகா...

டமைப்பின் உறுப்பினர்களும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திவரும் நிலையிலேயே அரசாங்கம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று பகல் நடைபெற்றது.

இதன்போது கொக்குளாய் பகுதியில் பௌத்த விகாரை அமைக்கப்படுவது தொடர்பில் எழுந்துள்ள எதிர்ப்புகள் மற்றும் சர்ச்சைகள் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சரவை பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன, சிங்கள கிராமம் எங்கு அமைய வேண்டும் என்பது தொடர்பில் கூட்டமைப்பினரால் தீர்மானிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் கூறுகையில்,

யுத்தம் முடிவுற்ற பின்னர் அமைச்சரவையில் பல சிங்கள அமைச்சர்கள் இருந்த போதிலும் நான் ஒருவனே கொக்குளாய் பகுதிக்கு விஜயம் செய்திருந்தேன். கொக்குளாய் பகுதியில் உள்ள மக்கள் தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகோரி இன்றும் என்னிடமே வருகின்றனர். எனக்கு நன்கு தெரிந்த நபர் அங்குள்ள மீனவக் குழுத் தலைவராக உள்ளார். கொக்குளாய் மற்றும் நாயாறு ஆகிய இரண்டு பகுதிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகளே அழித்திருந்தனர். இவ்வாறான பிரச்சினைகள் மத்தியிலும் அங்குள்ள மக்கள் முகங்கொடுத்து வந்தனர்.

எனினும் சிங்கள மக்களது தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் எவரும் அப்பகுதிக்கு செல்லவில்லை. இன்றுதான் அந்த பிக்குவைப் பற்றிப் பேசுகின்றனர். அந்தப் பிக்கு தொடர்பில் எதுவும் இல்லை. அங்கு வீதிகளை செப்பனிட, தண்ணீர் வசதி பெற்றுக்கொடுக்க, வீட்டு வசதிகளை செய்துகொடுக்க நானே யோசனைகளை முன்வைத்திருந்தேன். அங்கு பலதரப்பட்ட அழுத்தங்கள் காணப்படுகின்றன. எனினும் இதுபற்றி பேசுகிறவர்களது பேச்சுக்கள் அனைத்தும் சட்டமாகிவிடாது.

சிங்கள கிராமம் எங்கு அமைய வேண்டும், தமிழ் கிராமம் எங்கு அமைய வேண்டும் என்பது குறித்து அவர்கள் தீர்மானிக்க முடியாது. இம்மக்கள் முன்பிருந்தே கொக்குளாய் சிங்கள கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். அந்த மக்களுக்கு வழிபாட்டுத்தலம் தேவை என்றால் அங்கு அமைக்க முடியும். விகாரை வேண்டுமா? தேவையில்லையா? என்பது தொடர்பில் வேறு எவரும் தீர்மானிக்க முடியாது என ராஜித சேனாரத்ன தெரிவித்தார். (செ-11)

## 6 மாதத்தில்...

விக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க இதனை தெரிவித்தார்.

இதன்படி, வரி மூலமான வருமானம் 20 சதவீதத்தாலும் , உள்நாட்டு வருவாய் திணைக்களத்தின் வருமானம் 22 சதவீதத்தாலும், மதுவரி திணைக்களத்தின் வருமானம் 19 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன.

சுங்க திணைக்களத்தின் வருமானம் 40 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன.

சுங்க திணைக்களத்தில் கடந்த அரசாங்கம், வரி அறவீடு இல்லாமல் பொருட்களுக்கு அனுமதித்தது.

எனினும் இந்த அரசாங்கம் அதனை முறையாக மேற்கொள்ளும் நிலையிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சரவை இணைப்பேச்சாளர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

இதனிடையே, ஏற்றுமதி செய்வதன் மூலம பெறப்படும் நிதியை, இலங்கை ரூபாய்களுக்கு மாற்றிக்கொள்வதற்காக கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்காக அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அமைச்சர் கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டார். (செ-11)

## யுத்த மனோநிலை...

300 மில்லியன் செலவில் ஆரையம்பதி கோயில்குளத்தில் நிர்மாணிக்கப்பட்ட கூரைத்தகடு தயாரிக்கும் தொழிற்சாலையை திறந்துவைத்து உரையாற்றும்போது அவர்இதனை தெரிவித்தார்.

யுத்தம் நிலவிய காலப்பகுதியில்தான் தமது பொருளாதாரங்களை செலவிட்டு இத்தகைய தொழிற்சாலைகளை நிர்மாணிக்க தொழிலதிபர்கள் அச்சமடைந்திருந்தனர். எனினும் இன்று அந்த நிலைமை மாறியுள்ளது.தற்போது யுத்த காலத்தைப்போல அச்சப்படவேண்டிய தேவையில்லை.

இத்தகைய பாரிய தொழில் முயற்சிகளில் வர்த்தகர்கள் துணிச்சலாக முதலீடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா குறிப்பிட்டார்.

வியட்நாம் மற்றும் சீன நாட்டு பாரிய இயந்திரங்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலை மூலம் சுமார் 100 பேர் வரை வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## அரசியல் தீர்வு...

மருதங்கேணி பருத்தித்துறை வீதியின் புனரமைப்புப் பணி ஆரம்ப நிகழ்வுகள் நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோரது பங்கேற்புடன் நடைபெற்றது. இதன்போது உரையாற்றும் போது இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

நீண்ட காலமாக எமது தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணாத நிமிர்த்தம் அபிவிருத்தி நிகழ்வுகளில் நாம் பங்குபற்றுவதில்லை. ஆனால் தற்போது அரசியல் தீர்வு சம்பந்தமான விடயத்தில் தற்போதைய அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையிலும் எமது மக்களுக்கும் அபிவிருத்திகள் தேவை என்ற அடிப்படையிலும் இவ்விதமான நிகழ்வுகளில் நாங்கள் பங்குபற்றி வருகின்றோம்.

புதிய அரசின் திட்டத்தின் அடிப்படையில் எதிர்வரும் காலங்களில் பாரிய வேலை திட்டங்கள் இடம்பெற வேண்டும். இந்த அபிவிருத்தி வடக்கையும் கிழக்கையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இந்த நாட்டில் ஏற்பட வேண்டிய அரசியல் தீர்வு, குறித்து நாங்கள் அவதானம் செலுத்தி வருகின்றோம். தற்போது எங்களுடைய இடத்தில் முக்கிய அமைச்சர் ஒருவர் நிகழ்வில் பங்கு பற்றி உள்ள காரணத்தினால்,

அரசியல் தீர்வு தொடர்பில் நாம் கதைப்பது அவசியமாகின்றது. எமது கலாசாரம், பொருளாதாரம், ஆகியவற்றை பாதுகாப்பதற்கு தேவையான அதிகாரங்கள் புதிய அரசியலமைப்பு ஊடாக வழங்கப்பட வேண்டும். சிங்கள மக்களும் தமிழ் மக்களுக்கும் வேறுபட்ட இனங்களாக இருந்து வருகின்றனர். இந்த வேறுபாட்டினை அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த மக்கள் அனைவரும் சமத்துவமானவர்களாக வாழவேண்டும். வரலாற்று ரீதியாகவே இரு மக்களும் ஒவ்வொரு தனித்துவங்களோடு வாழ்ந்து வருகின்றனர். இதனால்தான் தமிழர்கள் தமக்கான அதிகாரங்களை வழங்குமாறு கோரி வருகின்றனர். அதிகாரங்கள் பகிரப்படல் வேண்டும் என நாமும் கோரி வருகின்றோம்.

எமக்கும் நல்லாட்சி அரசாங்கம் மீதும் அதன் நடவடிக்கைகள் மீதும் நம்பிக்கை உண்டு. அத்தோடு எங்களுடைய அரசியல் பயணத்தில் தற்போது நல்லதொரு தருணம் வந்துள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் அதிகாரங்கள் பகிரப்பட்டு நீண்ட கால பிரச்சினையை தீர்த்து வைக்கமுடியும். இதுதான் இறுதியான சந்தர்ப்பமாக இறுதியான அரசியலமைப்பாக இருக்கும் என நாம் நம்புகிறோம் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். (செ-4)

## குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு!

(யாழ்ப்பாணம்)

ஐந்து பேர் சேர்ந்து குழுவாக வாளால் வெட்டியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 10.05 மணியளவில் மானிப்பாய் சங்குவேலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சிவகுமார் பிரணவன் (வயது 29) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பிரஸ்தாப குடும்பஸ்தரின் வீட்டின் முன் பகுதியிலேயே மேற்படி வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றது.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு ஒன்றும் பதியப்பட்டுள்ளது.(செ-30)

## 6 அகதிகள் — விளக்கமறியலில்

அவுஸ்திரேலியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட 6 பேரையும் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த 6 பேரும் நேற்று முன்தினம் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து இவர்கள் நேற்று பகல் நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இவர்களுக்கான விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் இருந்து கடல் வழியாக படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்கு சென்ற 6 பேரை அவுஸ்ரேலியா கடற்பரப்பில் வைத்து கைதுசெய்த கடற்படையினர் அங்கிருந்து விமானமூலம் நாடு கடத்தினர். குறித்த 6 பேரும் நேற்று முன்தினம் காலை 8.15 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்திருந்த நிலையில் கைதாகினர்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 6 கடற்தொழிலாளர்கள் கடந்த யூலை மாதம் 21 ஆம் திகதி வாழைச்சேனை கடல் பகுதியில் இருந்து படகு ஒன்றின் மூலம் அவுஸ்ரேலியாவுக்கு சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## 104 வைத்தியர்கள் நியமிக்கப்படுவர்

கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு 104 வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களில் சமூக மருத்துவ வைத்தியர்கள் 70 பேரும் வைத்திய அதிகாரிகள் 34 பேரும் அடங்குவதாக அம்மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழுள்ள பாண்டிருப்புப் பிரதேசத்தில் 5.5 மில்லியன் ரூபாய் நிதியில் நிர்மாணிக்கப்படவுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும நிகழ்வு, கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இம்மாகாணத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற வெளிமாகாணங்களைச் சேர்ந்த சுமார் 60 வைத்தியர்கள் இடமாற்றம் கோரியுள்ளனர். இவர்களுக்கு இடமாற்றங்களை வழங்குவதில் முன்னர் சிரமம் காணப்பட்டது.

ஆனால், தற்போது இடமாற்றம் கோரியுள்ள வைத்தியர்களுக்கு இடமாற்றங்களை வழங்கத் தீர்மானித்துள்ளோம் என அவர் கூறினார்.

மேலும் கடந்த காலத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கு ஆயுர்வேத வைத்திய சேவையை வழங்க வேண்டுமென்ற நோக்கில் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளதாக வும் அவர் கூறினார். (செ-11)

## தமிழ் மாணவர்கள் மூவ...

உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவை யாழ். மேல் நீதி மன்ற நீதிபதி மா.இளஞ் செழியன் பிறப்பித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவர்களுக்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த மாதம் விஞ் ஞான பீட இரண்டாம் வருட மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது வழமைக்கு மாறாக சிங்கள மாணவர்கள் கண்டிய நடனம் மூலம் மாணவர்களை தாமும் வர வேற்க வேண்டும் எனவும் முரண்பட்டனர்.

எனினும் தமிழ் மரபுப் படி மாணவர்கள் அழைத்து வரப்பட்ட வேளை, திடீரென எந்த அறிவிப்பும் இன்றி சிங்கள மாணவர்கள் கண்டிய நடனத்தை அங்கு கொண்டு வந்து ஆடினார்கள்.

இதனால் கொதிப்படைந்த தமிழ் மாணவர்கள் முன் னறிவிப்பு ஏதுமின்றியும், நிகழ்ச்சி ஒருங்கமைப்புக்கு மாறாக எவ்வாறு கண்டி நடனம் கொண்டுவரப்பட்டது என சிங்கள மாணவர்களிடம் கேட்டனர்.

இதன்போது வாக்கு வாதம் முறுகல் நிலைக்கு செல்ல இரு தரப்பும் கைகலப்பில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவங்களை அடுத்து இருதரப்பு மாணவர்களும் கற்களாலும், கொட்டன்களாலும் தாக்குதலில் ஈடுபட, பல்கலைக்கழகமே கலவர பூமியாக காணப்பட்டது.

இதன் காரணமாக பொலிஸார் சம்பவவிடத்திற்கு வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்த சம்பவங்களை யடுத்து பல்கலை மாணவர் ஒன்றிய தலைவர் சிசிதரன் பொலிஸாரால் கைது செய்யப்படுவதற்கு தேடப்பட்ட நிலையில், அவர் நீதிமன்றில் சரணடைந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே மேலும் 3 மாணவர்களுக்கு யாழ். மேல் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. (செ-4)


# B.A 1st YEAR (G.A.Q) 2016

## பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- மேற்படி பல்கலைக் கழகத்தினால் 1ஆம் ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L-ல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- A/L 2014 / 2015ம் இதற்கு முன்னர் பரீட்சை எடுத்த மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- புதிய பிரிவுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
- பதிவு முடிவுத் திகதி :- 25.08.2016 வரையாகும்

குறிப்பு :- இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் B.B.A (MANAGEMENT) B.COM இவற்றுக்குரிய பதிவுகளும் விரிவுரைகளும் ஆரம்பமாகிவிட்டன.

**கவனிக்குக :- விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்கட்கான தங்குமிடவசதி இலவசம்**

விபரங்கட்கு : S.அருள்நங்கை (நிர்வாகி)

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

T.P No :- 021 222 8148
021 568 9477
077 846 9721

(சி-5476)


## காணாமல் போனோர் அலுவலகம்...

மாகாணரீதியில் நடைபெற்ற கருத்து பகிர்வு இன்னும் முடிவுறாமல் அதன் அறிக்கை இன்னும் சமர்ப்பிக்க பட்டாத நிலையில் உள்ளது.

இருந்தும் அரசாங்கம் மிக விரைவில் காணாமல் போனோர் அலுவலகம் சம்மந்தமான சட்டமூலத்தை பாதிக்கப்பட்ட மக்களின் மற்றும் அது சம்மந்தமாக இயங்கும் அமைப்புகளின் கருத்து எதுவும் உள்வாங்கப்படாமல் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது மிகவும் வேதனை அளிக்கிறது.

ஏற்கெனவே பரணகம காணாமல் போன அலுவலகம் இந்த வருடம் கடந்த மாதம் வரை பதிவுகளை மேற்கொண்டு தற்பொழுது அறிக்கையை புதிய ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்கள்.

ஆனால் கடந்த வருடம் ஜெனிவா கூட்டத்தொடரில் நிராகரிக்கப்பட்ட இந்த பரணகம அலுவலகத்தினை இயங்க அனுமதி அளித்த இந்த அரசாங்கம் மேலும் கால இழுத்தடிப்புக்கும் குற்றம் இழைத்தவர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே இதனை திட்டமிட்டு செய்து வருகிறது.

அவர்களினால் பெறப்பட்ட 24 ஆயிரம் முறைப்பாடுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் ஏதும் விசாரணையை நடத்தி ஒரு நபரை கூட கண்டுபிடித்தார்களா? என்று கேள்வி நிலையிலேயே உள்ளது.

அவ்வாறான நிலையில், மீண்டும் அப்படிபட்ட எந்த ஒரு பிரயோசனமும் இல்லாத சட்டமூலம் உருவாக்கப்பட்டு மீண்டும் மீண்டும் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என போராட்ட ஏற்பாடாளர்கள் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்துள்ளனர். (செ-4)


## பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

# B.A 1st Year (G.A.Q) - 2016

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் முதலாம் ஆண்டுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L 2014ஆம் ஆண்டிற்கு முன்னர் பரீட்சை எடுத்து மூன்று பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க தகுதி உடையவர்.
- பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக நடைபெறும்.
- விண்ணப்ப முடிவுத் திகதி - 25.08.2016
- புதிய ஆண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

(C-5479)

**நாவலர் பட்டப்படிப்புக் கல்லூரி**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P 077 469 6695, 075 204 0061



**18.08.2016 அன்று 60 அகவை காணும் திரு.க.அருந்தவபாலன் (ஓய்வுநிலை அதிபர் யா/டிறிபேர்க் கல்லூரி) அவர்களை பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.**

# திரு. கந்தையா அருந்தவபாலன்

அறுபதிலே தடம்பதிக்கும் குருமுதல்வா வாழிய நீர்
இருபதுபோல் இளமையுடன் சுறுசுறுப்பாய் பணியாற்றும்
அருந்தவ மாய்ப்பிறந்தவரே பெருந்தகையே நீர்வாழ்க!
நறுந்தமிழாய் நானிலத்தில் புகழுடனே நீர்வாழ்க...!

நிறைவான முதல்வருக்கு இலக்கணம் கொண்டீர்
குறைவான வளங்களுடன் உயர்வினைத் தந்தீர்
முறையான துறைசார்ந்த அறிஞர் கூட்டம் என்றும்
கறைகாணா கடமைசெய்து உயர்ந்தே நின்றீர்...!

நரைகாணா இளமையிலே சிறந்த சேவை பின்னர்
விரைவாகி வயது ஓட தளர்ந்து ஓயும் சில
அரைஞான அரசாங்கப் பேர்வழியாய் அன்றித்தாங்கள்
கரைகாணா அலையினைப்போல் ஓயாதுழைத்தீர்

நிறைவாக சிரந்தாழ்த்தி வாழ்த்துகிறோம் நினதுபணி
குறையாத செல்வமுடன் உயர்வுடனே வாழும்படி
இறையோனை வேண்டிநின்றோம்! மறையாது புகழுமினி!
முறையாகத் தடம்பதிப்போம் எந்நாளும் உனதுவழி!




வாழ்த்துவோர் :-
திரு. திருமதி கோகுலன் குடும்பம்
திரு. திருமதி ஸ்ரீகணேசன் குடும்பம்
திரு. திருமதி மதீஸ்வரன் குடும்பம்
திரு. திருமதி சிவஅன்பு குடும்பம்

(5626)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.